Registered as a News Paper

பக்கம் - 24

# ஈழநாதம்

விலை: 16.00

வெள்ளிநாதம் Weekly

நாதம் - 15 வெள்ளி - 41 10 - 16 - டிசம்பர் - 2004




## பயிற்சி நிறைவில் தேசியத்தலைவர்



## வெள்ள நிவாரணம் கிடைக்குமா..?



## சந்திரிகா என்ன நினைக்கிறார்?



## சண்டையா...? சமாதானமா...?

## படித்ததில் பிடித்தது

### அங்கோலா நாட்டுக் கவிதை

### கினக்ஸிலி

புழுக்கமாயிருந்தது
அந்த மாலைப்பொழுது
ஆறு மணியிருக்கும்
கினக்ஸிஸியிலிருந்த
வாங்கொன்றில் அமர்ந்திருந்தது
எனக்கு மகிழ்வாயிருந்தது
தனியாக
அங்கே அமர்ந்திருந்தேன்
யாராவது வரக்கூடும்
என்னருகே அமர...

அவசரமெதுவுமில்லாமலே
நகர் நோக்கிச் செல்வோரின்
கறுப்பு முகங்களை
நான் காண்கிறேன்
தெளிவின்றி
அவர்கள் கதைத்துச் சென்ற
கிம்புண்டு மொழியிலே
இல்லாமை பற்றிக் கூறியபடி...
பெரும் மகிழ்ச்சியையோ
கடும் வெறுப்பையோ
தேடாமல்
தாங்கள் குடித்துத் தீர்க்கும்
மதுவகைகள் தருகின்ற
நிறைவுக்கு மேலாக
ஏதாவது கிடைக்குமா
என்றும்
அன்புக்காய் இங்கே...
மகிமையை அங்கே...
என்றும்

தேடுகின்ற கூலிகளின்
களைத்துப்போன காலடிகளை
நான் காணுகின்றேன்
அவர்களுடைய தந்தைமாரும்
கூலிகளாகவே இருந்தார்கள்

சூரியன் மறைந்துபோக
வெளிச்சங்கள் ஏற்றப்படும்
களைத்துப் போய் விட்டாலும்
இன்னும்
நடக்க வேண்டியிருப்போரின்
வாழ்க்கை எளிமையானது
மிக எளிமையானது
என்று எண்ணியபடி
மெது மெதுவாய்
நடக்கத் தொடங்குவேன்.

#### கவிஞர் பற்றி

1922 இல் அங்கோலாவில் பிறந்தார். லிஸ்ப் பனில் மருத்துவம்பயின்று, மருத்துவப்பணியாற்றவென அங்கோலா திரும்பினார். அங்கோலாவின் சுதேசியக் கலாசாரத்தை மீளக் கண்டுபிடிக்கும் இயக்கத்தில் விறியாட்டோ டாகுறுாஸ் – உடன் இணைந்து செயற்பட்டார். 1960 இல் அங்கோலா விடுதலை இயக்கத்தின் தலைவராகத் தெரிவானார்.1962இல் கைது செய்யப்பட்டு போர்த்துக்கல்லில் சிறையிடப்பட்டு சனநாயக எதிர்ப்பியக்கத்தின் உதவியுடன் அங்கிருந்து தப்பினார். போர்த்துக்கேய, அங்கோலா ஏடுகளிலும் அண்றாடோவின் தொகுப்புகளிலும் கவிதைகளை வெளியிட்டுள்ளார்.

ஆங்கிலத்தில் : அகொஸ்ரின் ஙேறா நேற்ரோ
தமிழில் : வின்சன்ற் புளோறன்ஸ்

## கார சாரம்

அயலில் உள்ளவர்கள் வீட்டில் ஒரு புதிய குழந்தை பிறந்து விட்டது. "தாயும் பிள்ளையும் சுகமாப் பிரிஞ்சாச்சரி ஏதோ கடவுள் விட்டவழி பெத்துப்பிளைக்கிறதும் சரி செத்துப் பிளைக்கிறதும் சரி" இது வயோதிபர்கள் கூற்று."என்ன, ராசண்ணைக்குப் பொடியன் பிறந்திருக்காம்" "இது நல்லகதை சுமந்து கஷ்டப்பட்டுப் பெத்தது ஆரோ ராசண்ணைக்கே பிறந்தது"

இது இளவட்டங்கள் கூற்று. "மெய்யே ராசண்ணை மோனுக்கு என்ன பேர் வைக்கப்போறியள்." "ம் டானா டாவன்னா டீனா டோவன்னா எண்டு நட்சத்திர எழுத்துவருது. 'டிலுசன்' எண்டு வைக்கப்போறம்".

"டிலுசன் 'எண்டா என்ன அர்த்தம்..." "டிலுசன் எண்டது என்ன மொழி" "பேசாம ஆடுமாடுகளுக்குப் போல குறிசுட்டு விடலாம்...அல்லது நம்பரக் கட்டிவிடலாம். பேர் தேடுறது அவ்வளவு கஷ்டமாகப் போய் விட்டது.

உலகத்திலேயே இரண்டு மொழிகளில் கையொப்பம் இடும் இனம் தமிழினம்தான் ஆர். செல்வம், கே.வீரன் என்று தலையெழுத்தை மொழிமாற்றிக்கொண்டு தமிழனின் நாம் எமது வரலாற்றுச் சின்னமாக எதைக் கொண்டுள்ளோம் ஒருவருடைய பெயரை வைத்து அவரது நாட்டைக் கூறிவிடலாம். குடும்பப் பெயர்களைப் பெயருடன் கொண்டுள்ள எத்தனை மனிதர்கள் தமது குலம்விளங்க வாழ்கிறார்கள், உதாரணமாகப் பாருங்கள். சும்ஷாங், ஷங்காய், சேதுங் என்ற பெயர்கள் சீனாவுக்குச் சொந்தமானவை கலாஸினிக்கோவ் அந்தரக்கோவ், பூட்கின், மகரெங்கோவ் இப்பெயர்கள் ரஷ்யாவுக்குரியவை, பகத்சிங், மன்மோகன்சிங், ஜெயில்சிங் என்பவை பஞ்சாப்புக்குரியவை சுந்தரராவ், ரங்கா ராவ். ராமராவ் இவை ஆந்திராவுக்குரியவை. ஜயரட்ண, திஸ்ஸநாயக, தர்மபால என முடிவுறாப் பெயர்கள் சிங்களத்துக்குரியவை- தமிழருக்கும் தனிப் பெயர்மரபுண்டு, இதைவிட்டு இரவல் நாட்டுக்கும், இரவல் பெயருக்கும் இரந்து நிற்கும் இனமா நாங்கள். இவை எல்லாவற்றையும்விட நாம் இப்படிச் செய்வதால் மாபெரும் வரலாற்றுத் தவறையும் விடுகிறோம். இப்போதெல்லாம் தொல்லியல் ஆய்வுகளைச் செய்து அறிக்கை சமர்ப்பிக்கிறார்கள். கட்டட அமைப்புகள், கல்வெட்டுகளின் சொற்கள் பெயர்கள், கோட்டை காரருக்குரிய, நிலம் என்பதை எவ்வித சந்தேகமுமின்றி கூறிவிடலாம். உங்களுக்குத்தெரியுமா? நீர்கொழும்பு, அனுராதபுரம், களுத்தாவ போன்ற இடங்களில் தற்போது வாழ்கின்ற சிங்கள, கிறிஸ்தவ, பௌத்த மக்களின் மூன்று தலைமுறைக்கு மேற்பட்டவர்கள் தன பாலசிங்கம், வேலுப்பிள்ளை, கந்தையா, சுந்தரம், மாணிக்கம் ஆகியோர்தான் என்பது. இதே போன்று இன்று வெளிநாடுகளில் வாழும் குழந்தைகள் தமது மொழியே தெரியாதவகையில் வளர்க்கப்படுபவர்கள் பின்நாளில் எப்படித்தமது பேரன் பூட்டன் ஆகியோரின் பெயர்கள் மயில்வாகனம், சுந்தரலிங்கம் தம்பையா என்று வருகிறது என முடியைப் பிய்த்துக்கொள்ளப் போகிறார்கள். "இனியவை உளவாக இன்னாத கூறல் கனியிருப்பக் காய் கவர்ந்தற்று."

அழகான எளிமையான வீரம்செறிந்த தமிழ்ப்பெயர்கள் இருக்க அர்த்தமற்ற பெயர்களைப் பிள்ளைகளுக்குச் சூட்டிஅதை உச்சரித்து மாயும் அறியாமையை என்னென்பது. தமிழ் மட்டுமே தெரிந்தாலும் ஆங்கிலத்தில் கையொப்பமிடுவதைக் கைவிடாத அடிமை நிலையை என்செய்வது.

நாம் தமிழர் என்று கூற வெட்கப்படும் தமிழர்கள் இன்று கொழும்பில் வாழ்கிறார்கள். இலங்கையில் அதுவும் தமிழீழப் பகுதியில் தங்கிநிற்கும் எந்த

# ஏனிந்த அந்நிய மோகம்...?

தலையெழுத்தையும் மாற்றிவிடுகின்றனர். அண்மையில் ஒரு மேடை நிகழ்ச்சியில் குழுநடனம் நடைபெற்றது. அறிவிப்பாளர் ஆடியவர்களின் பெயரை வாசித்தார். ப்ரீதி, தம்மிகா, நிசாந்தி, டிலக்சி, க்ருஷிகா, ரஜிதா இவர்களுடைய பெயர் தமிழா, ஆங்கிலமா, இசுலாமா? இந்தியா? சிங்களமா? தேடித்தான் பார்க்கவேண்டும். ஆண்களும் அப்படியே இந்துசன், ஆகாஷ், பிரகாஷ் டினோ, மாத்திஜினு, நீங்களும் அயலில் கவனித்துப் பாருங்கள் தமிழ்ப் பெயர்களா இவை. என்பிள்ளைக்கு ஆங்கிலம்தான் தெரியும், அக்காவின் மகள் ஜெர்மன் தான் படிக்கிறாள். மாமாவின் மகனுக்கு பிரெஞ்சுதான் புரியும். நாங்கள் பிள்ளையளக் கலம்பில விட்டுத்தான் படிப்பிக்கப்போறம். யவ்னா கெட்டுப் போச்சு என்று பேசுவதைப் பெருமையாகக் கருதுகிறோம். இதையே ஆங்கிலமொழி மோகம் அயல் நாட்டுக் கவர்ச்சியாக எடுக்கலாமா? இன்றைய இளைஞர்கள் அணியும் உடை, தொப்பி, ரீசேட் என்பவற்றில் அந்நிய நாட்டுக் கொடி பொறிக்கப் பட்டிருக்கிறது. ஒரு காலத்தில் நம்மை அடக்கியாண்டதுடன், எம்மைத் தொடர்ந்தும் சிங்கள அரசுக்கு அடிமையாக்கிவிட்ட நாடுகளின் கொடி எம்மை, எமது வாகனத்தை அலங்கரிக்கிறது. அதை அந்த அவமானச் சின்னத்தை அந்த நாடுகளிலிருந்து கொண்டுவந்து உடலில் சுமந்து செல்கிறோமே. அந்த நாட்டவர் யாராவது எமது சின்னங்களைத் தாங்கிச் செல்கிறார்களா என்பதை யாராவது சிந்தித்துப் பாருங்களேன். எமக்கென ஒரு நாடு வேண்டும் என்பதற்காக குருதி சிந்திப்போராடும்

அழிவுகள், ஈமத்தாழிகள், கிணறுகள். எனவும் பயன்படுத்தப்பட்ட சட்டி பானைகள், மண்சிற்பங்கள் என்பவை, மண்டையோடுகள் போன்றவற்றைக் கொண்டு அங்கு வழ்ந்தமக்களை இனங்கண்டு கூறமுடிகிறது. பழங் காலத்தில் ஒரு புனிதநாள் அனுஷ்டிக்கப்பட்டுவந்தது. ஒரு புகழ் பெற்றவர் இறந்துபோனால் அவரது விருதுகள், பட்டயங்கள், வீரவாள், பாவனைப் பொருட்கள் எல்லாவற்றையும் அவருடன் புதைத்துவிடுவது. போரரசர்கள் கல்வெட்டு நடுகையின் போதும் இப்படியான புதைப்புகளைச் செய்துள்ளனர். அவ்வகையில் மன்னர்களின் புதையல்கள் மட்டுமன்றி, மக்கள் சார்ந்த புதையல்களும் வெளிவந்துள்ளன. காடன் மகன் மாலியின் கடைமகவுப்பேத்தி சேத்தியின் உடைமையைக் குறித்து ஒரு செப்புப்பட்டயம் கிடைத்தது. சரி- இப்போதும் ஒல்லாந்த காலத்து உலாந்தா முறையில் யாழ்ப்பாணக் காணிகளின் தாயுறுதி பற்றிய தோம்புகளில் வம்ச விருத்தியும் அறியக் கிடக்கிறது. இது எமது பாரம் பரியத்துக்கு ஒரு எடுத்துக் காட்டுத் தான். இன்றைய தமிழீழத்தின் பின்னால் வரப்போகும் ஒரு காணிப்பிரச்சினைபற்றிப் பார்ப்போம். ஒரு வேற்றாள் காணிக்கு உரிமை கேட்கிறார்- எனவே அப்பகுதி முழுவதையும் யாருடைய வாழ்விடம் என ஆய்வு செய்யப்புகுவோம். உறவு என உரிமை கேட்பது வழுதி- என்பவர். வழுதியின் தாய் டிசாந்தி தந்தை தினுசன்- அவர்களின் தந்தை வழிப்பெற்றார் சுரேஷ், ஷாமினி, அதற்குமேல் தலைமுறை தேடப்படுவதில்லை. இது யாரோ வட நாட்டுக்

நாட்டவரும், ஏன் எந்த இனத்தவரும், தமிழைப் பேசுவதை பெருமையாய் கொள்ள முன்வருவார்களா? அவர்களைப் பொறுத்தவரை நாம் தங்களிடம் இரந்து நிற்பவர்கள் என்ற கருத்துத்தான் இருக்கிறது. தமிழன் ஆங்கிலத்தை அப்படியா கற்றிருக்கிறான். ஆங்கிலேயனே பாராட்டும்படி கற்று அந்த மொழியிலேயே வாழவும் செய்கிறான்.

எந்த உலகிலிருந்தாலும் இன்று தமிழனுக்கு ஒரு பெயர் இருக்கிறது.அது "புலி" ஒரு காலத்தில் "நாய் " என மதிக்கப்பட்டவன் தமிழன், சிங்களவர்களால் 1958 இல், 1977இல்,1981இல், 1983இல் எனப் படுகொலைகளை செய்து தமிழர் விரட்டப்பட்டபோது தமிழர்களை 'பள்ளா' என்றுதான் சொன்னார்கள். இன்று அங்கும் தமிழர்களைப் புலி என்றுதான் சொல்கிறார்கள். இன்று தமிழனென்றால் வீரம், தமிழனென்றால் விறல், தமிழனென்றால் பெருமை, தமிழனென்றால் உறுதிக் கனல் என்றொரு பெருமையைத் தலைவரும் மாவீரர்களும் உருவாக்கித்தந்துள்ளனர்.

இந்தப் பெருமையில் உங்களுக்கும் உரித்துண்டு, நீங்கள் தமிழராகவிருப்பதால், பிறகு ஏன் வேற்றுப் பெயர்களில் நாட்டம். சொந்த மொழியில் அழகு தமிழில் பிள்ளைகளை அழையுங்கள்- பழகு மொழிகள் பலதையும் கற்பியுங்கள். வழிதவறிய குடும்பம் என்ற வரலாற்றுத் தவறைச் செய்யாதீர்கள். தமிழ்ப் பிள்ளைகளைப் பெற்றெடுங்கள்- கலப்பினம் வேண்டாமே;

மாயா

# சந்திரிகா என்ன நினைக்கிறார்?

நிலாந்தன்

மாவீரர் நாள் உரைக்கு முன், பின் என்று பிரித்துப்பார்த்தால் கொழும்பிலிருந்து காட்டப்படும் சமிக்ஞைகளில் பெரிய வித்தியாசங்கள் இருப்பதாக தெரியவில்லை. கடந்தவாரம் இலங்கைக்கான நோர்வேத்தூதுவர் ஹான்ஸ் பிரஸ்கர் கிளிநொச்சிக்கு வந்தபோது புலிகள் தமது நிலைப்பாட்டில் விட்டுக்கொடுப்பின்றியிருப்பது தெரிவிக்கப்படுகிறது. நிலைமைகள் இப்படியே போனால் அடுத்த மாவீரர் நாளுக்



கிடையில் நாடு ஒரு யுத்தத்திற்குள் திரும்பிச்சென்றுவிடுமா? என்ற கேள்வி பரவலாக எழத்தொடங்கிவிட்டது.

இத்தகைய ஒரு பின்னணியில் இனிச் சந்திரிகா எடுக்கப்போகும் முடிவுகளே புதிய திருப்பங்கள் எதையாவது கொண்டுவரலாம் எனும் ஒரு நிலை. இந்நிலையில் இப்பொழுது சந்திரிகா என்ன நினைக்கிறார் என்பது முன்னெப்பொழுதையும்விட அதிக முக்கியத்துவம் உடையதாக மாறியிருக்கிறது. எனவே சந்திரிகாவின் மன ஓட்டத்தைக் கண்டு பிடிப்பதே இன்று இப்பத்தியின் நோக்கமாக இருக்கிறது.

முதலாவதாக, ஒன்றைக் கவனிக்க வேண்டும். சந்திரிகா தன்னைப் படிப்படியாக பலப்படுத்திவருகிறார். அவருடைய கூட்டு முன்னணிக்குள்ளும் எதிர்க் கட்சிகள் மத்தியிலும் அவருக்கு சவாலாக நிற்கக்கூடிய தலைமைத்துவப் பண்புகளோடு வேறுயாரும் இருப்பதாகத் தெரியவில்லை. வேண்டுமானால் அவருடைய கட்சிக்குள் மகிந்த ராஜபக்ஷவையும் யு.என்.பிக்குள் கருஜெயசூரியவையும் ஓரளவுக்கு சொல்லலாம். ஆனால் இவர்கள் இருவரும் கூட சந்திரிகா வழிவிடும்வரை காத்திருக்கவேண்டிய இரண்டாம் நிலைத் தலைவர்கள்தான். சந்திரிகாவை கவிழ்க்கும் அளவுக்கு சக்திமிக்கவர்களாக இவர்கள் தங்களை இதுவரை நிரூபித்திருக்கவில்லை. அவர் எதற்கு தலைமை தாங்குகிறார் என்ற விவாதத்தில் இறங்குவது இன்று இப்பத்தியின் நோக்கமல்ல. மாறாக, அவரிடம்தான் தலைமைத்துவப் பண்புகள் நல்லதாகவோ கெட்டதாகவோ செறிவாகக் காணப்படுகின்றன என்பது இன்று கொழும்பின் களயதார்த்தமாக இருக்கிறது என்பதைத்தான் இப்பத்தி சுட்டிக்காட்ட முயல்கிறது.

இப்பத்தியில் ஏற்கனவே சில தடவைகள் சொல்லப்பட்டதுபோல இப் பிராந்தியத்திலேயே இத்தகைய கதம்பமான தலைமைப் பண்புகளை உடைய துருத்திக்கொண்டு தெரியும் பெண் ஆளுமைகள் இரண்டு. ஒன்று சந்திரிகா மற்றது ஜெயலலிதா. இருவருமே இதோ சரியப்போகிறார்கள் என்று எதிர்பார்க்கப்படும் காலங்களில் யாரும் எதிர்பாராவிதமாக எதையாவது அதிரடியாகச்செய்து அல்லது அடிப்படை அரசியல் நாகரிகத்துக்குப் புறம்பாக ஏதும் சூழ்ச்சிகளையாவது செய்து எப்படியோ மேலே மிதந்து வந்துவிடுகிறார்கள்.

தமிழ் நாட்டில் அண்மைக் காலங்களில் ஜெயலலிதா செய்துவருபவற்றை தொகுத்துப்பார்த்தால் இது தெரியவரும். தி.மு.கஅங்கம் வகிக்கும் சோனியா தலைமையிலான காங்கிரஸ் கட்சி ஆட்சிக்கு வந்தவுடன் ஜெயலலிதாவின் நாட்கள் எண்ணப்படும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் ஜெயலலிதா சோர்ந்து பின்வாங்கவில்லை. முதலாவதாக அவர் சோனியாவுடனான பகையை தவிர்க்கும் வகையில் ஒரு பெரிய குத்துக்கரணம் போட்டார். இரண்டாவதாக சாதாரண சனங்களை வசப்படுத்தும் விதத்தில் அவர்களுக்கு எதிராகக் கொண்டு வந்த புதிய நடைமுறைகளைப் படிப்படியாக விலக்கினார். இதன் பின் "வீரப்பன் வதம்'', சங்கராச்சாரியார் கைது மற்றும் திருட்டு CDக்களுக்கு எதிரான கடும் நடவடிக்கைபோன்றவற்றுக்கூடாக ஏற்கனவே சரிந்து விழுந்துகொண்டிருந்த தனது புகழை திரும்பவும் தூக்கி நிறுத்தும் முயற்சிகளில் படிப்படியாக முன்னேறத்தொடங்கிவிட்டார் என்றே சொல்ல வேண்டும்.

சந்திரிகாவும் இப்படித்தான் கடைசியாக நடந்த பொதுத்தேர்தலின் பின்னிருந்த சந்திரிகாவல்ல இப்பொழுது இருப்பது. கடந்த சுமார் ஏழுமாத காலத்துள் அவர் தன்னைப்படிப்படியாக பலப்படுத்தியே வந்துள்ளார்.

முதலாவதாக அவர் ஹெல உறுமய பிக்குகளை விலைக்கு வாங்கினார். பின்னர் தேவையேற்பட்டபோது ஜே.வி.பியை ஏவி அவர்களை அடித்துநொருக்கினார். ஏழுமாதங்களுக்கு முன்பு திமிறிக்கொண்டிருந்த ஹெல உறுமய இப்பொழுது பெருமளவுக்குப் படிந்துவந்துவிட்டது. இரண்டாவதாக அவர் முஸ்லிம் காங்கிரஸ்சை உடைத்தார். அதிலும் குறிப்பாக ஹக்கீமின் தனிப்பட்ட பாலியல் பலவீனத்தை அரசியல் ஆக்கினார். அடுத்த கட்டமாக தொண்டமானை விலைக்கு வாங்கினார். இப்பொழுது யு.என்.பியை உடைக்கத்தொடங்கிவிட்டார். ரணில் பூப்பறித்துக்கொண்டிருக்கும்வரை சந்திரிகா யு.என்.பி யை உடைத்துக்கொண்டேயிருப்பார். இடையில் ஜே.வி.பி சற்று முறுகியது. ஆனால் அதை அவர் பொருட்படுத்தவில்லை. பெரியளவு உணர்ச்சிவசப்பட்டு காரியங்களை கெடுத்துக்கொள்ளவுமில்லை. மிகவும் பொறுமையாக நீண்ட கால நோக்கோடு அவர் ஜே.வி.பியை சகித்துக் கொண்டு வருகிறார். ஏதோ சிறுவர்களைக் கையாள்வதுபோல.

இப்படியாக கடந்த ஆறுமாத காலத்துள் அவர் தன்னைப் படிப்படியாக பலப்படுத்திவருகிறார். இனி அவர் சபாநாயகரில் கைவைக்கக்கூடும். ஆனால் அதிலும் அவசரப்படுவதாகத் தெரியவில்லை என்று ஒரு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எம்.பி. சொன்னார்.

இப்படியே போனால் ரணில் விக்கிரமசிங்க கட்சிக்குள் தனது தலைமையை பாதுகாப்பதற்கும் தமது உறுப்பினர்கள் கட்சிதாவுவதைத் தடுப்பதற்காகவும் வருந்தி உழைக்கவேண்டி வரலாம்.

சமாதானத்தின் வழியில் சந்திரிகாவை ஊக்குவிக்கும் விதமாக அவருக்கு எதிராக பெரிய எதிர்ப்பு இயக்கம் எதையும் செய்யவேண்டாம் என்று சில வெளிநாட்டு ராஜதந்திரிகள் கேட்டுக்கொண்டதற்கு இணங்க ரணில் நிலைமைகளைக் குழப்பாது இருந்ததாகவும், ஆனால் இக்காலப்பகுதியிலேயே அவருடைய கட்சி ஆட்களை கழற்றி எடுக்கும் வேலைகளை சந்திரிகா செய்துவருவது தெரியவந்ததும் அவர் சந்திரிகாவுக்கு வழங்கிவந்த ஒத்துழைப்பைக் கைவிடத் தீர்மானித்ததாகவும் ஒரு கதை கொழும்பில் உண்டு. இது விசயத்தில் அவருக்கு ஆலோசனை சொன்ன வெளிநாட்டு ராஜதந்திரிகள் சந்திரிகாவின் சூழ்ச்சிகள் வெளியரங்கமானபோது பேசாமல் இருந்ததோடு, அரசாங்கம் பலமடைந்து வருவது கண்டு அதை வாழ்த்துவதற்கு முன்நிற்பதாகவும் ஒரு தகவல் உண்டு.

முன்பும் ஒருதடவை யசூசி அகாசி, நிருபன்சென் போன்றோருக்கூடாக சந்திரிகா தந்த வாக்குறுதிகளை நம்பி ஏமாந்த ரணில் பிறகுமேன் இந்த ராஜதந்திரிகளை நம்பினார்? அல்லது சந்திரிகாவுக்கு எதிராக அவர் சில வாரங்களுக்கு முன்பு வெற்றிகரமாகத்தொடங்கிய சட்டிபானைகளுடன் தெருவில் இறங்கும் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்லத்தேவையான ஒரு அரசியல் பாரம்பரியம் அவரிடம் இல்லை என்பதா? அல்லது அவரால் சந்திரிகாவின் சூழ்ச்சிகளுக்கு முன்னால் நின்றுபிடிக்க முடியவில்லை என்பதா? எது மெய்?

இத்தகைய ஒரு பின்னணியில் முக்கியமான ஒரு விசயத்தை நாம் அடையாளம் காணவேண்டும். அதாவது ரணில் அரசாங்கம் கலைக்கப்பட்டபோது பெருமளவிலும் அதற்கு முன்பு குறிப்பிடத்தக்க அளவிலும் கொழும்பில் நிலவிவந்த தலைமைத்துவ வெற்றிடம் அல்லது அதிகார இழுபறி எனப்படுவது இப்பொழுது ஒப்பீட்டளவில் குறைந்துகொண்டு வருகிறது என்பதே.

இப்படியே சந்திரிகா தன்னை பலப்படுத்திக்கொண்டுவரும் போக்கின்படியே அதற்கேயான நிகழ்ச்சி நிரலின்படியே சமாதானத்தைப் பற்றிய அல்லது யுத்தத்தைப்பற்றிய அவருடைய அணுகுமுறையும் இருக்கும். அதாவது அவர் தன்னைப் பலப்படுத்துவதற்கு எது அதிகம் உதவக்கூடியது யுத்தமா அல்லது சமாதானமா என்று தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. சிலசமயம் இதில் அவர் ஏற்கனவே தீர்மானங்களை எடுத்து விட்டிருக்கவும் கூடும்.

ஆனால் இப்போதைக்கு யுத்தமும் இல்லாத சமாதானமும் இல்லாத ஒரு நிலையே அதாவது இப்போது நிலவும் இரண்டுங்கெட்டான் நிலையைப்பேணவே அவர் விரும்புகிறார் போலத்தெரிகிறது.

மேற்கு நாடுகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான ராஜதந்திர நெருக்கம் காரணமாக புலிகள் உடனடியாக யுத்தத்திற்குத் திரும்பும் களயதார்த்தம் இல்லை என்று அவர் நம்புவது போலத் தெரிகிறது. புலிகள் உடனடியாக மீண்டும் போருக்குத் திரும்புவதை தடுக்கும் விதத்தில் அவர்களின் மீது செல்வாக்கைப் பிரயோகிக்கக்கூடிய அளவிற்கு மேற்கு நாடுகளுக்கும் புலிகளுக்கும் இடையிலான நெருக்கம் அதிகரித்துவருவதாக அவர்நம்புவதும் தெரிகிறது.

ஒரு புறம் இந்த நெருக்கம் அவருக்கு எரிச்சலூட்டுவதாகவும் அச்சுறுத்தலாகவும் இருக்கிறது. இன்னொரு புறம் இந்த நெருக்கம் காரணமாக புலிகள் உடனடியாகப் போருக்குத் திரும்பமாட்டார்கள் என்ற உத்தரவாதத்துடன் அவர் தன்னுடைய அரசியலை நகர்த்தக் கூடியதாகவும் இருக்கிறது.

அவர் தன்னை பலப்படுத்துவதற்கு தற்சமயம் நிலவும் இரண்டுங்கெட்டான் நிலை அதிகம் வசதியாய் இருக்கிறது. இப்படியொரு தளம்பலான அரசியல் சூழ்நிலைக்குள்தான் கடந்த சுமார் ஏழுமாதகாலமாக அவர் தன்னை பலப்படுத்திவந்துள்ளார். இனியும் அவர் விலைக்கு வாங்கக்கூடியவர்களை விலைக்கு வாங்கி செய்யக்கூடிய சூழ்ச்சிகளையெல்லாம் செய்து ஆட்சி அதிகாரத்தில் தொடர்ந்தும் இருக்கத்தக்கதாக அரசியலமைப்புக் குறுக்கு வழிகள் எதையாவது கண்டுபிடிக்கும்வரை இப்போதுள்ள இரண்டுங்கெட்டான் நிலையே அவருக்கு அதிகபட்சம் உதவிகரமானது. எனவே இதைப்பேணும்விதத்தில் ஏதும் விட்டுக்கொடுப்புக்களை அல்லது சுதாகரிப்புக்களைச்செய்ய அவர் முயலக்கூடும்.



ஆனால், அவருக்குத்தேவையான அரசியலமைப்புக் குறுக்குவழிகளை கண்டுபிடிப்பது கஷ்டம் என்ற ஒரு நிலை தோன்றினாலோ, அல்லது நாட்டைக் குழப்பினால்தான் தனக்கான வழிகள் திறக்கும் என்று அவர் நம்பினாலோ அவர் ஒரு யுத்தத்தை தொடங்கவே விரும்பக் கூடும்.

அதாவது அவருடைய நிகழ்ச்சி நிரலில் யுத்தம் உடனடியான ஒரு தெரிவாயில்லை. புலிகளை யுத்தத்திற்கு திரும்பி விடாதபடி பார்த்துக் கொள்ளும் வேலையை மேற்கு நாடுகளிடம் கொடுத்துவிட்டு தன்னுடைய தந்திரங்களை சூழ்ச்சிகளை திருகுதாளங்களை மேற்கொண்டு செய்து தன்னை பலப்படுத்த முடியுமா என்று அவர் எத்தனிப்பதுபோலத் தோன்றுகிறது.

அவர் தன்னைப் பலப்படுத்துவதற்கான ஒரு கால அவகாசத்தை பெறும் பொருட்டு, இப்போது உள்ள இரண்டுங்கெட்டான் நிலையைப்பேண விரும்புவது தெரிகிறது. இதன்மூலம் அவர் ஜே.வி.பியைச் சமாளிக்கலாம். யு.என்.பி யைச் சமாளிக்கலாம். ஓரளவுக்கு மேற்கு நாடுகளையும் சமாளிக்கலாம். ஆனால் புலிகளை சமாளிக்கமுடியுமா?

ஏனெனில், ஒரு யுத்தத்தை தீர்மானிப்பது என்பது தனிய சந்திரிகாவின் கையிலும் இல்லை, மேற்கு நாடுகளின் கையிலும் இல்லை என்பதே ஈழப்போரில் இதுவரையிலுமான சமாதான முயற்சிகள் எல்லாவற்றிலிருந்தும் பெற்ற படிப்பினையாகக் காணப்படுகிறது. ●

# நறுக்கென...

## ஆளாய் பறக்கும் சனாதிபதி சந்திரிகா



சனாதிபதி சந்திரிகா அம்மையார் இந்தியா சென்று வந்து சில வாரங்களுக்குள் ஈரானுக்குப் பறந்துபோனார்.

ஈரானில் அவர் நினைத்துப் போன காரியங்கள் கை கூடியதோ இல்லையோ இந்தியாவுக்கு அதிக கற்பனையோடு சுமந்து போன கனவு மட்டும் உடனடியாக கைவரப் பெறவில்லை.

இந்தியாவிலிருந்து அடுக்கடுக்காய் படைத்தளபதிகள் இலங்கைக்கு பறந்து வந்ததோடு, வடகிழக்கு பகுதிகளுக்கு விஜயம் செய்து இராணுவ ஆலோசனைகள், பயிற்சிகள் என வழங்கியதுடன் இதோ முடிந்துவிட்டது இலங்கை - இந்திய பாதுகாப்பு ஒப்பந்தம் என்றவாறெல்லாம் ஊடகங்களில் செய்திகள் சூடாக வெளிவந்தன.

கடைசியாக இந்தியாவுக்கு அம்மணி பறந்துபோக, திரும்பி வரும்போது பாதுகாப்பு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு பாதுகாப்பு ஒப்பந்தப்பெட்டியோடு தான் வருவார் என இங்குள்ள இனவாத, மதவாதப் பேய்கள் எல்லாம் எதிர்பார்த்து காத்திருக்க அம்மையாருக்கு கிடைத்ததோ வெறும் ஏமாற்றம்தான்.

தமிழ் மக்கள் மத்தியிலிருந்து கிளம்பிய பெரும் எதிர்ப்புக்களும் கண்டனங்களையும் அடுத்து இந்தியா இந்த பாதுகாப்பு ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை தள்ளிவைத்தது.

இப்போது இறுதியாகக் கிடைக்கும் தகவல்களின்படி இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதை இந்தியா கால வரையறையின்றி ஒத்திவைத்திருப்பதாக. இது இப்படியிருக்க அம்மையார் அடுத்து கூட்டுறவு ஒன்று தொடர்பாக ஆலோசனைகளை நடத்துவதுடன் அதற்காக அடுத்த வெளிநாட்டு பயணத்துக்கும் தயாராகி விட்டார்.

அம்மையாரின் அடுத்த பயணம் தாய்லாந்துக்கு தாய்லாந்து செல்லும் அம்மணியார் தாய்லாந்து- இலங்கை பாதுகாப்பு கூட்டுறவு தொடர்பாக அந்த நாட்டு பிரதமரான தக்சின் சினவத்திராவுடன் பேசவுள்ளாராம்.

நாட்டில் புலிகளோடு செய்திருக்கும் புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு கேட்டை விளைவித்துக்கொண்டு வெளிநாட்டில் பாதுகாப்பு கூட்டுறவையும், ஒப்பந்தத்தையும் தேடுவது விந்தையாகவுள்ளது.

தாய்லாந்துடன் அம்மையார் பாதுகாப்புக் கூட்டுறவு தொடர்பாக ஆலோசிப்பது புலிகளிற்கு தாய்லாந்து ஊடாகத்தான் ஆயுதங்கள் வருகிறதாம்.

நாட்டில் பிரச்சினையைத் தீர்க்க முழுமனதோடு செயற்பட்டு வெற்றிகண்டால் தாய்லாந்துக்கூடாக என்ன பூகோலத்தில் எந்த மூலையிலிருந்தும் ஆயுதங்கள் வரவேண்டிய தேவையில்லையே

இதெல்லாம் எங்கே புரியப் போகிறது.

சாத்தானுக்கு வேதம் ஓதுவதுபிடிக்குமோ?

---

## புதிதாக ஒன்றுமில்லை மகேஸ்வரா...!



நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் இந்த நாட்டில் கொடுங்கோல் ஆட்சியே நடக்கிறது எனக்கூறியுள்ளார்.

இது இப்போதல்ல 1944 ஆம் ஆண்டிலிருந்தே இலங்கை யில் கொடுங்கோல் ஆட்சிதான் நடக்கிறது என்பது மகேஸ்வரனுக்குத் தெரியாதா?

1956,1977,1983 என தமிழ் மக்கள் மீது அடுக்கடுக்காக வன்முறைக்களை தூண்டி அரசியல் தர்பார் நடத்தும் அரசுகள் என்ன சனநாயக ஆட்சியையா நடத்தினார்கள்.

பல இனங்கள் வாழும் நாட்டில் வேறுபட்ட இனங் களுக்கிடையில் குழு மோதலாக தொடங்கி பெரும் வன்முறையாக மாறியது என அரசு கருதுமானால் இந்த வன்முறைகளை சிங்கள காடையர்களையும், கொலைஞர்களையும் தூண்டியதும் ஏவியதும் நாட்டின் சனாதிபதியாக இருந்தவர்களும் பொறுப்பு வாய்ந்த அரச பொறுப்புக்களில் இருந்தவர்களுமே பின்னின்று முன்நகர்த்தியவர்கள்.

இப்படிப்பட்ட இந்த நாட்டில் தமிழ்மக்கள் பட்டஅவலங்களும், துயரங்களும், எவ்வளவு.

இப்படியிருக்க தமிழ்மக்களுக்கு எதிரான வன்முறைகளைத் தூண்டிய கட்சிகளில் ஒன்றான ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.பி.திசாநாயக்கவை சிறையில் அடைத்ததையடுத்து நாடாளுமன்ற உறுப்பினர் மகேஸ்வரன் இந்த நாட்டில் கொடுங்கோல் ஆட்சிதான் நடக்கிறது என கூறியதுதான் நெருடலாகவுள்ளது.


என்ன செய்வது இதுவும் ஒரு அவுஸ்திரேலிய பழங்குடி மக்கள் பயன்படுத்தும் ஆயுதமான 'பூமராங்' போன்றது தான். தாக்கியவர்களையே திருப்பித் தாக்குகின்றது.

அதெல்லாம் சரி, ஆனால் இலங்கையில் சனநாயகத்தை தேடுவதோ, இப் போது தான் சர்வாதிகாரமும் அராஜகமும் நடப்பது போலவும் காட்டக் கூடாது.

எதற்கும் ஒரு அளவு உண்டு. பாவம் சந்திரிகாதான் என்ன செய்வார் எத்தனை நாளைக்குத்தான் பொறுப்பார்

மகேஸ்வரன் அவர்களே நாடாளுமன்றத்தில் செங்கோலை யாரோ ஒருவர் ஒரு முறைஎடுத்து ஒளித்து வைத்ததுஞாபகம் வருகிறதோ! ஆகக்குறைந்தது அப்போதாவது புரிந்திருக்க வேண்டும். செங்கோல் தேவையில்லை என கருதுகிறார்கள் என்றால் அவர்கள் நாட்டில் எத்தகைய ஆட்சி நடைபெறவேண்டும் என விரும்புகிறார்கள் என்பதை.

## வாய்ச்சவடாலுக்கு குறைச்சலில்லை



நாட்டின் இறைமைக்கு ஏற்படக்கூடிய எந்த அச்சுறுத்தலையும் எதிர்கொள்ள படையினர் தயாராக வுள்ளனராம்,

அத்தோடு படைகளை ஆளணியாலும், ஆயுதவளத்தாலும், உளரீதியாகவும் உயர்ரக ஆயுதங்களாலும் உபாயங்களாலும் வலுப்படுத்திக் கொண்டும் இருக்கிறார்களாம், இலங்கை இறைமை உள்ள நாடு என்றவகையில் இலங்கையை பாதுகாக்க எத்தகைய நடவடிக்கைகளை எடுக்கவேண்டியுள்ளதாம்.

இப்படியெல்லாம் கூறுவது வேறு யாருமல்ல முன்னாள் பிரதமரும் இந்நாள் பிரதிப்பாதுகாப்பு அமைச்சருமான ரட்ணசிறிவிக்கிரமநாயக்க தான்.

அறளை பேந்த வயதில் இந்த அலட்டல் அவரிடம் இருந்து வந்திருக்கிறது.

அதுவும் சரி நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு அமைச்சுக்காக ஒதுக்கப்பட்ட ஏழாயிரத்து அறுநூற்றி இரண்டு கோடியே எழுநூற்றி ஆறு இலட்சம் ரூபா நிதியை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் எதையாவது பேசித்தொலைக்கவேண்டும் தானே.

ஒரு கிழட்டுச் சிங்கம் போக, இப்போது இன்னொரு கிழட்டுச் சிங்கம் வந்திருக்கிறது. அனுருத்தரத்வத்த ஒருவாறு கடற்படைக்கான சேட்டும் தரைப் படைக்கான ஜீன்சும், விமானப்படைக்கான தொப்பியும் அணிந்து முப்படைகளையும் ஒரேபார்வையில் கொண்டு வந்த கோமாளிராசா ஒருவாறு அரசியல் 'ஜெனரல்' பட்டம் வாங்கி சிலகாலம் சிறைச்சாலையில் ஓய்வு எடுத்துக் கொண்டு விட்டார்.

இப்போது ரட்ணசிறிவிக்கிரம நாயக்க தொடங்கியிருக்கிறார். ஜெனரல் ரத்வத்தையின் இடத்தை கொஞ்சமாவது ரட்ணசிறிவிக்கிரமநாயக்க பிடிக்கவேண்டாமா?

அப்படியானால் இப்படித்தான் பேச வேண்டும். ஆனால் சண்டைபிடிக்க படையரங்க முன்னிலைகளில் நிற்கும் சிங்கள சிப்பாய்களிடம் தயாராகத்தான் இருக்கிறீர்களோ என கேட்கவும் வேண்டும்.

ஓயாத அலைகள் 01,02,03 போன்ற படைநடவடிக்கைகளையும், ஜெயசிக்குறு படைநடவடிக்கையும் எல்லாவற்றிற்கும் மேலாக அக்கினிச் சுவாலை இராணுவ நடவடிக்கையையும் எந்த இராணுவ அதிகாரிகளும் எந்த இராணுவ சிப்பாயும் மறக்கமாட்டார்கள். இதனை தற்போதைய பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் ரட்ணசிறிவிக்கிரம நாயக்க நினைக்கவேண்டும்.

ஆகவே இலங்கையில் இல்லாத இறைமையை பாதுகாக்கப் போகிறேன் என்பது சவால்களை சந்திக்க முடியாது திணறிய படையினர் இனிதான் எந்த சவால்களையும் முறியடிக்கப் போகிறார்களா? என்பது ரட்ணசிறி விக்கிரமநாயக்க தெரிவிக்க வேண்டுமானால் சிங்கள மக்களுக்கு அவர் ஒரு திரைப்படத்தின் கதாநாயகன் போல தெரியலாம், ஆனால் தமிழ் மக்களுக்கு ஒருகோமாளியின் பேச்சாகத்தான் தெரியும்.

---

## திசாநாயக்கவுக்கான தண்டனை எப்போதோ முடிந்த காரியம்



முன்னாள் சமுர்த்தி அமைச்சரும் சனாதிபதி சந்திரிகாவின் நம்பிக்கைக்குரிய சகாவுமான எஸ்.பி. திசாநாயக்கவுக்கு உயர் நீதிமன்ற நீதியரசர் சரத் என்டி சில்வா தலைமையிலான ஐந்து பேர் கொண்ட நீதிபதிகள் வழங்கிய இரண்டு வருடகால கடூழிய சிறைத்தண்டனையும், அவரது அரசியல் வாழ்வுக்கு ஏழாண்டு காலத்துக்குப் போடப்பட்டிருக்கும் விலங்கும் எதிர்பார்க்காத ஒரு தீர்ப்புஅல்ல.

எஸ்.பி திசாநாயக்கவுக்கு இதில் வழங்கப்பட்டிருக்கும் தீர்ப்பில் பாதியளவாவது சந்திரிகா அம்மையாரும் அனுபவிக்க வேண்டியது.

எஸ்.பி. திசாநாயக்க கொம்பு சீவப்பட்ட எருமையென்றால் அவருக்கு கொம்பு சீவியவர் சந்திரிகா அம்மையார் தான்.

வளர்த்த கடா மார்பில் பாய்வதாகச் சொல்வார்களே அப்படிப்பட்டது தான் சந்திரிகா திசாநாயக்க விடயம்.

எஸ்.பி. திசாநாயக்கவுக்கும் நீதித்துறைக்குமிடையிலான பிணக்கால் வழங்கப்பட்ட தண்டனையல்ல இது. சந்திரிகாவுக்கும் திசாநாயக்கவுக்கும் இடையில் ஏற்பட்ட பிணக்கும் அதனால் பழிவாங்கப்பட்டார் என்பதும்தான். உண்மை.

கீதையின் படி கூறுவதனால் எஸ்.பி. திசாநாயக்க தொடர்பான தீர்ப்பும், தண்டனையும் "எப்போதோ முடிந்த காரியம்"

அன்று ஒப்புக்கு மேசையிலிருந்து அவருக்கு சம்பிரதாய பூர்வமாக வழங்கப்பட்டது மட்டுமே இத்தீர்ப்பு.

இதற்காக பழிவாங்குவதற்காக எஸ்.பி திசாநாயக்கவுக்கு இத்தீர்ப்பும் தண்டனையும் வழங்கப்பட்டாலும் அவர் ஒன்றும் கறைபடியாத கரங்களுக்குரியவரும் அல்ல. தண்டிக்கப்படக் கூடாதவரும் அல்ல.

சீமான் ஏழைமக்களுக்காக உருவாக்கப்பட்ட சமுர்த்தி நிதியிலேயே பெரும் மாடமாளிகையை நிர்மாணித்தவர்.

ஆனால் என்ன செய்ய சந்திரிகாவுக்கு வேண்டப்படாதவராக போய்விட்டார்.

அத்தோடு கைகட்டிக்கொண்டு அறிக்கை மட்டுமேவிடக்கூடிய ரணிலின் பக்கம் வேறு இருக்கிறார்.

அதெல்லாம் சரி அரசியல் விளையாட்டில் ஆண்டுக் கணக்கில் வழங்கப்படும் சிறைத்தண்டனை நாட்கணக்கில் மாறுவதுண்டு. அப்படி எஸ்.பியால் மாற்றமுடியுமா என்பதை பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்.

வேழினி

சிறிலங்கா காவல்துறை நிர்வாக அடுக்குகளுள் சில புலனாய்வுப் பிரிவுகள் உள்ளன. அவற்றில் குற்றவியல் புலன் விசாரணைத் திணைக்களம் (CRIMINAL INVESTIGATION DEPARTMENT - CID) பழமை வாய்ந்த ஒரு புலனாய்வுப் பிரிவாக இயங்கிவருகின்றது.

அது நாடளாவிய ரீதியில் குற்றச் செயல்களைக் கட்டுப்படுத்தும் குறிக்கோளுடன் செயலாற்றுகின்றது. அதாவது குற்றவியற் செயல்களிலீடுபடும் வகுப்பினரைச் சார்ந்தோர்கள் பற்றிய புலனாய்வுச் செயற்பாட்டிற்குப் பொறுப்பாக இருந்துவருகின்றது.


சி.ஐ.டி யினர் தமிழர் விடுதலைப் போராட்டத்தின் முனைப்பை நசுக்கும் பொறுப்பை 72 பிற்பட்ட காலப்பகுதியில் ஏற்றனர். ஆயினும் தமிழர் ஆயுதப் போராட்டம் வலுப்பெற ஆரம்பித்த 76களில் இருந்து தாயகப் பகுதிகளில் தீவிரமான கவனத்தை செலுத்த ஆரம்பித்தனர்.

இந்தப் பிரிவில் பணியாற்றிய அனுபவம் வாய்ந்த புலனாய்வாளர்களை உள்ளடக்கிய விசேட குழு தமிழ் இளைஞர்களை கைதுசெய்தல், மோசமான சித்திரவதைகளைச் செய்தல், ஒப்புதல் வாக்குமூலத்தைப் பெறல், மர்மமானமுறையில் கொலை செய்தல் ஆகியவற்றைசெய்து வந்தது. அத்தோடு பெண்கள் உட்பட பல தமிழர் உணர்வாளர்களை சிறையில்போட்டது.

அக்காலப்பகுதியில் சி.ஐ.டியினரின் விசாரணைகளின்போது கொழும்பு நாலாம் மாடியில் தமிழர் சுயகௌரவங்களை இழந்தனர். விபரிக்கமுடியாத கொடுமைகளை அனுபவித்தனர். அந்த நாலாம் மாடி சிங்கள தேசத்தின் தமிழர் மீதான அடக்குமுறை குறியீடாக விளங்கியது.

"பகையாளி குடியை உறவாடி கெடு" என்கிற பழமொழிக்கு ஏற்ப தமிழ் உணர்வாளர்கள், புலிகளின் ஆதரவு கட்டமைப்புக்கள் போன்றவற்றினுள் ஊடுருவல்களை மேற்கொண்டு வருகின்றனர்.

இதுபோன்ற புலனாய்வுப் பணிகளை முன்னெடுத்துவரும் இவர்கள் விடுதி முகாமையாளர்கள், கிராமசேவையாளர்கள், கட்சி அமைப்பாளர்கள், முச்சக்கரவண்டி ஓட்டுநர்கள், குற்றச்செயல்களிலீடுபடுபவர்கள், கடத்தல் வியாபாரத்தில் ஈடுபடுபவர்கள்போன்ற மனித வளங்களுக்குள் முகவர்களை அமைத்து புலனாய்வு வலையமைப்பை நிறுவியுள்ளனர்.


வவுனியாவில் புலனாய்வுப் படை குவிப்பு பொது மக்கள் மனங்களில் அச்சம்!

(எழுவான்)

அரசாங்கத்திற்கும், விடு ... தலைப் புலிகளுக்கும் இடையிலான ... புரிந்துணர்வு ஒப்பந்தம் நடை... முறையில் உள்ள இக் கால கட்ட... தில் இலங்கை இராணுவ பொலிஸ் ... புலனாய்வு படையினர் பரவலாக ...

... ளிகள் சாதாரணமாக பொது ... மக்களைப் போன்று வவுனியா நக... ரில் நடமாடுகின்றனர். இவர்களின் நடமாட்டத்தினைக் கண்காணிப்பது டன், போராளிகளுடன் உறவு கொள்ளும் பொது மக்களையும் இராணுவ புலனாய்வுப் பிரிவினர் கண்காணிக்கின்றனர். எதிர் காலத் ...

... காணிப்பு இடம் பெறுவதாக தெரியவருகிறது. வவுனியாவில் புலனாய்வு படைகள் குவிக்கப்பட்டுள்ளார்கள். இவர்களின் வருகையால் வவுனியா பொதுமக்களுக்கு மீண்டும் மனங்களில். பயம் தொடங்கியுள் ...

இந்தப் புலனாய்வு வலையமைப்பைக்கொண்ட சி.எஸ்.யூ வினர் ஒவ்வொரு காவல் துறை நிலையங்களிலும் ஒரு பகுதியாக இயங்கும் அதேவேளை நாடளாவிய ரீதியில் ஒருங்கிணைந்த புலனாய்வுப் பணிகளையும் முன்னெடுத்துவருகின்றனர். அதாவது சந்தேக நபர்கள் தொடர்பாகவும், தாக்குதல்கள் நடந்த பின்னரான பின்னோக்கிய புலனாய்விற்காகவும், தேவையான தகவல்கள் உதவிகளை உரிய சி.எஸ்.யூ நிர்வாகத்தினரிடம் பிறிதொரு நிர்வாகத்தினர் பெற்றுக்கொள்கின்றனர்.

அவரிடமிருந்து தகவல்கள் வெளிவரலாம் என்ற எதிர்பார்ப்பில் இந்த யுக்தியை பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழரின் புலனாய்வு முகவர் குழாத்தைக் கட்டுப்படுத்த தமிழர்களை அடிக்கடி கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தும் தந்திரத்தை இவர்கள் கடைப்பிடித்து வருகின்றனர். இச்சந்தர்ப்பங்களின்போது தமிழர் தங்களையறியாமலேயே தகவல்களை வழங்குகின்றனர். இவ்வாறாகப் பெறப்படும் தகவல்களும் அவர்களை தகவல்கள் அருகிப்போன நிலையிலிருந்து விடுபட உதவுகின்றன.

இவர்கள் தமிழரை கைதுசெய்து விசாரணைக்குட்படுத்தித்தங்களுக்குரிய தகவல்களை, தேவைகளை பெற்றுக்கொள்ளும் அதே வேளை, கைதாகி விடுதலை செய்யப்படுவோர்களில் சிலரை தயார்ப்படுத்தித்தொடர்ந்தும் தமக்கான தகவலாளர்களாகப்பயன்படுத்தி வருகின்றனர்.

இதுபோன்ற கைது செய்யப்படும் தமிழருக்கு மது, மாது,போதைப் பொருள் ஆகிய சேவைகளை வழங்கி அவர்களை அதில் நன்கு பரிச்சயமாக்கி புலனாய்வு அடிமைகளாக வைத்துத் தமது புலனாய்விற்குரிய வேலை சாதகமாக பயன்படுத்திக்கொள்வதற்காக மக்களுடன் மக்களாய் எதிரி உளவாளிகள் கலந்துகொள்கின்றனர்.

இவர்களது உளவாளிகள் புகையிரதப் பெட்டியின் மூலையில் அமர்ந்திருந்தவாறே, செல்லும் பயணிகள் உரையாடலை அவதானித்துக்கொண்டிருக்கும் சாதாரண மனிதர்களாக இயங்குகின்றார்கள். இத்தகைய அவதானிப்புக்களை மக்கள் தொடர்பாடல்கள் செறிந்திருக்கும் இடங்களை ஸ்ழயப்படுத்தி செய்கின்றனர். ஒரு கூர்மையான அவதானி தனது காதாற்கேட்பதையும், கண்ணால் காண்பதையும் வைத்துக்கொண்டே பெருந்தொகையான தகவல்களை சேகரித்துக் கொள்கின்றான் என்பதே புலனாய்வு வல்லுனர்களின் ஒருமித்த கருத்தாகவும் உள்ளது குறிப்பிடத்தக்கது.

சி.எஸ்.யூ வினரின் முகவர்கள் எல்லா வகையிலும் போதுமானளவு பரந்திருக்கிறார்கள். தமிழரின் அசட்டையினாலே இவர்களுக்கு உதவியாக அமைந்துவிட்ட எத்தனையோ சம்பவங்களை பத்திரிகை செய்திகளில் காணமுடிகின்றது. இத்தகைய கவலையீனமான பேச்சுக்கள் உலக மகாயுத்தக் காலங்களின் போது பிரித்தானியாவில் கேவலமாக கருதப்பட்டது. இதனை வெளிப்படுத்தும் பிரசாரமாக "எதிரிக்கு உதவிசெய்யாதே" "அவதானமற்ற பேச்சு அதிமுக்கிய இரகசியங்களைக் காட்டிக்கொடுத்து விடலாம்." என்ற அறிவித்தல்கள் அப்போது பிரித்தானியர் சுவர்களில் காணப்பட்டன.

சி.எஸ்.யூ வினர் பல வகைப்பட்டோருடன் பரந்தளவில் தொடர்புடைய புலனாய்வு வலையமைப்பைக் கொண்டுள்ள அதேசமயம் அஞ்சல் தொடர்புகளை கண்காணிக்கும் நோக்குடன் அஞ்சல்களை பரிசீலனை செய்யும் பணியையும் முன்னெடுத்து வருகின்றனர். இதில் தகவல்கள் மறைத்து வைக்கப்பட்டுள்ளனவா என வெகு அவதானமாக பரிசோதிக்கப்படுகின்றன.

இதுவரைக்கும் பார்க்கப்பட்ட புலனாய்வுத் தந்திரங்கள் மாத்திரமல்ல அதனிலும் பார்க்க முற்றிலும் புறம்பான தந்திரங்களையும் கைக்கொள்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள எஸ்.டி.எப். (STF) முகாம்களில் தமிழர்களை நிர்ப்பந்தித்து அச்சுறுத்தியே தகவல்களை பெற்றுக்கொள்வதோடு, தொடர்ந்தும் தமக்கான தகவலாளர்களாக செயல்பட வைக்கும் யுக்தியை அதிகம் பயன்படுத்திவருகின்றனர். அங்கு வாழும் தமிழர்கள் எஸ்.டி.எப் இனரின் இரும்புப் பிடியினுள் வாழ்ந்து வருவதனால் அவர்களின் மரண அச்சுறுத்தல்களுக்குப் பயந்து முகாம்களுக்கு சென்று கூலிவேலைகள் செய்து வரவேண்டிய நிலை காணப்படுகின்றது. அந்த துர்ப்பாக்கியநிலையை பயன்படுத்தி புலனாய்வுவேலைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# சிறிலங்கா காவல்துறையின் நாசகார முறியடிப்புப் பிரிவும் புலனாய்வுச் செயற்பாடுகளும்

சி.ஐ.டியினர் தமது புலனாய்வுக் கெட்டித்தனத்தைப் பயன்படுத்தி தமிழர் சுதந்திரப்போராட்டத்தை அடக்கி அழித்தொழிக்க முனைந்தபோதிலும் புலிகளின் தலைமையின் துரிதமான, விவேகமான செயற்பாட்டால் அவர்கள் தோற்றுப்போனார்கள். அதாவது சி.ஐ.டியினரை சுதந்திரமாக உலவவிட்டால் மறைமுக இயக்கத்தின் பாதுகாப்பிற்குப் பங்கம் விளைவிக்கும் என எண்ணி அவர்களில் தீவிரப் போக்குள்ளவர்களை புலிகள் தீர்த்துக்கட்டினர். இதனால் சி.ஐ.டியினரின் சண்டித்தனம் தமிழர் தாயகப்பகுதிகளில் பலமிழந்து அடங்கி இருக்கும் சூழ்நிலை உருவாகியது.

**நீலன்**

தென்னிலங்கையில் ஜனதா விமுத்தி பெரமுன (J.V.P)அரசுக்கு எதிரான ஆயுதப் போராட்டங்களை 88களில் தீவிரப்படுத்தியது. இதனால் சிங்கள அரசு நெருக்கடி நிலைக்குள்ளாகியபோதுதான் காவல்துறையின் கீழ் நாசகார முறியடிப்புப்பிரிவை (COUNTER SUBVERSIVE UNIT - CSU)அரச புலனாய்வு உயர்பீடத்தினர் உருவாக்கினர்.

காலப்போக்கில் இந்தப் பிரிவை சக்தி வாய்ந்த ஒரு பிரிவாகக் கட்டியெழுப்புவதில் காவல்துறை உயர்பீடத்தினர் அதீத கவனம் செலுத்தினர். சி.எஸ்.யூ வினர் புலிகளின் உளவாளிகள் மீது உளவு பார்க்கும் பணியை 90க்கு பிற்பகுதியில் பொறுப்பேற்றனர். அதாவது அரச உள்ளகப் பாதுகாப்பிற்குரிய உள்ளகப் புலனாய்வுப் பணிகளே இவர்களது சிறப்புப் பணியாக இருக்கின்றது.

சி.எஸ்.யூ வினர் புலிகளின் இரகசிய ஊடுருவல்களை இனம் காணும் தகவல்களை சேகரிப்பதிலும், புலிகளின் நடவடிக்கைகளை நாளாந்தம் அவதானித்து ஆய்வு அறிக்கையாக்கும் தகவல்களை சேகரிப்பதிலும் ஈடுபட்டு வருகின்றனர். இவை எல்லாவற்றிற்கும் மேலாக இதுபோன்ற பணிகளுக்கு அப்பாலும் காவல்துறையினர் வழங்கும் அனுமதி, அடையாள அட்டை, குடும்ப வதிவிடப் பத்திரம், பயண அனுமதி ஆகியவற்றை வழங்கும்போது குறித்தவர்கள் தொடர்பான ஆய்வுகளை மேற்கொள்ளவேண்டிய அவசியம் ஏற்படும் பட்சத்தில் அவர்கள் உரிய சி.எஸ்.யூ வினரின் உதவியினையும் நாடுகின்றனர். இதனை இன்னும் சற்று விளங்கிக்கொள்ள உதாரணத்தை நோக்குவோம்.


கொழும்பு விடுதியில் தங்கியிருப்பவர்களின் அடையாளஅட்டை அடங்கிய விபரங்களை பெற்றுக்கொள்ளும் சி.எஸ்.யூவினர் ஆய்வுசெய்கின்றனர். அந்த ஆய்வின் மேலதிக தகவலுக்காக சிவராஜா, உப்புக்குளம், மன்னார் என்கிற முகவரிக்குரியவர் பற்றிய விபரங்களை மன்னார் சி.எஸ்.யூ வினருக்குக் கொடுத்து பரிசீலனைசெய்துகொள்கின்றனர். அத்துடன் தேவை ஏற்படும் சந்தர்ப்பங்களில் இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் ஒத்துழைப்பையும் பெற்றுக் கொள்கின்றனர்.

சி.எஸ்.யூ வினர் தமிழரின் உளவுப் பணிகளை முறியடிப்பதற்கு பல்வேறு யுக்திகளை கைக்கொள்கின்றனர். அவற்றை இங்கு கவனிப்போம்.

இவர்கள் சந்தேக நபரைக் கைது செய்து நேர்முக விசாரணை மூலமோ, அல்லது அச்சுறுத்தல்களை கொடுப்பதன் மூலமோ அவரிடமிருந்து எந்தவிதமான தகவல்களையும் பெற்றுக்கொள்ள முடியாமல் இருப்பின் அவரை கடுமையான சூழ்நிலைகளின் கீழ் சிறையில் வைத்திருக்கின்றனர். அத்தோடு இவர்களால் தயார்ப்படுத்தப்பட்ட சிறையில் வாடும் இன்னுமொரு கைதியைக்கொண்டுவந்து அவருடன் சேர்த்து அடைக்கின்றனர். இதனால் ஏதாவது

களை வாங்கும் புலனாய்வு முதலாளிகளாக சி.எஸ்.யூவினர் தொழிலாற்றுகின்றனர்.

இது மட்டுமல்லாது இன்னுமொரு புறம்பான ஏமாற்று நாடகமொன்றை புலனாய்வு அரங்கில் அரங்கேற்றுகின்றனர். தமிழ் பெண்கள் சிலரை தமது வலைக்குள் வீழ்த்தி பாலியல் தொடர்புகளை பேணிவரும் அதேசமயம் அந்த இரகசியங்களை பரகசியமாக்கப் போவதாகக் கூறிக் காரியஞ்சாதிக்கும் புலனாய்வு முறையையும் கைக்கொண்டும் வருகின்றனர். இந்தப் பெண்களை அச்சுறுத்தி, பேரம்பேசி, நிர்ப்பந்தித்து அவர்களிடமிருந்து புலனாய்வு நன்மைகளை பெற்றுவருகின்றனர்.


அம்பாறை கிளர்ச்சித் தடுப்பு பொலிஸ்பிரிவில் சித்திரவதையென முறைப்பாடு

விசாரணைக்கு வருமாறு பொலிஸ் அதிகாரிகளுக்கு அழைப்பு

அம்பாறை கிளர்ச்சித் தடுப்பு பொலிஸ் பிரி வில் இடம்பெற்று வருவதாக முறையிடப்பட் டுள்ள பல்வேறு சித்திரவதை நடவடிக்கைகள் தொடர்பாக விளக்கம் கோருவதற்காக மனித உரிமைகள் ஆணைக்குழு அப்பிரிவின் பொலிஸ் பொறுப்பதிகாரி உட்பட சம்பந்தப் பட்ட பொலிஸ் அதிகாரிகளை விசாரணைக்கு

வவுனியா. சித்திரவதைகள பற்றி அறிவதில் பிரித்தானியா. ... அமெரிக்கா, அவுஸ்திரேலியா போன்ற நாடுக ... ளைச் சேர்ந்த தூதரக அதிகாரிகள் அதிக ஆர் ... வம் காட்டி வருவதாகத் தெரிகின்றது. இதனிடையில் அம்பாறை கிளர்ச்சித் தடுப்பு பொலிஸ் பிரிவின் விசாரணை நடைமுறைகள் மற்றும் அப்பிரதேசத்தைச் சேர்ந்த மனித உரி மைகள் ஆணைக்குழு இணைப்பு அலுவலகத் ...

இந்தச் சூழ்ச்சி நுட்பம் மிக்க புலனாய்வு முறைகளை கையாண்டு தகவல்களைப் பெறுகின்ற அதேசமயம் மக்கள் கூடும் இடங்களில் சி.எஸ்.யூ வினரும், இவர்களின் உளவாளிகளும் மொய்த்திருப்பர். மனிதனுக்குரிய இயல்பான குறையே தனக்கு எல்லாம் தெரியும் என்று மற்றவர் நினைக்கவேண்டுமென்றதற்காக அளவுக்கதிகமாகத் தன்னிச்சைப்படி அடிக்கடி பேசுவதுண்டு. இக்குறைபாட்டை தமக்கு

மேலும் தமது லாபங்களுக்காக பதற்றமான ஒரு சூழ்நிலையை எதிரி கட்டுப்பாடு தமிழர் தாயகப் பகுதிகளுள் உண்டாக்கும் நோக்குடைய முகவர்களைக்கொண்ட வலையமைப்பை அமைத்துள்ளனர். இந்த முகவர்களின் துணையோடு சமூக முரண்பாடுகள் ஏற்படும் போதெல்லாம் அதனை அரிய சந்தர்ப்பமாகப் பயன்படுத்தி பதற்றமான நிலைக்குள் கொண்டு செல்லுகின்றனர்.

இவ்வாறான காவல்துறையின் நாசகார முறியடிப்புப் பிரிவினரின் மிகவும் ஆபத்தான தனிச் சிறப்பு வாய்ந்த உள்ளகப் புலனாய்வு போர் முறைகள் பற்றித் தெரிந்துகொள்ள வேண்டிய அனைத்தினையும் வெளிக்கொணர்வதாக இக்கட்டுரை பறைசாற்றவில்லை. இன்னும் பல்வேறு கீழ்த்தரமான, நயவஞ்சகமான புலனாய்வு அணுகுமுறைகளையும் கையாண்டு வருகின்றனர். ●

ஈழநாதம்
வெள்ளிநாதம்
யாழ்சாலை, கிளிநொச்சி. 10 . 12 . 2004
மின் அஞ்சல : weekly @ eezhanatham.com

# பலமாக இருக்கவேண்டும்...!

நாடு மீண்டும் ஒரு யுத்தத்தை அண்மிக்கிறதா? என்பது இன்று முதன்மையான கேள்விகளில் ஒன்றாக இருக்கிறது.

தமிழீழத் தேசியத்தலைவரின் மாவீரர்தின உரைக்கு பின்னர் அரசின் வெளிப்பாடுகளை, நோக்கும் போது மேற்படி வினா எழுவதில் நியாயம் இல்லாமல் இல்லை.

மாவீரர்தின உரைக்கு முன்னர் போரிற்கான உற்கொதிநிலையை அரசு உருவாக்கியதென்றால், மாவீரர்தின உரைக்கு பின்னர் உற்கொதிநிலையை வெளிக்கொதி நிலையாக்க அரசு தயாராகிவிட்டது.

இதனை மெய்ப்படுத்துவதாக அரசின் வரவு செலவு திட்டத்தில் பாதுகாப்பு நிதியாக ஏழாயிரத்து அறுநூற்று இரண்டு கோடியே எழுநூற்று ஆறு இலட்சம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும் எம்.ஐ. முப்பத்தைந்து தாக்குதல் மற்றும் போக்குவரவு உலங்கு வானூர்திகள் கொள்வனவு, புதிய படையணிகளிற்கான தாக்குதல் பயிற்சிகள் என படைத்தரப்பு ஒரு போர் நிலைக்குத்தயாராகிவிட்டது.

சிறிலங்கா அரசின் போக்கு இவ்வாறு இருக்க சமாதான முயற்சி முன்செல்ல ஏதுவாக தேசியத் தலைவர் அவர்கள் விடுத்த இடைக்கால தன்னாட்சி அதிகாரசபையின் அடிப்படையில் பேசுவதற்கான அவசர அழைப்பு தொடர்பாக அரசு சாதகமான ஒரு போக்கை கொண்டிருப்பதாக இல்லை.

இதனை அரசு வெளியிட்ட தெளிவற்ற அறிக்கை மூலம் தெரிந்துகொள்ளக்கூடியதாக இருக்கிறது.

அத்தோடு, அரசின் பிரதான பங்காளி கட்சியான ஜே.வி.பியினர் தெரிவிக்கும் கருத்துக்களும் அவர்கள் நோர்வேயின் அனுசரணை தொடர்பாக எழுதிய கடிதமும் உணர்த்துகின்றது.

அரசு எவ்வளவு தான் ஜே.பி.வியின் செயலை மறுதலித்தாலும் ஒரு வரையறைக்கு மேல் ஜே.வி.பி யை புறந்தள்ளி காரிய மாற்றப்போவதில்லை.

இந்த நிலையில் சமாதானத்தை பின்தள்ளி, போரை முன்னிலைப்படுத்தும் அரசின் மேற்படி நகர்வுகளானது இலங்கை இருண்டயுகம் ஒன்றிக்குள் பிரவேசிக்க தயாராகிவிட்டதையே காட்டுகிறது.

ஆனால் தமிழ் மக்களைப்பொறுத்தவரையில் அதிலும் இன்றைய தமிழ் சமுதாயம் தேசத்திற்கான தமது உழைப்பை எந்த வேளையிலும் வழங்க வேண்டிய காலமாகவுள்ளது.

சிங்களதேசம் எத்துறைசார்ந்து பலம் பெற்றாலும் அதனை அவ்வழியிலேயே எதிர் கொள்ளத் தக்கதாக தமிழினம் தன்னை தகுநிலையில் வைத்திருக்க வேண்டும்.

பலவீனமான எந்தவொரு இனமும் தனக்கான உரிமைகளை பெற்றுவிடவில்லை. எமது பலமே எமக்கான விடுதலையின் வாசலைத்திறக்கும் என்பதை புரிந்துகொள்ளவேண்டும்.

சமாதானத்தை சந்திப்பதாக இருந்தாலும் தமிழினம் பலமான நிலையிலேயே இருக்கவேண்டும். எதிரி திணிக்கும் யுத்தமாக இருந்தாலும் அதனை நாம் பலமான நிலையிலேயே எதிர்கொள்ள வேண்டும்.

அரசு தமிழ்மக்களின் கோரிக்கைகளுக்கு செவிசாய்க்காத போக்கு இதனையே உணர்த்துகின்றது.

இந்நிலையில் தமிழ் மக்களும், புலிகள் இயக்கமும் போரை தவிர்த்து சமாதான வழியில் தீர்வொன்றைக் காண உழைப்பதை வரும் சமாதானத்திற்கான புலிகளின் பொறமை உணர்த்துகிறது.

ஆனால் அரசோ இதனை புரிந்து கொண்டதாகவோ தமிழ் மக்கள் நீட்டும் கரத்தை பற்றி கொள்வதாகவோ இல்லை.

எனவே அரசின் எத்தகைய பிரதிபலிப்புக்களாயினும் அதனை சந்திக்கின்ற நிலைக்கு தமிழ் மக்கள் தம்மை தயார் நிலையில் வைத்திருக்க வேண்டியது காலத்தின் கட்டாயமாகும்.

# ஒரு நிச்சயமற்ற தன்மையில் நாடு பயணிக்கிறது

2002 ஆம் ஆண்டு நடைமுறைக்கு வந்த போர் நிறுத்த உடன்படிக்கை நெருக்கடிக்குள்ளாக்கியிருக்கும் வேளையில் சமாதானப்பேச்சுக்களை முன்னெடுத்துச் செல்வதற்கு புலிகள் காட்டிய அக்கறையும் சந்திரிகா அரசுகாட்டிய அசமந்தப்போக்கையும் உலகம் நன்கு அறிந்திருக்கும்.

இவ்வாறிருக்க நோர்வே பக்கச்சார்பாக நடப்பதால் நோர்வே மீது அரசு நம்பிக்கை இழந்து விட்டது என்றும் ஜே.வி.பியின் செயலர் ரில்வின் சில்வா நோர்வேக்கு கடிதம்



சமாதான வழியில் தீர்வு காணும் முகமாக ஒரு தீர்வுத்திட்டத்தை எழுத்து மூலம் அரசிடம் சமர்ப்பித்தமையும் இதனையடுத்து பின் சந்திரிகா 2003 நவம்பரில் மூன்று அமைச்சுக்களை கைப்பற்றியதன் மூலம் ரணிலின் ஐக்கிய தேசிய முன்னணி அரசை கவிழ்த்து ஆட்சியைப்பிடித்த சந்திரிகா அரசு பின்னர் நடந்த சம்பவங்களின் அடிப்படையில் புலிகள் பலவீனமடைந்துவிட்டார்கள் என்று நினைத்து செயற்படுகின்றது.

ஆனால் புலிகளின் பலம் அமைச்சர் அனுரா பண்டார நாயக்க புலிகளை நோக்கி அடிக்கடி விடுக்கும் சவாலைப் போல எந்நேரத்திலும் போருக்கும் தயார் சமாதானத்திற்கும் தயார் என்ற நிலையிலேயே உள்ளது. இந்த சமாதான இழுத்தடிப்பு காலத்தில் அரசியல்படு கொலைகளின் பின்னணியில் அரசின் செயற்பாடுகளைப் புரிந்து கொண்டுள்ள சர்வதேச சமூகத்தின் பார்வையில் சந்திரி

நோர்வே அரசு தமது தீவிர அக்கறையைக்காட்டினாலும் படைதரப்பின் நடவடிக்கைகளும் சிறிலங்கா அரசின் செயற்பாடுகளும் புரிந்துணர்வு உடன்படிக்கையில் பெரும் சேதத்தை உண்டு பண்ணியிருக்கிறது.

புரிந்துணர்வு உடன்படிக்கை பெரும் ஆபத்தை எதிர் கொள்கிறது என்பதை கண்காணிப்புக்குழுவின் தலைவர் ரொன் புருவ் ஹொவ்டே அண்மையில் சுட்டிக்காட்டியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

நாடு இன்னொரு போரை சந்திக்க நேரிட்டால் நாட்டில் பேரழிவு ஏற்படுவதை தவிர்க்க முடியாது.

இந்த நிலையில் நாடு இன்று ஒரு நிச்சயமற்றத் தன்மையை நோக்கிய பயணத்தைத் தொடங்கிவிட்டது.

பல ஆண்டுகால யுத்தத்தை முன்னெடுத்த அரசால் சில ஆண்டுகள் மட்டுமே ஒரு யுத்தமற்ற நாட்டை கொண்டு செல்ல முடிகிறது.

இதற்கு அரசின் தமிழ் மக்கள் தொடர்பாக கொண்டிருக்கும் நிலைப்பாடே காரணமாகும்.

தமிழ் மக்களுக்கே உரித்தான தீர்வையும் உரிமையையும் வழங்க அரசுஒரு போதும் முன்வரப்போவதில்லை.

ஏனெனில் அரசுக்கு

அனுப்பியதும் இந்தக்கடிதத்துக்கும் அரசுக்கும் எந்தவிதத்தொடர்பும் இல்லையென்று சமாளிக்கும் கதிர்காமரின் நடவடிக்கைகளும் தடைப்பட்டிருக்கும் சமாதானத்தை முன்கொண்டு செல்ல உதவப்போவதில்லை. ஜே.வியின் அரசின் மீதான அழுத்தம் காரணமாகவும் மற்றும் சிங்கள மேலாண்மை வாதத்தாலும் சந்திரிகா அரசு சமாதானப்பேச்சுக்களை இழுத்தடிப்புச்செய்து வருகின்றது.

மாவீரர் நாள் உரையில் அரசாங்கத்திற்கு விடுத்த செய்தியையடுத்து சந்திரிகா அரசு போரைச்சந்திப்பதா? சமாதானத்தை சந்திப்பதா அல்லது சர்வதேச அழுத்தத்தை எதிர் கொள்வதா? என்ற வலைக்குள் விழுந்துள்ளது.

அரசு புலிகள் பலவீனமடைந்துவிட்டார்கள் என்று கூறிக்கொண்டு பாரிய அளவில் ஆயுதக்கொள்வனவு செய்து வருகின்றமையும் படைக் கட்டமைப்பை புனரமைத்து வருகின்றமையும் கவனிக்கவேண்டும்.

இந்நிலையில் தமது போராட்ட வரலாற்றில் பல சாதனைகளையும் பல இன்னல்களையும் தாண்டி கடந்த 2002 இல் ஐக்கியதேசியக்கட்சி அரசாங்கத்துடன் சமாதானப் பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு புலிகள் முன்வந்தமையும் அதன் பயனாக ஆறு சுற்று சமாதான பேச்சுக்களை நடத்தியமையும் எல்லாவற்றிற்கும் மேலாக புலிகள் இயக்கம் முதன்முதலாக

காவின் அரசு தடுமாறி வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

ஜே.வி.பியின் கூண்டுப்பிடியில் இருக்கும் சந்திரிகா மக்களின் நலன்களைப்பாராது நாட்டினை யுத்தத்திற்குள் கொண்டு செல்கிறது. நாட்டு மக்கள் அதற்கு தயாரில்லை என்று ரணில் விக்கிரமசிங்க அண்மையில் நடந்த ஐக்கிய தேசியக் கட்சியின் ஐம்பதாவது வருடாந்த மாநாட்டில் குறிப்பிட்டிருந்தார்.



இது இவ்வாறு இருக்க 2005 ஆண்டு சனாதிபதித்தேர்தல் நடத்தப்படவேண்டும். இல்லையேல் நாட்டையும் நாட்டுமக்களையும் பாதுகாக்க நாம் ஒன்றிணைந்து போராடுவோம் என்று ஐக்கிய தேசியக்கட்சி எச்சரித்துள்ளது.

இவ்வாறு ஒரு குழப்பம் மிக்க நாடாகவும் குழப்பமிக்க அரசாங்கமாகவும் இலங்கையும் சனாதிபதி சந்திரிகா தலைமையிலான அரசும் காணப்படுகிறது.

இந்நிலையில் நோர்வே அரசாங்கம் சந்திரிகா அரசு மீது விசனமடைந்தாலும் நோர்வே தனது அனுசரணையாளர் பணியை தொடர்வதும் வியப்புக்குரியதே!

சிறிலங்காவில் திரும்பவும் ஒரு யுத்தம் அரசுக்கும் புலிகளுக்கும் ஏற்படாமல் இருக்க

இந்த மூன்றாண்டு காலமாக கிடைத்த அரிய வாய்ப்பை போன்று எதிர்காலத்தில் கிடைக்குமோ என்பது கேள்விக்குறியே.

இந்த நிலையில் யுத்தத்தால் பெரிதும் சொத்தழிவையும் பொருளழிவையும் சந்தித்த தமிழ் மக்களுக்கு உடனடி நிவாரணம் கிடைக்கத்தக்கதாக இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை நிறுவதற்கு அரசு தடையாக இருப்பதென்பது ஒரு போர்க்களத்தில் எப்படி பொருளாதார தடை மூலமாகவும் தாக்குதல்கள் மூலமாகவும் மக்களின் வாழ்வில் பெரும் தாக்கத்தை ஏற்படுத்தினார்களோ அதற்கு சமமானதாகவே கருதவேண்டும்


எனவே அரசு தமிழ் மக்களின் பிரச்சினைக்கு தீர்வை வழங்கவேண்டுமென தமிழ் மக்கள் ஒரு போதும் கருதப போதில்லை என்பது மட்டும் நிச்சயம்.

**கார்த்திகேசு**

# தென்னிலங்கை அரசியல் மழையும் தமிழர் பிரதேசத்தின் கனமழையும்



கடந்த இரண்டு வாரங்களுக்கு மேலாக தென்னிலங்கையில் பெய்த அரசியல் மழையில் வடக்கு கிழக்கு பகுதியில் பெய்த கடுமையான மழையும், அதனால் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கும், சொத்தழிவுகளும் பெரிதாக முன்னுரிமைப் படுத்தப்படாத பிரச்சினையாக அமிழ்ந்து அதனுள் போய்விட்டது.



வெள்ளப்பெருக்கினால் மக்கள் சந்தித்த துன்பங்கள், இடப்பெயர்வுகள், சொத்தழிவுகள் இராணுவ நடவடிக்கைகளின் போதான இடப்பெயர்வுகளுக்கு ஒப்பிடும் அளவுக்கு மோசமான தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளதென்றால் மிகையில்லை. ஏற்கனவே கடந்த ஐப்பசி மாதமளவில், பெய்த கடும் மழையினால் மட்டக்களப்பு, அம்பாறை, முல்லைத்தீவு மாவட்டங்களின் சில கிராமங்கள் நீரில் மூழ்கியிருந்தது அனைவரும் அறிந்த விடயம்.



கடந்த இருவாரங்களாகப் பெய்த கடும் மழையினால் வன்னிப்பகுதியிலும் மட்டக்களப்பிலும் பல ஆயிரக் கணக்கான குடும்பங்கள் இடம்பெயர்ந்து பாடசாலைகளிலும் ஆலயங்களிலும் பொது மண்டபங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர். இவர்களின் கால்நடைகள் உட்பட்ட பல சொத்துக்கள் நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளன. பல கிராமங்களுக்கான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. மக்கள் படகுகள், வெற்றுக்கொள்கலன்களின் (பரல்) இணைப்புகள் மூலமும் மனிதநேயப்பணியாளர்களால் பாதுகாப்பான இடத்திற்கு அழைத்துச்செல்லப்பட்டனர். இவ்வாறு வெள்ளத்தில் இருந்து மீட்கப்பட்ட மக்களுக்கான சமைத்த உணவுகள் தமிழர் புனர்வாழ்வுக்கழகம் வழங்கி வருகின்றது. இது இவ்வாறிருக்க வடக்கு கிழக்கு பகுதியை சூறாவளி தாக்கவுள்ளதாக இலங்கை வளிமண்டலத் திணைக்களம் எச்சரித்துள்ளபோதிலும் இப்பத்தி எழுதப்படும்வரை அவ்வாறான அனர்த்தங்கள் எவையும் ஏற்படவில்லை. இவை ஏற்படுமோ என்ற அச்சத்துடனேயே மக்கள் வாழ்ந்து வருகின்றனர்.

வன்னிப்பகுதியில் உள்ள பல விவசாயிகள் தங்கள் மூலாதாரமான நெற்பயிர்கள் அழிந்து போய் விரக்தி நிலையில் உள்ளனர். சில குளங்கள் உடைப்பெடுக்கும் அபாயமும் ஏற்பட்டுள்ளது.



இவ்வாறு வெள்ளத்தின் அனர்த்தத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் மிக அதிகமான அழிவுகளை சந்தித்த பிரதேசமான பளை பிரதேசத்தை தரிசிக்கும் நோக்குடன் அங்கு சென்றோம்.

பளை REERDO நிறுவனத்தில் பல இடம்பெயர்ந்த குடும்பங்கள் இருந்தன. அவர்களுடன் உரையாடிக்கொண்டிருக்கும்போது பச்சிலைப்பள்ளி அபிவிருத்தி நிறுவன இணைப்பாளர் இளங்கோ [illegible]ர்கள் வருகை தந்தார். அவர் [illegible]றிய விபரத்தின்படி பளைப்பிரதேசம் இவ்வாறான வெள்ளப்பெருக்கை சந்தித்துள்ளது. இதுவே முதல்தடவை என்றும், தங்களால் திரட்டப்பட்ட தகவல்களின்படி இதுவரை பளைப் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட 18 கிராமசேவையாளர் பிரிவுகளில் 17 கிராமசேவையாளர் பிரிவுகளைச் சேர்ந்த 1688 குடும்பங்கள் தங்கள் வீடுகளை இழந்து உறவினர் வீடுகளிலும் பொது இடங்களிலும் தஞ்சமடைந்துள்ளனர் என்றும்

**-------- அருள்**

பலரின் வீடுகள் நிலம் ஊறிக் காணப்படுவதாகக் கூறினார். நாம் தொடர்ந்து பளை மத்தியகல்லூரிக்குச் சென்றோம். பாடசாலையின் வழமையான செயற்பாடுகள் இயல்பாய் நடைபெற்றபோதிலும் பாடசாலை வளாகம் நீரில் மூழ்கிக் காணப்பட்டது. கல்லூரியின் அலுவலக வாயில் இரண்டு அடிவரையில் உயர்த்திக்கட்டப்பட்டு வெள்ளம் உட்புகுவது தடுக்கப்பட்டுள்ளது. தற்காலிகக் கொட்டகையில் மழை வெள்ளத்தின் பாதிப்புகள் காணப்பட்டன.



தொடர்ந்து புலோப்பளை கிராமத்திற்கு சென்றோம். அங்கே கிராமசேவையாளர் அலுவலகத்தில் சில குடும்பங்கள் தஞ்சமடைந்திருந்தன. அப்பகுதியின் வீதியில் நான்கு அடி தண்ணீர் தேங்கி நின்றது. மக்களின் வீடுகளினுள் வெள்ளம் நிரம்பியுள்ளது. பளைப்பகுதி மக்களின் இயல்பு வாழ்வு முற்றாக செயலிழந்து காணப்பட்டது.

பளைப் பிரதேசத்தில் நீர் வடிந்து செல்வதற்குத் தடையாக இருப்பவற்றில் அப்பகுதியில் இராணுவத்தினரால் அமைக்கப்பெற்ற மண் அணைகளும் காரணமாகும். கிளிநொச்சி மாவட்டத்தில் 7500இற்கு மேற்பட்ட குடும்பங்களும் முல்லைத்தீவு மாவட்டத்தில் 6618 குடும்பங்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டுள்ளன. இது ஒரு புறமிருக்க இனிவரும் காலங்களில் இம்மக்கள் எதிர்நோக்க வேண்டிய பேராபத்தொன்றும் உள்ளது. மலேரியா உள்ளிட்ட பலநோய்கள் இப்பிரதேசத்தில் பரவும் வாய்ப்பு அதிகரித்துள்ளது



இம்மக்களுக்கான, மனிதாபிமான நிவாரண உதவிகள் வழங்கும் பொருட்டு பளைப்பிரதேசத்தில் சர்வதேச, உள்ளூர்த் தொண்டு நிறுவனங்கள் கூடி ஆராய்ந்துள்ளன. பளைப்பகுதியில் நீர் வடிந்து செல்வதற்கான கழிவு நீர் வாய்க்கால்கள் எவையும் அற்ற நிலை காணப்படுகின்றது. இராணுவ மண் அணைகளும் நீர் வடிந்து செல்வதை தடுக்கின்றதையும் அவதானிக்கக் கூடியதாய் இருக்கின்றது.

பாடசாலைகள், சந்தை, போன்ற இடங்களிலும் தேங்கியுள்ள நீரினால் சுகாதாரச் சீர்கேட்டு தொற்று நோய்கள் ஏறபடும் வாய்ப்பு அதிகரித்துக் காணப்படுகின்றன. இடம் பெயர்ந்து பொது இடங்களிலும் உறவினர் வீடுகளிலும் தஞ்சமடைந்துள்ள மக்கள் மனிதாபிமான, நிவாரண உதவிகளை எதிர்பார்க்கின்றனர்.



இது ஒருபுறம் இருக்க தமிழர்தாயகத்தில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மனிதாபிமான நடவடிக்கைகளை மேற் கொள்ள அரசு இதுவரை எவ்வித நடவடிக்கைகளையும் எடுக்காது புறக்கணிப்புச் செய்துவருகின்றது. ஏற்கனவே வரட்சியால் பாதிக்கப்பட்ட வன்னிப்பகுதி மக்களுக்கு வரட்சி நிவாரணம் எவையும் வளங்கப்பட்டதாகதெரியவில்லை. இந்நிலையால் வெள்ளத்அழிவை சந்தித்துள்ளனர்.

கடந்த இரண்டாயிரத்தி இரண்டாம் ஆண்டளவில் இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கின்போது இலங்கை அரசு அயல்நாடுகளின் உதவியை கோரியதுடன், பல அமைப்புக்களையும் அப்பகுதியில் மனிதாபிமானப் பணிகளை மேற்கொள்ளுமாறு கேட்டுக்கொண்டதுடன் இந்த வெள்ளப்பெருக்கை பல்வேறு சிங்கள ஊடகங்களும் முக்கியத்துவம் கொடுத்து. மக்களின் அவலங்களை வெளிக்கொணர்ந்தன. ஆனால் தமிழர் தாயகப்பகுதியில் ஏற்பட்ட வெள்ளப்பெருக்கும், அதனால் ஏற்பட்ட அழிவு தொடர்பில் அரசு முக்கியத்துவம் கொடுத்து முன்னுரிமைப்படுத்தி செயற்படவில்லை. ஊடகங்களும் இதனை முக்கியத்துவப்படுத்தவில்லையென்றே கூறவேண்டும். இரத்தினபுரிப் பகுதியில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வழங்கப்பட்ட உதவிகள் அவர்கள் இழந்த உடமைகளை விட அதிகம் என அப்போது பலராலும் அவதானிக்கப்பட்டவிடயம். ஆனால் இம்முறை வெள்ளப்பெருக்கு ஏற்பட்டுள்ளது தமிழர் தாயகப்பகுதி என்பதால் அரசிடமிருந்து இதுவரை எவ்விதமான உதவிகளும் மக்களைச் சென்றடையவில்லை. எனவே தங்களின் உடமைகளை இழந்து இயல்பு வாழ்வை இழந்து நிர்க்கதி நிலையில் இருக்கும் மக்களின் வாழ்வியல் மேம்பாட்டுக்கு உதவிகளை வழங்கவேண்டிய பொறுப்பு தொண்டு நிறுவனங்களிடமே உள்ளது. ●

# அமைதியைச் சீர்குலைக்கும் ஜே.வி.பி

இலங்கையில் தற்பொழுது நிலவி நம் சமாதானச் சூழ்நிலையை எவ்வாறாநும் இல்லாதொழித்து விடுவது என்ற திடகற்பத்துடன் ஜே.வி.பி செயற்பட்டுவருவது ாலத்தெரிகிறது. சமாதான ஒப்பந்தத்திற்கான யத்தங்கள் நடைபெற்று வருகையிலேயே தற்கான செயற்பாடுகளை ஜே.வி.பி



ஆரம்பித்துவிட்ட போதிலும் அதனை இப்பொழுது தீவிரப்படுத்தியிருக்கிறது என்றே சொல்லவேண்டும்.

தேர்தலுக்கு முன்னரே யானை- புலி கூட்டு சிங்கள இனத்தின் அழிவிற்கே வழிவகுக்கும் எனப்பிரசாரம் செய்த ஜே.வி.பி, போர்நிறுத்த ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டு அமைதி நிலை ஏற்பட்ட ஆரம்பத்தில் இதற்கெதிரான பல ஆர்ப்பாட்டங்களை கொழும்பில் நடத்தமுற்பட்டது. அவ்வேளையில் ஜே.வி.பி. யின் முயற்சிகளுக்கு அவ்வளவாக ஆதரவு கிட்டவில்லை. இதனால் சலிப்படைந்துவிடாது போர்நிறுத்த ஒப்பந்தத்திற்கும் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கும் ஒட்டுமொத்தமாக சமாதான முயற்சிகள் அனைவற்றுக்கும் எதிராக தீவிர பிரசாரங்களை ஜே.வி.பி மேற்கொண்டிருந்தது.

அவ்வேளையில் ஜே.வி.பி இப்பொழுது கூறுவதுபோல நிறைவேற்று அதிகாரத்தை வைத்துக்கொண்டு அதனைப் பிரயோகிக்க முடியாதிருந்த சிறிலங்கா சுதந்திரக்கட்சி ஜே:வி.பியுடன் நெருங்கிச் சென்றது மாத்திரமல்லாது ஜே.வி.பியின் போராட்டங்களுக்கு மறைமுக ஆதரவையும் வழங்கியது. படிப்படியாக இனவாத விதையை மக்கள் மத்தியில் விதைத்த ஜே.வி.பி பிக்குகளையும் சிறிலங்கா சுதந்திரக் கட்சியிலுள்ள அநுரா போன்றோரையும் இணைத்துக்கொண்டு அமைத்த தேசப்பிரேமி அமைப்பு மூலம் பல போராட்டங்களை நடத்தியது. பின்னர் அது சமாதான முயற்சிகளுக்கு எதிராக நடத்திய பாதயாத்திரை கணிசமான வெற்றியை அதற்குத் தேடிக்கொடுத்தது.

ஜே.வி.பியின் இந்த வெற்றிக்கு தனியாக அதன் முயற்சியை மட்டும் காரணமாகக் கூறிவிடமுடியாது. ஏனெனில் ஐக்கிய தேசிய முன்னணி சமாதான முயற்சிகளை முன்னெடுத்தபோதும் அதனைத் தீவிரமாக செயற்படுத்த முயலவில்லை. அது சந்திரிகா குமாரதுங்கவின் நிறைவேற்று அதிகாரத்துக்கும் அரசியலமைப்பின்படி ஆட்சியிலிருந்து சனாதிபதி சந்திரிகாவினால் தூக்கி எறியப்பட்டுவிடலாம் எனவும் அஞ்சி அது தீவிரமாகச் செயற்பட முனையவில்லை. இதன் காரணமாக சமாதான முயற்சிகள் மீது சிங்கள மக்களுக்கு இருந்த கவர்ச்சி படிப்படியாக மங்க ஆரம்பித்தது என்றே கூறவேண்டும்.

இதன் விளைவாக ஜே.வி.பி சிறிலங்கா சுதந்திரக்கட்சி கூட்டுச் சேர்ந்தால் ஆட்சியைக் கைப்பற்றமுடியும் என்ற நம்பிக்கை அவ்விருகட்சிகளுக்கும் ஏற்பட்டது. அவ்வாறு கூட்டுச்சேர்ந்ததும் ரணில் அரசாங்கத்தைக் கலைப்பதற்கான தீவிர முயற்சிகளில் சனாதிபதி சந்திரிகா ஈடுபட்டார்.

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மையைக் கொண்டிருந்தபோதும் சமாதான முயற்சிகளைத் தீவிரப்படுத்தி நாட்டை பொருளாதார ரீதியில் வளம்படுத்தி மக்களின் ஆதரவை அதிகரிக்கச் செய்யும் நடவடிக்கையை ஐ.தே.க தவறியிருந்தது. வெறுமனே சமாதான முயற்சிகளுக்கு இருந்த சர்வதேச ஆதரவு தனது ஆட்சியைப் பாதுகாக்கப் போதுமானது என ஐ.தே.க கொண்டிருந்த நம்பிக்கை தவறாகப்போனது. இதன் காரணமாக ஐ.தே.க ஆட்சி கலைக்கப்பட்ட போது சர்வதேச ரீதியாக சனாதிபதிக்கு சில அழுத்தங்கள் ஏற்பட்டிருக்கலாம். ஆனால் நடைபெற்ற தேர்தலில் சு.க. ஜே.வி. கூட்டு பூரணமாக வெற்றிபெறாவிட்டாலும் இனவாத சக்திகள் எதிர்பாராதளவு வெற்றிபெற்றன. அதிலும் குறிப்பாக ஜே.வி.பிக்கும் அதனிலும் தீவிரமாக ஜாதிக ஹெல உறுமயவுக்கும் எதிர்பாராத வெற்றி கிடைத்தது.

இப்பொழுது சமாதான முயற்சிகள் நகரமுடியாத நிலையை அடைந்திருப்பதற்கு காரணம் ஜே.வி.பிக்கு கிடைத்த இந்த வெற்றிதான் என்பதில் சந்தேகப்பட எதுவுமில்லை. சமாதான முயற்சிகளுக்குப்பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே.க ஆதரவளிக்கிறது. பேச்சுவார்த்தைகளுக்கு விரும்பியோ விரும்பாமலோ வரவேண்டிய தேவையுடன் சனாதிபதி சந்திரிகா உள்ளார். ஆனால் ஜே.வி.பியின் மிரட்டலே அதற்குச் சவாலாக உள்ளது.

சு.க வின் கூட்டு இன்று 39 நாடாளுமன்ற உறுப்பினர்களை ஜே.வி.பி பெற்றிருக்கமுடியாது என்றாலும் சமாதான முயற்சியொன்றை முன்னெடுக்கப்போய் ஜே.வி.பி வெளியேறுமாயின் தம்மைவிட ஜே.வி.பி யினர் தேசப்பற்றாளராகிவிடுவரோ என சிறிலங்கா சுதந்திரக் கட்சி அஞ்சுகிறது. இதன் காரணமாக ஜே.வி.பியைஎதிர்த்துக் கொண்டு பேச்சுவார்த்தைகளுக்கு வர அது தயங்குகிறது.

இந்நிலையில் ஜே.வி.பியின் செயற்பாடுகள் எவ்வாறாயினும் தற்பொழுது இடம்பெற்றுவரும் சமாதான முயற்சிகளைச் சீர்குழைப்பதே அதன் நோக்கம் என்பதை வெளிப்படுத்துகிறது. அது விடுதலைப் புலிகளையும், ஐ.தே.க வையும் மட்டுமல்ல நோர்வே அனுசரணையாளர்கள், சமாதான முயற்சிகளையும் நிதிவழங்கலையும் இணைத்துப்பார்க்கும் உதவி வளங்கும் நாடுகள், வெள்ளையர்கள் என அனைவரையும் திட்டித் தீர்க்கிறது. திருகோணமலை மாவட்டத்தில் நேரடியாகவே தமிழ்மக்கள் மீது ஜே.வி.பி வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டது. சிறிலங்கா சுதந்திரக்கட்சியை பேச்சுவார்த்தைக்குச் செல்லவிடாது மிரட்டுகிறது. எனவே இவ்வாறான நடவடிக்கைகள் எல்லாம் அது அமைதிமுயற்சியை சீர்குலைத்து யுத்தத்திற்குத்தள்ளும் நோக்குடனேயே மேற்கொண்டு வருகிறது என்பதில் சந்தேகத்துக்கு இடமில்லை.

**வேலவன்**

---

## நேர்நோக்கு

# அபிவிருத்திப் பணிகள் மக்கள் நலனுக்கே

தமிழ் மக்களுக்கான உரிமைகள் என்பது முடிவுகள் ஏதுமின்றியும் தீர்வுகள் எவையுமின்றியும் சமாதானப் பேச்சுக்கள் நீண்டு செல்கின்றன போலவே, அடிமட்ட வறியமக்களின் வாழ்வு தொடர்ந்தும் அவலங்களையும் அழிவுகளையும் சந்தித்தவண்ணம் உள்ளனர். இவ்வாறு பாதிக்கப்பட்ட அது மக்களுக்கு அரச உதவிகள் என்பது முற்றாகவே கிடைப்பதில்லை. இது ஒருபுறமிருக்க இந்த சமாதான காலத்தில் ஒருசில சர்வதேச நிறுவனங்கள் தம்மை விளம்பரப்படுத்தும் நோக்கில் பல விளம்பரங்களைச் செய்துவிட்டு மக்களுக்கு உதவி செய்வதாகக் கூறிவிட்டு அவை எந்த உதவிகளையும் செய்யாது மக்களை ஏமாற்றிச்செல்கின்றது. ஏதோ ஒரு சில நிறுவனங்கள் தொடர்ந்து உதவிகளை செய்து வருகின்றன. இவை தவிர ஒருசில நிறுவனங்களின் உதவிகள் மக்கள் தேவைகளைப்பூர்த்தி செய்யக்கூடிய வகையில் இல்லாது வேலைகள் என்ற தேவையை நோக்காக கொண்டு ஆரம்பிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இதனால் பெரும்பாலான அடிமட்ட மக்கள் வாழ்கின்ற பின்தங்கிய கிராமங்கள் மீண்டும் ஒரு இருட்டில் தள்ளப்பட்டு வருகின்றன.

இவ்வாறு முல்லைத்தீவு மாவட்டத்தின் மிகவும் பின்தங்கிய கிராமங்களை கொண்ட மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவிற்கு உட்பட்ட கிராமங்களுக்குச் சென்று அந்தக் கிராம மக்களின் நிலை தொடர்பாகவும் அவ்விடங்களில் மேற்கொள்கின்ற அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பாகவும் பார்வையிட்டு அப்பகுதி அமைப்புக்களுடனும் மக்களிடமும் கேட்டறிந்த போது அவர்களின் அவல வாழ்வு தெட்டத்தெளிவாகத் தெரிய வருகின்றது. அதாவது மாந்தை கிழக்கு உதவி அரச அதிபர் பிரிவில் உள்ள 15 கிராம சேவகர் பிரிவுகளிலும் 3733 குடும்பங்களை கொண்ட 16431 அங்கத்தவர்கள் உள்ளனர். இவர்களுடைய போக்குவரத்து, பொருளாதாரம், மருத்துவம், என்பது மிகவும் பின்தங்கிய நிலையில் உள்ளன. இவற்றை மேம்படுத்த அல்லது தீர்ப்பதற்கான எந்த நடவடிக்கைகளும் இதுவரையில் மேற்கொள்ளப்படவில்லை. கிராம ரீதியாக உள்ள சனத்தொகை என்ற அடிப்படையில் வன்னி விளான்குளத்தில் 167 குடும்பங்களும் அம்பாள்புரத்தில் 349 குடும்பங்களும் கொல்ல விளான் குளத்தில் 220 கும்பங்களும், ஒட்டறுத்த குளத்தில் 237 குடும்பங்களும், சிவபுரத்தில் 224 குடும்பங்களும். பாலிநகரில் 571 குடும்பங்களும் கரும்புள்ளியானில் 237 குடும்பங்களும் பூவரசன்குளத்தில் 226 குடும்பங்களும் பாண்டியன்குளத்தில் 453 குடும்பங்களும் செல்வபுரத்தில் 247 குடும்பங்களும் மூன்று முறிப்பில் 249 குடும்பங்களும் நட்டாங்கண்டலில் 269 குடும்பங்களும் விநாயக புரத்தில் 161 குடும்பங்களும் பொன்நகரில் 103 குடும்பங்களும் சிறாட்டிக் குளத்தில் 60 குடும்பங்களும் உள்ளன. இவற்றில் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தித் திட்டங்கள் பற்றி நோக்குவோமாயின் கல்வியை வளம்படுத்தும் நோக்கில் மேற்கொள்ளப்படும் அபிவிருத்தி திட்டங்களை எடுத்துக்கொண்டால் 2002,2003 நிகொட் திட்டத்தின்கீழ் பாண்டியன்குளம் மகாவித்தியாலயத்தில் அமைக்கப்பட்ட இரு வகுப்பறை கட்டடத் தொகுதிகளும் அமைக்கப்பட்டு ஒருவருடமாகியும் இதுவரையில் கையளிக்கப்படவில்லை. 2004 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டு வரும் நூலகக்கட்டடம் மற்றும் வகுப்பறைத் தொகுதி என்பன அமைக்கப்பட்ட குறையில் கட்டட வேலைகள் இடைநிறுத்தப்பட்டு ஆறுமாதங்களுக்கு மேலாகிவிட்டது. இதே போன்றுதான் இப்பகுதியில் உள்ள அனைத்து அபிவிருத்திப் பணிகளும் பாடசாலைகள் முற்றுமுழுதாக அமைக்கப்படாது இடைநிறுத்தப்பட்டுள்ளன. அல்லது இழுத்தடிப்புச் செய்யப்படுகின்றன. இதனால் தற்பொழுது பெய்துவரும் பருவமழையினால் பெருமளவான பாடசாலைகளில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாதநிலை. இவை தவிர ஆசிரியர்கள் தங்கியிருக்க ஆசிரியர்களுக்கான விடுதியின்மை போன்ற பல்வேறு பிரச்சினைகளுக்கு நேரடியாக முகம் கொடுத்து வருகின்றனர்.இவை ஒருபுறமிருக்க ஏனைய அபிவிருத்திப் பணிகளை எடுத்துக்கொள்வோமாயின்,

கரும்புள்ளியான் பிரதேசத்தை எடுத்துக்கொண்டால் 237 குடும்பங்களைக் கொண்ட 1029 அங்கத்தவர்கள் உள்ள நிலையில் மருத்துவ வசதியில்லை. கல்விவசதியில்லை. அடிப்படை முன்பள்ளி கல்வியை மேம்படுத்தும் வகையில் ஒருசீரான முன்பள்ளியில்லை. தற்காலிக முன்பள்ளி ஒன்று இயங்கிய நிலையில் அண்மைநாட்களாக பெய்த பெருமழையினால் அதுவும் பழுதடைந்துள்ளது. இது சம்பந்தப்பட்டவர்கள் எவரும் இதில் கவனமெடுக்கவில்லை. இப்பகுதி பருவ வரட்சிக் காலங்களில் குடிநீர் தட்டுப்பாடு என்ற பெரிய பிரச்சினையை எதிர்கொள்ளுகின்ற நிலையில் ஒரு வெளிநாட்டுநிறுவனநிதியுதவியுடன் மூன்று கிணறுகள் அமைப்பதற்கான நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள நிலையில் அதனை நடைமுறைப்படுத்தும் ஒப்பந்தகாரர்கள் குடிநீர் தேவையான பிரதேசத்தில் கிணறுகளை அமைக்காது பாண்டியன்குளம் பொதுச்சந்தைப் பகுதியில் குளத்தின் உட்பகுதியில் நீர்மட்டம் மேலுள்ள பகுதியில் அதுவும் குடிநீர் தேவையற்ற பகுதியில் ஒரு கிணறும் மக்கள் குடியிருப்பு அற்ற பகுதியில் ஒரு கிணறும் கரும்புள்ளியான் குளத்தின் உட்பகுதியில் ஒருகிணறும் என் நீர்மட்டம் மேலுள்ள பகுதிகளில் இக் கிணறுகள் அமைக்கப்பட்டு வருகின்றன. ஆனால் இக்கிணறுகளுக்கு ஒதுக்கப்பட்ட நிதியுடன் ஒப்பிடுகையில் தற்பொழுது கிணறுகள் அமைக்கப்பட்டிருக்கின்ற இடங்களில் கிணறுகள் அமைப்பதற்கு மூன்றில் ஒரு பகுதி நிதிபோதுமானது என்றே கூற வேண்டும். மக்களின் தேவைகளை பூர்த்திசெய்யக்கூடிய வகையில் மக்கள் தேவைகள் இனங்காணப்பட்டு அதற்கமைவாகவே அபிவிருத்திப் பணிகள் மேற்கொள்ள வேண்டிய நிலையில் தேவைகளை பூர்த்திசெய்யக்கூடிய வகையில் அக்கிணறுகள் அமையவில்லை. இது தொடர்பாக அப்பகுதி மக்களும் அக்கிராமத்தில் இருந்து தெரிவு செய்யப்பட்ட புனரமைப்புக் குழுவும் இச்செயற்பாடு பற்றி விசனம் தெரிவித்துள்ளனர். இதில் சம்பந்தப்பட்ட ஒப்பந்தகாரர் கவனத்தில் கொள்ள வேண்டும் என்றும் கருத்து வெளியிட்டுள்ளனர். இதேபோன்றுதான் ஏனைய அபிவிருத்திப் பணிகளும், உலக உணவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் கீழ் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு ஏழு வீதிகள் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இதில் எந்த வீதியும் ஒரு ஒப்பந்தக்காரரினாலும் முழுமையாக புனரமைப்புச் செய்யப்படாது உள்ளன. இதனால் இவ்வீதியை அன்றாடம் பயன்படுத்தும் மக்கள் பயன்படுத்த முடியாதநிலையில் உள்ளனர். இதுவரையும்



காலத்தை இழுத்தடித்த ஒப்பந்தகாரர்கள் தற்பொழுது பருவமழையை காரணம் காட்டினாலும் அதனுடைய ஒப்பந்த காலம் முடிவடைந்து மூன்று மாதகாலத்தை தாண்டிவிட்டது. இவ்வாறு அபிவிருத்திப் பணிகள் அசமந்தப்போக்கில் நகர்ந்து செல்வதனால் எமது மக்களின் கஷ்டங்களை மேலும் வளர்த்துச் செல்வதாகவே காணப்படுகின்றது. எனவே எந்த உதவிகளையும் மேற்கொள்பவர்கள் மக்களை நேசித்து மக்களின் நலன்களில் அக்கறை உடையவர்களாக செயற்பட வேண்டும் என்பதே எல்லோரினதும், எதிர்பார்ப்பாகும்.

**சு.பாஸ்கரன்**


# இந்திய -ரஷ்ய உறவு உணர்த்தப்போவது என்ன?

ரஷ்ய- இந்திய நட்பு நீண்டகாலப் பாரம்பரியத்தைக்கொண்டது. சோவியத் யூனியன் காலத்திலும் அதற்குப்பின்பும் இரு நாடுகளும் பரஸ்பரம் ஒன்றில் ஒன்று தங்கியிருக்கின்ற இராணுவ, பாதுகாப்பு சார்ந்த அரசியல் கொள்கையைக்கொண் டுள்ளது. அத்தகைய உறவு சோவியத் தின் சரிவுக்குப் பின்பு குறைந்ததுபோன்று காணப்பட்டதுடன் இரண்டு அரசுகளுமே வேறுவேறு திசைகளைநோக்கி நகர்ந்தி ருந்தன. ஆனால் மீண்டும் ர ஷ்யாவின் அரசியலில் புட்டினும், இந்தியாவில் காங் கிரஸ்ஂம் ஒரேகாலத்தில் ஆட்சிக்கு வந்திருப்பதுடன் தற்போதைய காங்கிரஸ் தலைமை நேரு, காந்தி கொள்கையை மீளவலியுறுத்துவதாகவே அமைத்துள்ளது. புட்டினின் இந்திய வருகையின் அரசியலைப் பரிசீலிப்போம்.

புட்டினின் இந்திய வருகை என்று மில்லாத அளவுக்கு முதன்மைப் படுத்தப்பட்டிருந்தது. அவரது விஜயத் தினையும் மேற்கொள்ளப்பட்ட உடன் பாடுகள் பற்றியும் வெளியிடப்பட்ட கருத் துக்கள் பனிப்போர்க்கால நிலைமைக்கு ஒப்பான உறவாகப்பேசப்பட்டது. பனிப் போர்க்கால உறவுகளை மீளவும் புதுப் பிக்கவே புட்டின் இந்தியா வருகை புட்டினுக்கு தமது அண்டவெளி தொழில்நுட்ப மையங்களை காண் பித்ததும் அவற்றின் முக்கியத்துவத்தை இந்தியா எந்தளவுக்கு உயர்வாக பராமரிக்கின்றது என்பதையும் இது காட்டுகின்றது. மேலும் ரஷ்யாவுக்கு தேவையான தகவல் தொழில்நுட்பத்தை பெறுவதற்கான உபாயங்களைக் கொண்டிருந்த புட்டினின் போக்குக்கு ஏற்றவிதத்தில் இந்திய செயல் பட்டதுடன் ரஷ்சிய அதிகாரிகளை திருப்திப்படுத்துவதில் இந்தியத்தரப்பு கவனம் செலுத்தியிருந்தது. இவ்வாறு தகவல் தொழிநுட்பத்தை பெறுவ தற்கான மார்க்கங்களை கையாண்டு இரண்டு அரசுகளும் மிகநெருக்கமான உறவினை ஏற்படுத்திக்கொண்டன.

பொருளாதாரத்தைப் பொறுத்த மட்டில் வர்த்தகம் பிரதான வழிமுறை யாக அமைந்திருப்பதுடன் தகவல் தொழில்நுட்பத்தைக்கொண்ட தகவல் பொருளாதாரத்தை ஒன்றிணைப்பதில் ரஷ்யா வெற்றிகண்டது. 2003களுக்குப் பின்பு வர்த்தகம் மற்றும் ஏற்றுமதியில் ஆரம்பித்த புள்ளியிலிருந்து படிப்படியாக வளர்ந்துவரும் ரஷ்யா 2004 முதல் மூன்று மாத காலப்பகுதியிலேயே 4.2 இரண்டு அரசுகளிடமும் காணப்படும் ஆயுத ரீதியான தொடர்பினை விரிவாகவும் ஆரோக் கியமானதாகவுமே அமைந்துள்ளது. இதனால் இந்தியா மிக நேர்த்தியாக ரஷ்யாவுடன் தனது இராணுவ விடயங்களை பரிமாற்றவோ பேணவோ விரும் புகின்றது. அந்த வகையின் கடல் பாதுகாப்பு விட யத்தை இரண்டு அரசுகளாலும் எட்டப் பட்டுள்ளது.

எனவே புட்டினின் இந்திய வருகை இரண்டு நாடுகளுக்குமே அதிக பயனுடையதாக அமைந் திருந்தது. இதனால் இரண்டு அரசுகளும் நெருக்கமடைந்துள்ளன என்பதையும் பனிப்போர்க்கால நெருக் கத்தை அடைந்துள்ளது எனவும் கூறப்



ஒரு பக்கமும், நேட்டோவின் ஆதிக்கம் மறுபக்கமாகவும் சோவியத் முன்னாள் குடியர சுகள் சூறையாடப்படுகின்றன. இதனால் தனது பிராந்தியத் துக்குள் ஏற்பட்டுள்ள நெருக்க டியையும் வெற்றிகொள்ளவே புட்டின் இந்தியாவை இக் காலத்தில் தேர்ந்தெடுத்ததுடன் உக்ரையினை இரண்டாக



தந்ததாக இந்திய ஊடகங்களும், ரஷ்ய ஊடகங்களும் தெரிவித்திருந்தன. அந்தளவுக்கு இரண்டு நாடுகளும் நெருக்கமடைந்ததுடன் தொழில்நுட்பம், பொருளாதாரம், மற்றும் இராணுவ, பாது காப்பு விடயங்களில் பல உடன்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

குறிப்பாக தொழில்நுட்ப ரீதியில் இரண்டு அரசுகளும் சில தனித்துவமான விடயங்களில் வளர்ச்சியடைந்துள்ளன. ரஷ்யாவைப் பொறுத்தவரை அண்டவெளி தொடர்பான தொழில்நுட்பத்தில் அதிக மாறுதலையும், முன்னேற்றத்தையும் கொண்டிருப்பதுடன் இந்தியாவுக்கு அவ்வகையான தொழில்நுட்பம் அத்தியா வசியமானவையாக உள்ளன. அவற்றைப் பொறுத்தது மட்டுமன்றி ஏற்கனவே இந்தியா தயாரித்துள்ளவற்றினை நவீனமயப்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு இந்தியா செயல்படுகிறது. சதவீதமான உள்நாட்டு வளர்ச்சியை எட்டியிருந்த இந்த வளர்ச்சிவீதம் 1990 களுடன் ஒப்பிடும்போது மிக உயர்வான வளர்ச்சி என்பதில் சந்தேகம் கொள்ளத் தேவையில்லை. இதுவே இந்தியாவுடன் நெருக்கமடைவதற்கு ஊடாக அடைய விரும்பும் அம்சமாக உள்ளது. புட்டி னின் நோக்கம் ரஷ்யப் பொருளாதார த்தை நிமிர்த்துவதாகவேயுள்ளது.

அடுத்து மிகப்பிரதானமானது பாதுகாப்பு தொடர்பான உடன்படிக் கையும் உறவும் குறிப்பிடத்தக்க நெருக் கத்தை ஏற்படுத்தியுள்ளது. இரண்டு நாடுகளாக இராணுவ, ஆயுத தளபாட வளர்ச்சியில் வேறு வேறுபட்ட அளவி லும், தரத்திலும் முக்கியம் பெறு கின்றதுடன் ரஷ்யாவின் ஆயுத தள பாடம் சார்ந்த வளர்ச்சி அதீதமாக உள் ளது. இதனால் அத்தகைய வளர்ச்சியை இந்தியா பெறுவதுடன் பாரம்பரியமாக பட்டது. இந்தியாவை ஐ.நாவில் நிரந்தர அங்கத்துவத்துக்கு புட்டின் சிபார்சு செய்த துடன் ஆட்சேபனையின்றி ஐ.நா. சபையில் வலியுறுத்துவதாகவும் புட்டின் கூறியுள்ளார்.

புட்டின் முதல்தடவை ஆட்சிக் காலம் முடிந்து இரண்டாவது காலப் பகுதியிலேயே இந்தியாவுடன் மிக நெருக் கம் கண்டுள்ளார். இதற்கு ஏற்கனவே வலது சாரி பி.ஜே.பி ஆட்சியிலிருந்ததையும் கார ணமாக அமைந்தாலும் சமகால உலகளா விய அரசியல் போக்கே மிகப்பிரதான காரணியாக உள்ளது. புட்டின் வேகத்து டனும், விவேகத்துடனும் தனது அயல் பிரதேசத்தை அணுகவேண்டிய நிலைக்குள் அவரது பிராந்தியம் அகப்பட்டுள்ளது. அதனை சற்று விரிவாக நோக்குவோம்.

கடந்தவாரம் இதேபத்தியில் ஐரோப் பிய யூனியன் எப்படி உக்ரையினை நாடி நகர்வுகளை செய்துவருகின்றது. என்பது

**ஐங்கரன்**

தெளிவுபடுத்தப்பட்டிருந்த அதுமட்டுமன்றி ஐரோப்பிய யூனியன் அரசியல் ஆதிக்கம் போட்டிக்கான நகர்வுகளை சாதகமாக்கி விட்டுள்ளது என்பதையும் கோடிட்டு காட்டப் பட்டது. அதன் இன்னோர் தொடர்ச்சியாகவே புட்டினின் இந்திய நகர்வு சாத்தியப்பட்டது.

புட்டினைப் பொறுத்தவரை உக் ரைனை இழப்பது ரஷ்யாவுக்கும் அப் பிராந்தியத்திற்கும் ஆபத்தானது. அதனால் உக்ரையின் ஐரோப்பிய யூனியனிடம் மண்டி யிடக்கூடாது என்பதில் கவனம் கொண் டுள்ளார். அதுமட்டுமன்றி உக்ரைனால் ஐரோப்பாவுடன் கொண்டிருந்த புரிந்துணர் வையும் நெருக்கத்தையும் உறவையும் புட்டின் உடைக்கத்தயாராகிவிட்டதுடன் முழுமையாக ஐரோப்பிய யூனியனை எதிர்க் கும் போராட்டத்தில் புட்டின் குதிக்க வேண்டிய நிலைக்கு வந்துவிட்டார். இத னால் மாற்று சக்தியாக ஐரோப்பிய யூனியன் நாடுகளுடன் கொண்டிருந்த பொருளாதார தொழில்நுட்ப உறவுகளை இந்தியா பக்கம் திருப்புவதுடன் பலமான புவியியல் ரீதியான தொடராக இந்தியா-சீனா- ரஷ்யாவை ஏற் படுத்தவிரும்பும் புட்டின் அதனை நோக்கியே நகர்ந்துள்ளார்.

ஐரோப்பிய யூனியனின் ஆதிக்கம் உடைத்தாலும் அப்போராட்டத்திலிருந்து ரஷ்யா பின்வாங்காது என்பதே இதன் மறு பிரயோகமாகும். அதனையே இந்தியா வுக்கு வருகைதந்த புட்டின் வெளிப் படுத்திய செய்தியாகும்.

ஐரோப்பிய யூனியனை எதிர்க்கும் அணியைப்பற்றி எண்ணப்பாடு புட்டினுக்கு ஏற்பட்டுவிட்டது. ஏற்கனவே இந்தியா ஐரோப்பிய யூனியன் நாடுகளுடன் பொரு ளாதார நெருக்கத்தைப்பேண முயன்று தோற்றுபோனதால் ஆசியா நாடுகளை நாடி செயற்பட்டுவருகிறது. இதுவே ஆசியான் இந்திய உச்சி மாநாட்டுக்கு அடிப் படையான காரணியாகும். இவ்வாறான போக்கினை புரிந்துகொண்ட புட்டின் இந்திய சார் நிலையிலான முடிவுகளை சாத்தியப்படுத்துவது உசிதமானதெனக் கருதியது. எனவே உக்ரையின் விட யத்தில் ஒரு போராட்டத்துக்கு தயாராகும் புட்டின் அதற்கான ஆதரவை திரட்டுகின்ற நோக்குடனேயே செயல்படுகிறார்.

இந்தியா-சீனா-ரஷ்யா என்ற நெருக்கம் பற்றிய உரையாடல் கடந்த இரண்டு ஆண்டுகளாக நிகழ்ந்துவருவதுடன் இவற்றுக்கு மிடையே பொருளாதார தொழில்நுட்ப அடிப்படையில் மிக நெருக் கம் விரியத்தொடங்கிவிட்டது. இந் நெருக்கம் படிப்படியாக அதிகரிக்கும் உல கச் சூழலே சாத்தியப்பட்டுக் கொண்டு செல்கிறது. இதனால் ஐரோப்பிய சந்தை ஐரோப்பாவுக்குரியதாக மாறிப்போவதுடன் புதிய பொருளாதார வருகையின் முக்கி யத்துவம் ஏற்பட வாய்ப்புத் தோன்றலாம்.

எனவே புட்டினின் விஜயம் சாதா ரணமான உறவுக்கானதல்ல. மிக நீண்ட கால நட்புநாடுகளாக இருந்தாலும் பிராந் திய, உலகளாவிய பதட்டத்தை முறி யடிக்கும் நோக்கில் நிகழ்த்தப்பட்ட அரசி யலாகவே உள்ளது. இராணுவ, பொரு ளாதார, தொழில்நுட்பம் சார்பான மிரட்ட லுக்கெல்லாம் அடிபணியாதபுட்டின்மாற்று வழிமுறையூடாக சூழலை கையாள முனைந்துள்ளார். இத்தகைய முயற்சி ஆசிய நாடுகளுக்கும் மேற்குக்கு எதிராக செயல்படும் நாடுகளுக்கும் சாதகமான தாகவே காணப்படும் இதனூடாக உக்ரைன் விடயத்தை பிற்போட அல்லது காலத்தை ஒத்திப்போட்டுவிட்டு செயல்பட ஐரோப்பிய யூனியன் முயல்வதுபோல தென்படுகிறது. ●

# ஈழத்து தமிழ் அறிஞர் வரிசையில்

# கைலாசபதி ஒருகால சங்கமம்

பேராசிரியர் கைலாசபதி உலகறிந்த தமிழறிஞர். ஆய்வாளர். அவருடைய புலமையாற்றல் கண்டு அதனை அன்றைய காலத்தவர்க்கு ஏற்ற வகையிலே தெளிவாக எடுத்துக் கூற வேண்டியது எமது கடனாகும். தான் வாழும் காலத்தில் தமிழ் மொழியின் சிறப்பை உலகு அறியும் வண்ணம் செயற்பட்டவர் கைலாசபதி. கடந்த காலங்களில் கைலாசபதி பற்றிய பன்முகப்பட்ட பார்வைகள் தோன்றியுள்ளன. ஆனால் இன்று உலகப் போக்கின் வழிநின்று அவருடைய தமிழ்ப்பணியைக் கணிப்பீடு செய்யும் நிலையும் தோன்றியுள்ளது. இருபத்தொராம் நூற்றாண்டின் இலக்கிய முயற்சிகளிலே கைலாசபதியின் இலக்கியப் பணியை அதன் செம்மைசார் செல்நெறியைத் தெளிவுறக் காண்பதே இக்கட்டுரையின் உள்ளடக்கமாகும். அவருடைய பல்வேறு இலக்கிய முயற்சிகளுள்ளே ஒன்றை மட்டும் எடுத்து உற்று நோக்குவதே இவ்வுரையின் இலக்காகும். வருங்கால இலக்கியப் பணிகளுக்கு அது வழிகாட்டும் என்ற நம்பிக்கையை ஊட்டுவதே இக்கட்டுரையின் பண்பும் பயனுமாகும்.

### *கைலாசபதியின் தமிழாய்வுச் செல்நெறி:*

பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியும் விருப்பும் கைலாசபதியைச் சங்க இலக்கிய ஆய்விலே ஈடுபடுத்தின. அவர் இளம் விரிவுரையாளராக பணி செய்யும் காலத்திலே சங்க இலக்கியங்களை நுணுகிப் பார்க்கும் ஆர்வத்தை ஊட்டும், கற்பித்தல் முறையொன்றை அறிமுகம் செய்திருந்தார். ஆங்கில நாவல், திரைப்படம் போன்றவற்றின் செல்வாக்கால் அவர் செய்யும் இலக்கிய விளக்கம் புதுமையானதாக இருந்தது. ஏறக்குறைய இரண்டாயிரம் ஆண்டுக்கு முன்னே தோன்றிய சங்கப் பாடல்களைக் காட்சி நிலையாகக் காட்டும் அவருடைய கற்பித்தல் முறை திரைப்பட உத்தியைப் பின்பற்றிய விவரணப் பாங்காக இருந்தது. அவருடைய விரிவுரைகளிலே நேரில் இவ்வனுபவம் பெற்றவர் என்ற வகையில் அத்தகைய கற்பித்தல் முறையை ஜப்பானிய மாணவர்களுக்குச் சங்கப் பாடல்களைக் கற்பிக்கும் போது நானும் அவர்வழி நின்று பணி செய்துள்ளேன்.

சங்க இலக்கியம் பற்றிய கைலாசபதியின் கூர்ந்த நோக்கு அவரை ஒப்பீட்டாய்வுக்கு அழைத்துச் சென்றது. இலக்கியப் பயிற்சியும் ஆங்கிலப் புலமையும் துணை நிற்க அவர் ஒப்பீட்டாய்வுக் களத்திலே துணிந்து இறங்கினார். பல்கலைக்கழக பதவி உயர்வுக்கான மேற்பட்டத்தின் தேவையும் அவரை உந்தித்தள்ள அவர் மேலைத் தேசத்துப் பல்கலைக்கழகத்திலே கலாநிதிப்பட்டத்திற்கான ஆய்வைச் செய்து பட்டம் பெற்றார். பண்டைய தமிழ்ப் பாடல்களான சங்கப் பாடல்களைப் பண்டைய கிரேக்கப் பாடல்களுடன் ஒப்பிட்டு அவர் செய்த ஆய்வு அவருடைய இலக்கிய முன்நோக்கைத் துல்லியமாகக் காட்டுகிறது. தமிழ் மொழியின் தொன்மைக்கும் சிறப்புக்கும் சான்றாக விளங்கும் சங்க இலக்கியத்தைக் கைலாசபதி ஒரு தொல்லியல் பார்வைக்கு உட்படுத்தினார். சங்க இலக்கியத்தின் பழமையை வரலாற்று நிலையிலே எடுத்துவிளக்க முற்பட்டார். இதற்கு தனக்கு முன்னே சங்க இலக்கியம் பற்றி ஆய்வு செய்தோர் கருத்துக்களை எல்லாம் தொகுத்து நோக்கி அவற்றிலிருந்து வேறுபட்ட புதிய செல்நெறியிலே தமிழியல் ஆய்வை வழிப்படுத்தினார். சங்க காலத்தினை வீரயுகமாகக் கொண்டு சங்கச் செய்யுளை யாத்தவர்களை வகைப்படுத்தினார். அந்த வகைப்பாடு பாவாணர், அகவுநர், புலவர் என முத்திறத்தவரை தெளிவாக இனங்காண உதவிற்று. அக்காலத்து வாழ்வியலில் இம்மூன்று திறத்தோரும் தொடர்புற்றிருந்த வகையை அறியப் பெரிதும் உதவியது.

சங்கப் பாடல்களை வகைப்படுத்தி ஆய்வுசெய்யவும் இது வாய்ப்பாக இருந்தது. பாவாணர்கள் குழுவாகவும், தனியாகவும் இயங்கினர். இவர்களுள் பாணர், பொருநர், பாடினியர் போன்ற இசைவல்லாரும் கூத்தரும் அடங்குவர். அகவுநர் யாப்பு அமைத்துச் செய்யுள் இயற்றிப் பாடினர். புலவர் குழுவில் அறிவுடைய சான்றோர் அடங்கினர். இத்தகைய பிரிப்பு முறையை கிரேக்க பாவாணர்களோடு ஒப்பிட்டுக்காட்டிய கைலாசபதியின் ஆய்வு, பிறமொழி இலக்கியங்களோடு தமிழ் இலக்கியங்களை ஒப்பிடும் ஆய்வு நெறிக்கு முன்னோடியாக அமைந்தது என்றால் மிகையாகாது.

சங்கச் செய்யுட்களைத் தொகுத்தோர் இத்திறத்தோரை இனம் காட்ட முயன்றபோதும் அது தெளிவானதாக இல்லை. பாடல்களை பாடியவரை இனம் கண்டு பாடல்களைத் தொகுத்து நோக்கும்போது அக்கால மக்கள் வாழ்வியல் காட்சிகளைத் தெளிவாகச் சொல்லோவியங்களாகக் காணமுடிகிறது. மேலும் இப்புதிய தொகுப்பு மூலம் பாடல்கள் காட்டும் ஒரே வீர யுகத்தை வெளிப்படுத்தினார். அந்த வீர யுகத்திலே சான்றோர் யார் என்பதை விளங்க வைத்தார். 'சான்றோர்' என்ற சொல்லின் பொருட்செறிவை ஆராய்ந்து வீரயுகப் பாடல்களிலே இச்சொல் போர்வீரர், துணிவுமிக்கோர், வீரத் தலைவர் என்னும் பொருள்களிலே கையாளப்பட்டுள்ளதை எடுத்துக் காட்டினார்.

### *கைலாசபதியின் முன்நோக்கு*

கைலாசபதியின் சங்க இலக்கிய ஒப்பீட்டாய்வு புறவாழ்வின் இயல்பினைத் தெளிவாக்கிற்று, சங்கப் புறப்பாடல்களே தரவாகக் கொண்டு செய்யப்பட்ட அவருடைய ஆய்வு, பாடல்களை ஆவணப்படுத்தியிருந்த செய்திகளின் மதிப்பீடாகவும் அமைந்தது. பாடல்கள் கூறும் செய்திகள் கூற்று நிலையிலே அமைந்துகிடந்த பாங்கு அவரை காலத்தை முன்நோக்கிப் பார்க்கத் தூண்டியது. தன்னுடைய நுணுகிப் பார்க்கும் திறன் கொண்டு பாடல்களைப் பார்த்தபோது ஒரு வீரயுகம் இருந்ததைத் தெளிவாக அறிந்து கொண்டார். 'புறநானூறு', 'பதிற்றுப் பத்து' என்னும் தொகுப்பிலே வீரம் பற்றிய செய்திகள் கூறப்பட்டிருந்தன. அச் செய்திகளிலே போர், வீரச் செயல், கொடை, அழிவு, உயிரிழப்பு, தற்கொடை, மறவர் வழிபாடு போன்றவை பேசப்பட்டிருந்தன. அவற்றையெல்லாம் படிக்கும்போது அக்காலத்தின் தேவையொன்று இருந்ததையும் உணர்ந்து கொண்டார். மண்மீட்பும், நாடுகாவலும், அதிகாரப்பரவலாக்கமும் போர் நடைபெறக் காரணிகளாக இருந்தன. இந்நிலை பிற்காலத்திற்கும் தேவையானதாகலாம் என்ற சான்றோரின் முன்நோக்கு கைலாசபதிக்குத் தெளிவாகத் தெரிந்தமையால் சங்க இலக்கியப்பாடல்கள் காட்டும் காலத்தை 'வீரயுகம்' என்று சிறப்புறுத்திக் காட்டினார்.


தமிழ் வீரயுகத்தை கிரேக்க வீரயுகத்துடன் ஒப்பிட்டுக் காட்டினார். இந்த ஒப்பீட்டின் மூலம் கீழைத்தேச வாழ்வியல் மேலைத்தேச வாழ்வியலைப் போன்றே சிறந்திருந்தது என்று காலத்தைப் பின்நோக்கிப் பார்த்துப் பதிவுசெய்ய முனைந்தார். அவருடைய இந்த ஆய்வுப்பணி பின் வந்த ஆய்வாளருக்கு பெரியதொரு திறவுகோலாயிற்று.

கைலாசபதியின் ஆய்வு, காலம் கடந்த நிலையில் இன்று உலகப் போக்கில் வைத்து நோக்கும் போது தொலை நோக்குடையதாக உள்ளது. தமிழ் இலக்கியத்தின் நிலைபேற்றை அறிய விரும்புவோர் அவர் ஆய்வு பற்றி அறிய விரும்புகின்றனர். அதுமட்டுமல்ல அவர் வழிச்சென்று ஆய்வுகள் மேற்கொள்கின்றனர். சங்க இலக்கியம், தமிழ் மொழியின் தொன்மையான இலக்கியம் மட்டுமல்ல தமிழர் வாழ்வியல் வரலாறு அறிய உதவும் சான்றாகவும் வரலாற்று ஆசிரியர்களால் கணிப்பிடப்பட்டுள்ளது. மூவேந்தர்கள் தமிழகத்தில் ஆட்சி செய்தபோது நடைபெற்ற உள்நாட்டுப் போரையும் போராட்டங்களையும் பற்றிய புறநானூற்றுப் பாடல்கள் கூறும் தமிழர் வாழ்வியல் மரபு மானிடவியல் ஆய்வாளர்களுக்கும் தரவுகளாக உள்ளன. கைலாசபதியின் முன்நோக்குப் பண்பினை அவர் கூற்றால் விளங்கிக்கொள்வதே சாலவும் சிறந்தது.

"தமிழரைப் போன்று பழைய இலக்கியச் செல்வம் படைத்த பிற சமூகமக்கள் சிலரின் இலக்கிய வரலாற்றைப் படிக்கும் பொழுது பொதுவாகச் சமுதாயத்திற்கும் இலக்கியத்திற்கும் உள்ள தொடர்பைப் பற்றியும் சிறப்பாக வீரயுகத்திலே அரசியலுக்கும் புலவருக்குமிருந்த நெருங்கிய பிணைப்பைப் பற்றியும் சில உண்மைகள் எமக்குப் புலனாகின்றன. பண்டைய கிரேக்கர், ஜேர்மனியர், கெல்தியர், செமித்தியர் முதலாய இனமக்களும் சான்றோர் இலக்கியத்திற்குச் சமனான இலக்கிய வளம் படைத்தவர்களே. வரலாற்றுத் தொடக்கக் காலத்திலே அம்மொழிகளிற் பாடிய புலவரும் அரசவைகளிலே வீற்றிருந்து செய்யுட்கள் யாத்துள்ளனர். தமிழ்ப் புலவரைப் புரவலர் போற்றியதைப் போலவே அப்புலவர்களையும் மன்னர்கள் சிறப்பாகப் போற்றியுள்ளனர்; தமிழ்ப் புலவரைப் போற்றிய பழந்தமிழ் மன்னரின் இலக்கிய ஆர்வத்தையும் வள்ளன்மையையும் தமிழ் இலக்கிய வரலாற்றாசிரியர் பெரிதும் புகழ்வார்."

'பண்டைத்தமிழர் வாழ்வும் வழிபாடும்' என்னும் நூலிலே 'ஆக்கமும் அழிவும்' என்னும் கட்டுரையில் கைலாசபதி மேற்கண்டவாறு எழுதியுள்ளார்.

போர் நிகழ்ச்சிகளால் சான்றோர் எனப் புகழப்பட்ட வீரர் வெறுக்கப்பட்டனர். ஆனால் புலவர் போர்க்களத்திற்கே சென்று வீரரையும் மன்னரையும் உற்சாகப்படுத்தினர். பிற்காலத்திலே தமிழர் சமுதாயத்திலே வேரூன்றிய கொல்லாமைக் கோட்பாட்டை அடிநிலையாகக் கொண்டு வீரயுகப் பாவலர்களையும் மக்களையும் எடை போடுதல் வரலாற்று உணர்வுக்கு முரணான செய்கையெனக் கைலாசபதி குறிப்பிடுகின்றார். பண்டைய வீர உணர்வு மிக்க வாழ்வைப் பாடிய புலவர், வீரர் மன்னனுடன் கொண்டிருந்த நெருக்கமான தொடர்பு நிலையைக் குறிப்பிட்டுள்ளனர். புலவர் வீரர் குடிநிலையுரைத்தல் எனும் பணி செய்த நாட்டுப்பணி செய்யத்தூண்டினர். இப் பண்பு நிலையில் ஔவையார் பாடல் ஒன்றினைக் கைலாசபதி குறிப்பிட்டெழுதியுள்ளார்.



பழந்தமிழ் இலக்கியப் பயிற்சியும் விருப்பும் கைலாசபதியைச் சங்க இலக்கிய ஆய்விலே ஈடுபடுத்தின. அவர் இளம் விரிவுரையாளராக பணி செய்யும் காலத்திலே சங்க இலக்கியங்களை நுணுகிப்பார்க்கும் ஆர்வத்தை ஊட்டும், கற்பித்தல முறையொன்றை அறிமுகம் செய்திருந்தார்.

"இவற்கீத் துண்மதி கள்ளே
சினப்போர் இனக்களிற்றியானை
யியற்றேர்க்குரிசில் நுந்தை தற்தைக்
கிவன்றந் தைநந்தை எடுத்தெறி
ஞாட்பி னிமையான் றச்சன் அடுத்
தெறி குறட்டி னின்றுமாய்ந்தனனே
மறப்புகழ் நிறைந்த மைந்தனோ
னிவனும் உறைப்புழியோலை போல
மறைக்குவன் பெருமநிற் குறித்துவரு
வேலே"

போர்ப்பறை கேட்டு மறவர்கள் குழுமினர். மன்னர் உண்டாட்டு ஒன்றினை நிகழ்த்தினான். அப்பொழுது புலவர்தன் கடமையைச் செய்கின்றார். "மன்னனே இக்கள்ளை முதலில் இவனுக்குத் தந்து பின்னர் நீ உண்பாயாக. இவன் தந்தைக்குத் தந்தை உனது தந்தை தந்தைக்குக் கண்ணிமையானது காத்து தச்சனால் ஆர்க்காலைச்

மனோன்மணி சண்முகதாஸ்

சேர்த்து எறியப்பட்ட குடம்போலப் பகைவர் எறிந்த கலங்களைத்தான் தாங்கி மாண்டான். அவன் பெயரைத் தாங்கும் இவனும் மழையைத் தடுத்துப் பாதுகாக்கும் குடை போல உன்மீது குறிவைத்து எறியப்படும் வேலைத் தான் குறுக்கிட்டுத் தாங்குவான். போர் பல கண்ட வீரப் புகழ் நிறைந்தவன் இவ்விளைஞன்" என்று பாடுகிறார் புலவர். இவ்வாறு தலைவனை உயர்த்தியும் அவனுக்குத் தலைப்பட்டு வாழ்ந்து மடிவதுதான் உன்னதமான குறிக்கோள் என்றும் ஒரு சமூக உணர்வை ஏற்படுத்தினர் அக்காலப் புலவர்கள்.

சங்க காலத்தில் வீரர் சான்றோர் எனப்பட்டனர். அவர் அறப்பண்புடையவர் எனக் கருதப்பட்டனர். பண்டைய வீரரை 'ஹீரோ' எனக் கிரேக்கர் அழைத்தனர். காலப்போக்கில் ஹீரோக்கள் புகழ் பாடிய புலவரையும் ஹீரோ எனலாயினர். ஒதிசி என்னுர் கிரேக்க இலக்கியத்தில் அலக்கினூஸ் என்னும் மன்னன் அவைப் புலவனாகியதொமொதொக்கோஸ் என்பவனைக் காவிய கர்த்தா ஹீரோ என்றே அழைப்பதையும் கைலாசபதி சுட்டிக் காட்டுகிறார். இத்தகைய கருத்து நிலைக்குக் கைலாசபதியை இட்டுச் சென்றது அவருடைய தமிழ்ப்புலமை மட்டுமன்று. அவருடைய மாக்சீயக் கோட்பாடு பற்றியதெளிவும் துணை நின்றது. இதனாலேயே சங்க கால நாகரிகமும் உக்கிரமான போராட்டத்தின் பயனாகும் என்று விளக்கியுள்ளார். இந்த வகையில் கைலாசபதியின் கருத்தினை முன்னெடுத்துச் செல்வோர் அவருடைய சங்க இலக்கியப் புலமை வளத்தையும் மனதிற் கொள்ளவேண்டும். இலக்கிய அறிவினை காலத்திற்கு ஏற்ற வகையில் கையளிப்புச் செய்தவர் கைலாசபதி. அவருடைய சங்க இலக்கியப் புலமை வளத்திற்குச் சிறந்த சான்றாக விளங்குவது வீர வணக்கம் பற்றிய முன்நோக்கான ஆய்வாகும். போரிலே விழுப்புண் பட்டு வீழ்ந்து இறந்த வீரரைத் தெய்வமாக கல்லிலே அமைத்து வழிபட்டதையே சங்க கால மக்களின் வழிபாட்டு மரபு என மாங்குடி மருதன் எனும் புலவர் பாடியுள்ளார்.

(22ஆம் பக்கம் பார்க்க)

தமிழ்மக்கள் மீது காட்டுமிராண்டித்தனத்தை 1990இல் பிரேமதாச அரசு கட்டவிழ்த்துவிட்டது.முதலில் படைகளால் கட்டவிழ்த்துவிடப்பட்ட காட்டுமிராண்டித்தனத்தில் புதிதாக ஒரு கும்பல் நுழைக்கப்பட்டது. அந்தக்கும்பல் முதலில் தீவுக்குள்தான் நுழைக்கப்பட்டது.அது ஒரு தமிழ்க்கும்பல்.

ஈழ விடுதலைக்காக எனக்கிளம்பி பல அமைப்புகள் தடம்புரண்டு தமிழினத்துக்கு துரோகம் இழைத்தன.இவற்றில் ஒன்றிலிருந்து வெளியேறி பிறகு மற்றொன்றிலிருந்து வெளியேறி கடைசியில் அதிலிருந்து வெளியேறி தனித்து ஒரு நபரானார் அந்த மனிதன். அவர் இந்தியாவில் செய்த பணி ஆட்கடத்தல்.இந்திய இராணுவ ஆக்கிரமிப்புக்காலத்தில் இந்திய உளவுப்படையான ரோவினால்




# ஒரு பயணத்தின் மீள்நினைவுகள்...

புளொட்டிலிருந்து பிரிக்கப்பட்டு உருவாக்கப்பட்ட பரந்தன் ராஜன் என்பவர் தலைமையிலான தேசவிரோத அமைப்பினருடன் இந்தியாவில் அலைந்து திரிந்த அந்த நபர் தொடர்புகொண்டார்.பரந்தன் ராஜனின் தொழில் காட்டிக்கொடுப்பு வெளிநாடுகளுக்கு போதைமருந்து கடத்தல்.இந்த பரந்தன் ராஜனுக்கு போதைமருந்து கடத்துவதற்கு ஆள்பிடித்துக் கொடுப்பதையே இந்த நபர் செய்து வருமானமீட்டிக்கொண்டிருந்தார்.

ஒரு சில தனது நபர்களுடன் சேர்ந்து பணயக்கைதிகளாக ஆட்களைக் கடத்தி தமிழகத்தில் மிரட்டிப் பணம் பறிக்கும் வேலையையும் அவர்செய்துவந்தார். 1990 வரை இந்த நபர் தமிழகத்தில் இந்தத் தொழிலை செய்துவந்தார்.இடையில் பரந்தன் ராஜனுடன் ஏற்பட்ட பிணக்கினை அடுத்து அந்த நபருக்கு அவர்செய்த விரோத செயற்பாடுகளால் தமிழகத்திலும் இருக்கமுடியவில்லை. இதனால் அந்த நபர் வேறு தளம் தேடவேண்டி ஏற்பட்டது. இந்தச்சூழலில் சிறிலங்கா அரசுத்தலைவர் பிரேமதாசவிற்கு நம்பிக்கையான ஒரு தமிழ்க்கைக்கூலிப்படை தேவைப்பட்டது. ஏனைய தமிழ் அமைப்புகள் இந்திய அடிவருடிகளாக இருந்தன. இந்திய இராணுவ வருகையுடன் பிரேமதாசவுக்கு இந்தியா தொடர்பான எதிர்ப்புணர்வு இருந்தது. இதனால் பிரேமதாச இந்தியப்படைகளுடன் இயங்கிய அமைப்புகளை முழுமையாக நம்பத்தயாராக இல்லை.அதனால் தனக்கு முழுதான விசுவாசப்படையை உருவாக்க அவர் விரும்பினார். அந்த வேளையில் அநாதரவாக கொழும்பு வந்திறங்கிய அந்த கொள்ளைக்கும்பல் ஒரு அரசியல் கட்சியை உருவாக்கியது. தனது சில சகாக்களுடன் உருவாக்கிய அந்தக்கும்பல் சனநாயகத்துக்கு திரும்பிய ஆயுத அமைப்பு என்ற பெயரில் அது லாபமீட்ட முனைந்தது. சனநாயகத்துக்கு திரும்பல் போர்வை ஒரு இராணுவத்தின் சம்பளம் பெறும் கூலிப்படையாக மாறுதலாகும். இந்த வகையில் ஆரம்பத்தில் இந்தக்கும்பலுக்கு பிரேமதாச அரசு ஆதரவளிக்கவில்லை.

ஏனெனில் அதற்கான தேவையை அவர் உணரவில்லை.யாழ் தீவகத்தில் மக்கள் படைகளிடம் பிடிபட்டபின்னர்தான் அந்த மக்களிடம் அரசியல் செய்ய ஒரு கும்பலின்தேவை பிரேமதாசவினால் உணரப்பட்டது. அந்தவேளையில்தான் பிரேமதாச அந்தக்கும்பலுக்கு கைகொடுக்கத்தொடங்கினார். அந்தக்கும்பலை தமிழ்மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக மாற்றி புதிய ஒரு அரசியல் தந்திரோபாயத்தை அவர் தொடக்கினார். இது இந்தியா பயன்படுத்திய தந்திரம். முதல்தடவையாக அதனை சிறிலங்கா அரசு கையாளத்தொடங்கியதெனில் அது இந்தக் கும்பலுடன் யாழ்ப்பாணம் தீவகத்திலாகும்.

தீவகத்தில அரச நிர்வாகச்சட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டிய அரச அதிகாரிகளின் பணிகள் மூலம் இந்த அரசியல் தமிழ் மக்கள் மத்தியில் அரங்கேற்றப்பட்டது.

1990இன் கடைசியில் அந்தக் கொள்ளைக்கும்பல் சிறிலங்கா கடற்படையினால் தீவகத்தில் கொண்டு வந்து இறக்கப்பட்டது. இந்தக் கும்பல் தமிழகத்தில் அகதிமுகாம்களுக்குச் சென்று அங்கு வதைந்து கொண்டிருந்த தமிழ் இளைஞர்களிடம் பரப்புரை செய்து அவர்களுக்கு நல்வாழ்வளிப்பதாக வாக்களித்து அவர்களை திரட்டி தமது அமைப்பில் இணைத்துக்கொண்டது. அந்த நபர்களுடனும்தான் அந்தக்கும்பல் தீவுக்குள் இறக்கிவிடப்பட்டது.

அந்தக்கும்பல் பெயர் ஈ.பி.டி.பி. அதன் தலைவரான செயலாளர்-டக்ளஸ் தேவானந்தா.

துருவன்




# அனுராதபுர தொல்லியற்சான்றுகளின் காலம்...?


இலங்கைத்தீவுக்கு நீர்ப்பாசனத்தையும், இரும்புப்பயன் பாட்டையும் கொண்டு வந்தவர் விஜயன் என்ற முதல் மனிதன்; எனும் மகாவம்சக் கருத்தின் படியான இலங்கைக்கான சிங்கள வரலாறு கூறுகின்றது.

ஆனால் விஜயன் வருகையின் முன் பெருங்கற்பண்பாடு தோன்றிய கி.மு 1000த்தில் இலங்கையில் தென்னிந்தியாவில் நீர்ப்பாசனம் பயிர்ச்செய்கை ஆரம்பமாகிவிட்டது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள்ளன.

இலங்கையின் முதற் குடியிருப்பு என கி.மு 483 இற்குப் பின் விஜயனின் கூட்டத்தாரில் ஒருவானான அனுராத என்பவனால் உருவாக்கப்பட்டதாக மகாவம்சமும் சிங்கள வரலாறும் கூறும் அனுராத புரத்தில் கி.மு 900 முதல் 1000 வரையான ஆண்டுகளில் விவசாயம் தொடங்கிவிட்டது. இரும்பின் பயன்பாடு தொடங்கிவிட்டது. 1999இல் சிறிலங்கா தொல்லியல் திணைக்கள ஆணையாளர் கலாநிதி சிறான்தெரனியகல இத்தகவலை வெளியிட்டார். அனுராத புரத்தில் 1984 முதல் 1990 வரை அகழாய்வுகளை அவர் மேற்கொண்டார். இதன்போது எடுக்கப்பட்ட தொல்லியற்சான்றுகளை காபன்-14 மூலம் காலக்கணிப்பீடு செய்யப்பட்டது. இதனடிப்படையில் அனுராதபுர தொல்லியற் சான்றுகளின் காலம் கி.மு 900முதல் 1000ஆண்டுகள்வரை தொன்மையானதாகும்.

இந்தக்காலத்தில் விவசாயம் ஆரம்பமாகிவிட்டது. நாகரிகம் வளம் பெறத்தொடங்கிவிட்டது. நகருக்கான கட்டுமானம் முளைவிட்டது. இந்தக் காலம் தமிழர்களின் பெருங்கற்பண்பாட்டுக் காலமாகும். அனுராத புரத்தின் கொண்வேவ எனவும், கொகேவே என்ற இடத்தில் தமிழரின் பெருங்கற் பண்பாட்டு ஈமக்காடு ஒன்று கண்டுபிடிக்கப் பட்டு ஆய்வு மேற் கொள்ளப்படாதுள்ளமை பழைய தகவல். அனுராதபுர தொல் சான்றுகள் காலக் கணிப்பீட்டின் படி அங்கு கி.மு 600 முதல் 700 வரையான காலத்தில் 100 ஏக்கரில் நகரம் கட்டியமைக் கப்பட்டுவிட்டது.


அப்படியானால்



விஜயனின் அனுராத கட்டிய அனுராதபுரம் என்ற தகவலின் உண்மைத்தன்மை கேள்விக்குறியாகி பொய்மை நிறைந்ததாகி விட்டது. அனுராதபுரம் அருவி ஆறை மையமாகக்கொண்டது. கி.மு 1000த்தில் அருவி ஆற்று நீரைக்கொண்டே அங்கு மக்கள் விவசாயம் செய்திருக்கிறார்கள். ஏனெனில் மன்னார் அரிப்பில் அருவி ஆறு முடியும் இடம்வரை அதன் கரைகளில் மக்கள் வாழ்ந்ததற்கான சான்றுகள் அனுராதபுரத்திலிருந்து உள்ளது. அனுராதபுரத்துக்கும் முதன்மையான இலங்கைத்தீவின் முதுநகராக மாந்தை உள்ளது. அது பற்றி தருவோம். அனுராத புரத்தை தென்னாசியா முழுமையுமான தொல்லியலாய்வில் ஈடுபட்ட பிரிட்டனின் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தின் கலாநிதி பி.ஆர். அல்லச்சின் தலைமையிலான குழு 1990 முதல் 1994 வரை ஆராய்ந்தது. 10 ஆயிரம் சதுர மீற்றர் பரப்பில். 30 அடி ஆழத்துக்கு அகழாய்வுகளை இக்குழு மேற்கொண்டது. அந்த ஆய்வும் அனுராதபுரத்தின் ஆரம்பம் கி.மு.900 என்றது. இரும்புப் பயனும், விவசாயமும் கி.மு. 1000 முதல் 900 வரையில் ஆரம்பமான கி.மு. 700இல் குடியிருப்பான தமிழரின் பெருங்கற் பண்பாட்டு ஈமக்காடுகளைக் கொண்ட அனுராதபுரத்தை கி.மு 483 க்கு பின் ஆரியரான விஜயனின் கூட்டத்தானாலான அனுராத கட்டியமைத்தான் என்ற மகாவம்சக் கருத்தை பொய்யாக்க முதுநகரான அனுராதபுரம் யாருக்குரி யது என்பதை ஆய்வுகள் உறுதிப்படுத்துகின்றன.


திராவிடர்களிடம் நீர்ப்பாசனமுறை கி.மு. 3300க்கு முன்பதாகவே சிந்துவெளியில் தொடங்கிவிட்டது. சிந்து நதிக்கரையில் அந்த நீரைக் கொண்டு திராவிடர்கள் விவசாயத்தை தொடங்கி விட்டனர். தமிழகம் இலங்கையிலும் இத்தகு விவசாயமே ஆரம் பத்தில் நடந்தது.

இதற்கடுத்த கட்டமாக ஆறுகளை மறித்து நீர்த்தேக்கங்களை நீர்ப்பாசன மூலம் விவசாயம் செய்ய திராவிடர்கள் ஆரம்பித்துவிட்டனர். இந்த அணைக்கட்டுக்குளம் மூலம் பாசனம் செய்யும் முறை இன்று ஈராக் உள்ள முன்னைய மொசப்பத்தேமிய நாகரிகத்தில், யூப்ரதீஸ் நதியை மறித்து மேற்கொள்ளப்பட்டது.



மொசப்பத்தேமியாவின் தென் பபிலோனிய கி.மு 4000த்தில் என்னாடு என்ற பகுதி மன்னனான சிர்புர்லா என்பவரால் இந்த நீர்ப்பாசன முறை தொடங்கப்பட்டது. இந்த முறைமை சிந்துவெளிக்கு கி.மு 3000த்தில் வந்துவிட்டது. இதுவே தென்னிந்தியாவுக்கு வந்துவிட்டது என ஆங்கிலேய நீர்ப்பாசனப் பொறியியலாளரும் தொல்லியல் ஆய்வாளருமான எச்.பாச்சர் தெரிவிக்கிறார்.

குரலோன்



மண்ணின் மைந்தர்களின் கதை

# நாவற்குழியில் நீங்காத நினைவானவன்

— க. மிரேசு —

தளபதி லெப்.கேணல் ராஜசிங்கம் கடிதம் ஒன்றை வாசித்துக்கொண்டிருந்தார். நான் அவரைச்சந்திக்கவென சென்று, அவருக்குப் பக்கத்தில் அமர்ந்த என்னைப்பார்த்து, இந தாருங்கள் இதைப்பிடியுங்கள் என்று சொல்லி கடிதத்தை என்னிடம் நீட்டினார். கடிதத்தை வாங்கிப் படிக்கலானேன்.

மதிப்பிற்குரிய என தொடங்கப்பட்டிருந்த அந்தக்கடிதத்தில் என்னை சண்டைக்கு விடுங்கோ, என்னை சண்டைக்கு விடுங்கோ என பலதடவை கேட்டு எழுதப்பட்டிருந்தது.

கடிதத்தின் இறுதியில் உங்களின் உண்மையுள்ள போராளி, ஈழவாசன் 82 மோட்டார் போராளி என்று எழுதிவிட்டு, மீண்டும் ஒருமுறை தயவுசெய்து அண்ண, என்னை சண்டைக்குவிடவும் என எழுதப்பட்டிருந்தது.

இதைப் பார்த்த தளபதி மாவீரன் லெப்.கேணல் ராஜசிங்கம் பாருங்கண்ணை சாள்ஸ் அன்ரனியே ஒரு சண்டைப்படையணிதான். ஆனால், இவருக்கு அது விளங்காமல், மோட்டார் அணியைவிட்டு சண்டைக்குப் போகப்போறேன் என்று பலகடிதம் எழுதிவிட்டான். அவன் எழுதியதைப் பார்த்தால் கவலையாக இருக்குது. ஆனால், ஓயாத அலை 03இல் முழுமையாக மோட்டார் அணியுடன் சண்டையில் தான் இருந்தான் என்றார்.

உண்மைதான் லெப். ஈழவாசன். நாம் அவனை சந்தித்த நாளிலிருந்து அவன், சண்டையணியில் ஒருவனாகவும், வேவு அணியில் ஒருவனாகவும் தொடர்ந்து ஏதோ ஒரு களப்பணியில்தான் இருந்தான். அவனது திறமையான செயற்பாடுகளை வைத்து, 82மி.மீ மோட்டார் அணியின் வரைபடக்காரனாக நியமிக்கப்பட்டான். அதிலும் அவன் விசேட கவனம் செலுத்தினான். தனது அணித்தலைவனுக்கு எப்போதும் உதவியாளனாக எதையும் விறுவிறுப்புடன் செய்யும் ஆ..றல் கொண்டவன்.

மாவீரன் லெப்.ஈழவாசன் எப்போதும் வேகமாக நடப்பான். எந்தவேலையென்றாலும் ஓடி,ஓடிச்செய்வது அவனது இயல்பாகும். சுகாதாரம் என்றவிடயத்தில் மிகவும் துப்புரவானவன், எந்தவேலையென்றாலும் துப்புரவாகவே செய்துமுடிப்பான். உடையில் இருப்பிடத்தில்,தனது காவல் நிலையில், தனது ஆயுதத்தில் இப்படி எல்லாவிடயங்களிலும் அவன் சுத்தமானவனே. அவனது பாதணிகள்கூட எந்நேரமும் சுத்தமாகவே இருக்கும்.



அவன் சமையல் சுற்று செய்கின்ற நாளென்றால் அது தனியாகத்தெரியும்.சமையல் பகுதி அந்தளவு சுத்தமாக இருக்கும்.

இப்படிப்பட்ட அந்தப் போராளிதான் சண்டையையும் சரிவரசெய்யவேண்டும் என நினைத்தான். நான் ஒருமுறை அவனிடம் கேட்டேன் தம்பி நீங்கள் இருப்பதே சண்டைப் படையணியில்தான். ஏன் நீங்கள் சண்டைக்குத்தான் போக வேண்டும் என்று கேட்கிறீர்கள் என்று.

அண்ணை நான் இயக்கத்தில் வந்து இணைந்து சண்டைக்குப்போன போது எனக்கு எந்த அனுபவமும் இல்லை. ஆனால், இப்போது நிறைய அனுபவம் இருக்கு, அதைவைத்து நான் சண்டை செய்யவேண்டும் என்று சொன்னான்.

உண்மைதான். அவன் நினைத்ததுபோலவே ஒரு செக்கன் அதிகாரியாக தனது சண்டை அனுபவத்தைக் காட்டிட அந்தப்போராளி புறப்பட்டு விட்டான்.

ஓயாத அலைகள்-03 இன் தொடராக யாழ்மண்ணை மீட்கும் சண்டையாக நாம் நாவற்குழியில் இறங்கிவிட்டோம். சண்டை தொடங்கி தடைஉடைத்து உள்நுழைந்த போது, எதிரி சிதறி ஓடி ஓடிய, ஓடிய இடத்திலிருந்து சண்டை பிடிக்கத்தொடங்கி விட்டான்.

ஈழவாசன் களமிறங்கி விட்டான். தனது அணிக்கு கட்டளைகளை வழங்கிவிட்டு அவர்களை பிரித்துப் பிரித்து விட்டு சண்டையை செய்கிறான்.

தம்பிவிடாதே அடி. ஒருவனையும் விடவேண்டாம். சுட்டுத்தள்ளவேண்டும் என்று சொல்லிக்கொண்டே சுட்டுச் சுட்டு முன்னேறிக்கொண்டிருந்தான். என்னைக் கடந்து சண்டை செய்துகொண்டு சென்றவன்.

டொக்டர் இந்தமுறை இவங்களுக்கு ஒரு பாடம் படிப்பிக்கவேண்டும் என்று சொல்லிக்கொண்டே தனது துப்பாக்கியால் சுட்டுக்கொண்டிருக்கிறான்.

திடீரென சண்டை மாறுகின்றது. நாவற்குழிப் பாலத்திலுள்ள எதிரி தனது தாக்குதலை தொடர்ந்துவிட்டான். சூடுகள் சரமாரியாக பரிமாறப்படுகின்றன. சில எதிரிகள் சிதறி ஓடுகின்றனர். சிலர் நின்று சண்டைசெய்து கொண்டேயிருக்கின்றனர். எனவே சண்டையின் மாற்றத்தை அறிந்த தளபதி உடனே லெப்.ஈழவாசனுக்குக் கட்டளை வழங்குகிறார்.

ஈழவாசன்.... 5.4.......

ஈழவாசன் 5.4 என தொடர்பு கொண்டதும் மறுமுனையில்,

5.4 ஈழவாசன் என தொடர்புகொள்கிறான். டேய் மச்சான் அப்படியே அடிச்சுக்கொண்டு போய் நாவற்குழி பாலத்தை உடனே பிடி நான் எல்லாச் சப்போட்டையும் தருகிறேன் என்கிறார்.

5.4 இந்தா இன்னும் கொஞ்ச நேரத்தால பிடிச்சுப் போட்டு அறிவிக்கிறேன். நான் அடிச்சுக்கொண்டுபோக, சிலர் உங்களின்ர பக்கம் ஓடிவாறாங்கள். ஒருத்தரையும் விடாமல் தாக்குங்கள் என்று சொல்லி விட்டு முன்னேறுகிறான்.

நாவற்குழி பாலத்தை நோக்கி ஈழவாசனின் அணி நகர்ந்துகொண்டிருக்க, ஏனைய இடங்களினூடாக அணிகள் மூர்க்கமாக சண்டைசெய்துகொண்டே நகர்ந்துகொண்டிருந்தன. மீண்டும் ஈழவாசன் தொடர்பு கொள்கிறான். 5.4 ஈழவாசன்...... 5.4 ஈழவாசன். என்றதும் மறுமுனையில் ஈழவாசன் சொல்லுங்கோ என்று தொடர்புகொள்கிறார் தளபதி.


5.4கொஞ்சம் நிலைமை மோசமாகத்தான் இருக்குது என்றாலும் நான் விடமாட்டன். எல்லோரையும் பொயிசனில் விட்டுட்டு நான் தனியாகப்போய் குண்டடிக்கப் போகிறேன். குண்டடித்தவுடன் அடித்து பாலத்தைப் பிடிப்போம் என்றான். அவன் சொல்லித்தன் வேலையை தீவிரமாக்கியுள்ளான் என்பது சற்றுநேரத்தில் எமக்குத் தெரிந்தது. அதற்கு இடையில் அவன் எமக்கு குறித்துக் காட்டிய எதிரி வந்துகொண்டிருந்த பக்கம், எமது தாக்குதலைத்தொடுத்தோம். எதிரியின் நிலை மிகமோசமாக இருந்தது. சாரத்துடனும், உள்ளாடைகளுடனும், கையில் கிடைத்த பொருட்களுடன் ஓடினார்கள். எமது மக்களை வதைத்த கொடியவர்கள் அல்லவா அவர்கள், அவர்களை சுடுவது எமது கடமையெனக் கருதி எமது தாக்குதலை தொடங்கினோம். எமது தாக்குதலைத் தொடர்ந்து நாலா திசைகளிலும் சிதைந்து ஓடினார்கள்.

ஐந்து இலட்சம் மக்களை உடுத்த உடையுடன் அனுப்பியவர்கள் அல்லவா இவர்கள், இப்போது உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு ஓடினார்கள். ஓட ஓட அவர்களை விரட்டினோம்.

அதேநேரத்தில் ஈழவாசன் தனது தோழன் ஒருவனிடம் தொலைபேசியில் தொடர்வுகொண்டு கட்டளையை வழங்குகிறான். மச்சான் நான் நகரப்போறன்... எனவே பாலத்தில தெரிகின்ற எல்லா ரியூப்லைட்டுக்கும் அடி என்று சொல்லிவிட்டு நகர்கிறான். நிலைமை சாதகமான போது ஈழவாசன் சொன்னபடியே ஒளிர் விளக்குகள் அடித்து நொருக்கப்பட்டன. திடீரென எமக்குப் பின்பக்கமாக இருள் கௌவியது. அப்போதே ஈழவாசன் ஏதோ செய்து விட்டான் எனத் தெரிந்தது.

விநாடிகள் வெடியதிர்வுகளால் கடந்தபோது நாவற்குழிப் பாலப்பக்கமாக ஒன்றைத்தொடர்ந்து, ஒன்றாகக் குண்டுகள் வெடித்தன. திடீரென கேட்ட அந்தக் குண்டுச் சத்தத்தில் ஏதோ விபரீதம் நடந்துவிட்டதை உணர்ந்தோம். உண்மைதான் அவன் சொன்னதுபோலவே நாவற்குழிப்பால எதிரியின் நிலை மீது. குண்டெறிந்துவிட்டான் என்பது உறுதி. ஆனால், மற்றைய சத்தம் எமக்கு சந்தேகத்தை உருவாக்கியது. ஈழவாசனின் தொடர்வு இல்லாமல் போய்விட்டது. எதிரி ஏதோ சொல்லிக் கத்துவதாக குயிலன் அறிவித்தான். ஈழவாசனின் குண்டு வெடித்தபோதே எதிரியும் சமநேரத்தில் குண்டெறிந்துவிட்டான். எனவேதான் ஈழவாசனின் தொடர்வு இல்லாமல் போய் இருந்தது. தொடர்ந்து எதிரி ஏதோ தெரிந்து கொண்டவனாக, தனது தாக்குதலைத்தொடங்கினான். மிகமோசமான தாக்குதல் அது. இதன்போதுதான் வீரமுடன் போராடிய எங்கள் ஈழவாசன் (கதிரமலைப் பிள்ளை அருவ்ணனன்) 10.05.2000 அன்று வீரகாவியமானான். சண்டைக்குப் போகப்போறேன் என்று சதா தொல்லைப்படுத்திய ஈழவாசன், சண்டையையே தனது வாழ்வாய் விரித்து இன்று நாவற்குழி மண்ணில் நீங்காத நினைவாகத் திகழ்கிறான். ●






# நல்ல எதிர்காலம்

விசாலமான கண்ணாடிக்கு முன்னே தனது நரைத்த தலை முடியை கறுப்பாக மாற்றிக் கொண்டிருந்தார் தணிகா சலம் வாத்தியார். ஏனோ தெரியவில்லை அன்றைய தினம் தணிகாசலம் வாத்தியாரின் வதனம் 'விரிந்த மலர்போல' மலர்ந்திருந்தது. தலை மயிரை சீர்செய்து முடித்த தணிகாசலம் வாத்தியார் மணியை ஒரு தரம் சரிபார்த்துக்கொண்டவர் முகத்தில் ஒருவிதமான அவசரம். அந்த அவசரத் தில் "அடடா! எட்டு மணியாகிவிட்டது" என்றபடி வாசலுக்கு வந்து வாக னத்தை எடுத்துக்கொண்டு தான் கல்வி கற்பிக்கும் பாடசாலையை நோக்கி நகர்ந்தார்.

பாடசாலையை வந்தடைந்த தணிகாசலம் வாத்தியாரை, 'பரிசளிப்பு விழா' என்ற எழுத்துப் பலகையும், வாசல் கும்பமும் வரவேற்றது. திருநீறை முறைப்படி அணிந்து கொண்டு தணிகாசலம் வாத்தியார் நிகழ்வு மண்டப வாசலை நோக்கி நகர்ந்தார். அப்பொழுது நிகழ்வுகளுக்கு தலைமை வகித்த மாணவன் ஒருவன் முழங்கிக் கொண்டிருந்தான்.

"அடுத்து.... எமது பாடசாலையின் அனைத்துத் துறையிலும் சிறந்து விளங் கும் ஈழவன் அவர்கள் உரையாற்றுவார்."

என்றான்... அதனைத் தொடர்ந்து ஈழவன் எனும் மாணவன் மேடையேறி உரையாற்றத்தொடங்கவும் தணிகாசலம் வாத்தியார் கதிரையில் அமரவும் சரியாக இருந்தது. அந்த ஈழவன் உரையாற்ற உரையாற்ற தணிகாசலம் வாத்தியாரின் நினைவுகளும் பழைய ஞாபகங்களை மீட்டிப் பார்க்கத் தொடங்கியது.

"பாக்...பாக் வேணுமா.... பாக்....பாக் ஒன்று இரண்டு ரூபாய்... பாக்...."

அந்த அழகிய நகரத்தின் மத்தியில் அமைந்துள்ள விசாலமான சந்தையில் மீன் விற்பனைப் பகுதியில்தான் 'பாக்...பாக்' எனும் சிறுவர்களின் பேரொலி. தணிகாசலம் வாத்தியார் மீன் வாங்கு வதற்காக அந்த மீன் பகுதியினுள் புகுந்தார். அந்தச் சத்தம் மிகுந்த சந்தைக்குள்ளேயே சிறுவர்களின் 'பாக்' விற்கும் சத்தமே அதிகம். எத்தனை கொடுமை இந்தக் காட்சி! எத்தனைவகையான சிறுவர்கள் இங்கே, ஆண் பெண் என இருபாலாரும் உருக்குலைந்த தோற்றங் களுடன், ஒவ்வொரு இரண்டு ரூபாய்க்கும் முண்டியடித்துக் கொண்டு 'என்னுடைய 'பாக்' ஐ வாங்கமாட் டார்களா?' என ஏங்கி நிற்கும் அந்தப் பரிதாப நிலை! யாவும் எமது நாட்டின் போரின் வடுக்களை நன்றாகவே எடுத்துக்காட்டியது. அவர்களின் நிலையை பார்க்கமுடியாமல் வருந்தி நின்ற தணிகாசலம் வாத்தியார் "அட கண் கெட்ட கடவுளே! இவர்களை கண்திறந்து பாரேன்.." என வாய்விட்டே கூறிவிட்டார்.

நாட்டில் எத்தனையோ சிறுவர்கள் இந்த நிலையில்தான் வாழ்கிறார்கள். சந்தையில் விற்பனையாளராகவும், தேநீர்ச்சாலையில் பரிமாறுபவராகவும், 'பஸ்' இல் 'ரெயின்' இல் வடை விற்பவராகவும், இத்தனை யும் விட, பிச்சையெடுக்கும் பரிதாபத்திலும் பரிதாப நிலையும், நிறையவே உண்டு. இதில், கொழும்பு போன்ற நகரங்களே சிறுவர்களை விபச்சாரத் திற்குப் பயன்படுத்துவது அதிகம்.

ஏதோ ஓர் நினைவு வந்தவராக தணிகாசலம் ஒரு சிறுவனை நோக்கிக் குனிந்தார். அந்தச் சிறுவர் கூட்டத்திலேயே அவன் தான் மிகவும் சிறுவனாக வும், வாடிய தோற்றத்துட னும் இருந்தான்.

"ஏன் தம்பி...? உனக்கு என்ன பெயர்?" எனக்கேட்டார் தணிகாசலம் வாத்தியார்.

"ஈழவன்" என்றான் சிறுவன்

"ம்... ரொம்ப நல்ல பெயர்" என்ற வாத்தியார் "தம்பி... பள்ளிக்கூடம் போற தில்லையா?" என்றார் அந்தச் சிறுவனை பார்த்தபடியே.

"இல்லை.... நான் பள்ளிக்கூடம்... போற தில்லை. எங்கட வீட்ட சரியான கஷ்டம்.... நானும் அம்மாவும் தான். அப்பா 'செல்' விழுந்து செத்துட் டாங்க.... அம்மாவுக்கும் உடம்புக்கு ஏலாது...." என்றபடி அந்தப் பிஞ்சு நெஞ்சம் அழத் தொடங்கியது.

"தம்பி.... அழக் கூடாது. இதப்பாரு... உனக்கு படிக்க ஆசையா?" என்றார் வாத்தியார்.

"ஆம்..." என்றான் அந்தச் சிறுவனான ஈழவன்.

"ஆ... அச்சா பிள்ளை. உனக்கு கொப்பி, புத்தகம் எல்லாம் வாங்கித் தந்து உன்படிப்புச் செல வுக்கும் காசு தாறேன்... படிக்கிறியா? என்றார் தணிகாசலம் வாத்தியார்.

அவரின் அந்தப் பதிலை சற்றும் எதிர் பாராத ஈழவன் "நன்றி ஐயா..." என்றபடி அவரின் கழுத்தை கட்டி அணைத்துக் முத்தமிட்டான். அப்பொழுது அந்தச் சிறுவனின் முகத்தில் "உதய சூரியன்" போல பிரகாசம் தோன்றியது.

எந்தச்சிறுவர் களுக்குத்தான் படிக்க ஆசையிருக்காது? தம்மை ஒத்தபிள்ளைகள் 'சிட்டுக் குருவிகளாக' பறந்து திரி யும்போது நாம் இப்படி யாகிவிட்டோமே! என்று எத்தனை பிள்ளைகள் ஏங்குகின்றன. இந்தச் சிறார்களின் ஏக்கத்தினை எமது சமுதாயத்தில் எத்தனை சீவன்கள் மதித்தன? எத்தனை நிறுவனங்கள் முனைப்பாக செயல்பட்டன? இல்லை யேல் தமது பிள்ளைகளின் எதிர்காலத்தை எத்தனை பெற்றோர்கள் உணர்ந் தார்கள்? இதில் எத்தனை சிறுவர்கள் 'டாக்டரோ, அல்லது 'இன்ஜினியரோ' யாருக்குத் தெரியும். யார் இந்தச் சிறுவர்களின் மனதை உணர்ந்தார்களோ இல்லையோ தணிகாசலம் நன்கு உணர்ந்தார். அந்தச் சிறுவனுக்கு தேநீர்ச் சாலையில் பலகாரம் வாங்கிக்கொடுத்தார் தணிகாசலம். அவன் உண்டு முடித்ததும்.


"ஈழவன் தம்பி... நாளைக்கு காலையில 8.00 மணிக்கு நான் சொன்ன பள்ளிக்கூடத்திற்கு வா! "என்ற தணிகாசலம் அவனை தட்டிக்கொடுத்து "இனி...பாக் விக்கக் கூடாது... இது படிக்கிற வயசு... நீ நல்லாப்படிக் கணும் இப்ப நீங்க படிக் கலைன்னா உங்க எதிர் காலம் கேள்விக்குறியா கிடும். நமது நாடும் அறிவியல் ரீதியாக பின்னடைஞ்சுடும்.... " என்ற வாத்தியார் அவனை வீட்டுக்கு அனுப்பிவிட்டு ஒரு நல்லது செய்கிறோம் என்ற பெருமிதத்துடன் வீராப்பாக நடந்தார்.

மறுநாள் விடிந்தது. அன்று புதன்கிழமை. ஈழவன் நேரத்துடன் எழுந்து ஆயத்தமாகிப் பாடசாலை வாசலில் தணிகாசலம் வாத்தியாருக்காகக் காத்துக் கொண்டிருந்தான். அவன் வாத்தியாருக்காக காத்திருந்தாலும் அவன் கண்களெல்லாம் 'அழகுமயிலாக வலம் வரும் பள்ளி மாணவர்களிலேயே லயித்திருந்தன. அப்போது "ஈழவன்" என்ற குரல் அவன் கவனத்தை திசை திருப்பியது. திரும்பியவன் உடனே, "வணக்கம் சார்..." என்றான். பதிலுக்கு வாத்தியாரும் வணக்கம் கூறிவிட்டு உள்ளே அவனை அழைத்துச்சென்றார்.

அவன் ஆசை

**P.N.சங்கர் பாலா**

யோடும், மகிழ்ச்சியோடும் பள்ளிவாசலில் காலடி வைத்தான். தணிகாசலம் வாத்தியார் அவனை தலைமை ஆசிரியருக்கு அறிமுகப்படுத்தி அவனுக்கு அனுமதி வாங்கிக் கொடுத்தார். உள்ளம் நிறைய பூரிப்புடன் புத்தகத்தை சுமந்தபடி தனக்குரிய வகுப்பறையில் போய் அமர்ந்தான். மெல்ல மெல்ல நேரம் சென்றது. வாய்ப்புக்கள் சிலமுடிந்து அந்த இடைவேளை நேரமும் வந்தது கூடவே இலைக்கஞ்சியும் வந்தது. ஆசையோடு அந்தக்கஞ்சி தன் கைக்குவரும்வரை பார்த்திருந்தவன் கைக்கு வந்ததும் பக்கத்திலிருந்த மாணவனிடம் "ஏய்.... என்னுடைய கஞ்சியையும் பாத்துக்கோ.... எனக்கு அவசரமாக இருக்கு...." எனக்கூறிவிட்டு சிறுநீர் கழிப்பறையை தேடியவன் அது கிட்ட இல்லாததால், பக்கத்திலிருந்த பற்றைக்குள் சென்றவன் தனக்காக ஒரு 'கண்ணிவெடி' காத்திருக்கிறது என்பதை அறிந்திருக்கவில்லை. மெல்லச் சிறுநீர் கழித்து விட்டுத் திரும்பிய அந்தச் சிறுவனின் பிஞ்சுக் கால் களை 'டமார்' என்ற ஓசையுடன் அந்தக் குண்டு பறித்தது. கூடவே "அம்மா..." என்று அந்த அழகிய மழலை அலறியது. நல்லவேளை உயிருக்கு ஏதும் ஆபத்தில்லை. போரின்வடு இங்கு இப்படி எத்தனை நபர்களின் வாழ்வை 'சீரழிக்கக்காத் திருக்கிறது.



பழைய நினைவு களில் ஒன்றிப்போயிருந்த வரை ஈழவனின் அந்த வார்த்தைகள் தடுத்தது.

".... என்றாலும் நான் கலங்கவில்லை. இந்தக் காலில்லா நிலை மையை நான் ஒரு ஊன மாக நினைக்கவில்லை. நான் இதை ஊனமாக நினைத்திருந்தால் இன்று படித்து டாக்டராக பல கலைக்கழகத்தில் படிக்கும் வாய்ப்பை பெற்றிருக்க முடியாது. என்னை இந் தளவிற்கு படிக்க வைத்தது ஒரு ஆசிரியர்தான். இவரைப் போல் ஒவ்வொரு ஆசிரியர்களும், பெரியவர் களும் செயல்படவேண்டும். எனது இந்த உயர்வுக்கு காரணம் வேறுயாருமல்ல.... நமது கல்லூரியின் ஓய்வு பெற்ற ஆசிரியர் தணிகா சலம்சார்தான்" என்ற அந்த வார்த்தைகளைக் கேட்டு தணிகாசலம் வாத்தியார் ஆனந்தக்கண் ணீர் வடித்தார். அந்தக்கண் ணீரை வேறுயாரும் பார்த்திருக்க வாய்ப்பில்லை. ▲

## வீடு

# பெண்கள் வேலைக்குப் போதல் ஒரு பிரச்சினையா....?



இன்றைய வாழ்க்கைச் செலவை நிவர்த்தி செய்யவேண்டுமாயின் ஆண் பெண் இருவரும் தொழில் புரிந்தாலே முடியும் . இன்றைய காலம் எவ்வளவுதான் நாகரிக வளர்ச்சியடைந்தபோதும் குடும்பங்களில் கௌரவப் பிரச்சினை என்ற ஒன்றினை பெற்றோரும் கணவன்மார்களும் கடைப்பிடித்தவாறுதான் இருக்கின்றனர். கௌரவம் என்பது செய்யும் வேலைகளில் அல்ல.அவரவர் குணமே கௌரவத்தை எமக்குத் தேடித்தரும்.

உதாரணமாக ஒரு கஷ்டமான நிலையில் உள்ள குடும்பத்தைப் பார்ப்போம். அங்கே கணவனின் வரவு பணம் குடும்பச் செலவுகளுக்குப் போதாமையாக இருக்கும். இந்நிலையில் மனைவி என்பவளால் எப்படி வாழ்வை நடத்த முடியும். வீட்டில் இருந்து கஷ்டமான வாழ்வு வாழ்வதிலும் பார்க்க வேலைக்குப்போனால் நலம்தானே. எல்லாம் தெரிந்திருந்தும் ஏன் கஷ்டமென்று அடுத்தவர் கையை எதிர்பார்க்கவேண்டும். அப்படி பிறரை எதிர்பார்க்கும் போதுதான் எம் கௌரவம் பாதிக்கப்படும்.

வேலைக்குப் போவதில் என்ன தவறு இருக்கின்றது. மனைவி தன் கடமைகளையும் செய்து கணவன் பிள்ளைகளின் கடமைகளையும் சரிவரச் செய்து அவர்களின் கவனம் சிதறாமல் ஒரு மனைவி நடப்பாள் எனின் வேலைக்குப் போவதில் தப்பே இல்லை.

எமக்குக் கிடைக்கும் நேரம் பொன் போன்றது. அதனை உரிய முறையில் பயன்படுத்தி செயற்பட்டால் பன்மடங்கு நம்மை நாடிவரும். வீட்டில் இருந்து கஷ்டம் என்று புலம்பாமல் வேலைக்குப் போனால் இன்றைய பொருளாதார நெருக்கடியை ஓரளவு நிவர்த்தி செய்யலாம்.

உங்கள் கணவன்மாருக்கும் பேருதவியாக இருக்கும் அல்லவா. பெண்மணிகளே நீங்கள் வேலைக்குப் போவது தமக்கு கௌரவப் பிரச்சினையாக எண்ணும் பெற்றோர் உங்கள் கஷ்டங்களில் பங்குகொள்வார்களா? சற்று சிந்தியுங்கள் ஒரு பெண் திருமணமானதும் தம் கடமை முடிந்துவிட்டது என்று எண்ணும் பெற்றோர் அவள் குடும்பத்தில் எத்தனையோ துன்பங்களைச் சுமக்கின்றாள் என்பதை அறியமுற்படுவதில்லை.

இப்படி இருக்கையில், வேலைக்குப் போனால் தம்மை அடுத்தவர் என்ன நினைப்பார்கள் என்ற எண்ணம் தேவையற்றது. தன்னுடைய பிள்ளைகளின் தேவைகளைப் பூர்த்தி செய்ய பணம் இல்லாத போது ஆண் சகோதரர்களிடம் ஒரு பெண் கையேந்துகின்றாள் சரி அவர்களும் ஒருநாள் இரண்டு நாளைக்குக் கொடுப்பார்கள். தினமும் அவளது வறுமையைப் போக்க பணத்தைக் கொடுப்பார்களா? கொஞ்ச நாளைக்கு சகோதரி என்று கொடுப்பார்கள். பிறகு என்னை நம்பியா திருமணம் செய்தாய் என்ற கேள்விகள், கிண்டல்கள் யாவும் எம் உள்ளத்தை வேதனைப்படுத்தும். எப்போதும் எம் கையை நம்பி நாம் இருக்கவேண்டும். எம்மை அப்படி இப்படி என்று கதைப்பவர்கள் நாம் துன்பப்படும் போது தூக்கியா விடப் போகின்றார்கள்.

'அண்ணன் என்னடா தம்பி என்னடா அவசரமான உலகத்திலே ஆசை கொள்வதில் அர்த்தமென்னடா காசில்லாதவன் குடும்பத்திலே'. என்ற கவிஞனின் வாசகப் படி எம் வாழ்வில் நடக்கின்றன. துன்பம் வரும்போது துவண்டால் அல்லது யோசித்தால் அதனால் தீர்வுகாணமுடியாது, அதற்கு நாம் உழைக்கவேண்டும். அப்போது தான் எம் சுமைகள் சுகமாகும்.

பெண்மணிகளே ஏன் நான் வேலைக்குப் போகவேண்டும் கணவன் உழைத்துத் தருவது அவர் கடமைதானே, கொண்டு வந்து தரட்டும் என்று நினைப்பது மடமை.

எல்லோருக்கும் நினைப்பது போல் வாழ்க்கை அமைவதில்லை. கணவனின் வருமானம் போதாது என்றால் மனைவி வேலைக்குப் போய்த்தான் தன் பிள்ளைகளை வளர்க்கவேண்டும் வீட்டில் இருந்து யார் கொண்டு வந்து தருவார்கள் என்று எதிர்பார்த்தால் அது உங்கள் வாழ்வை கீழ் நிலைக்கு இட்டுச்செல்லும். கணவன்மாரும் மனைவி மாருக்கு வேலைக்குப் போவதற்கு ஒத்துழைப்பு வழங்கவேண்டும். இருவரும் உழைத்து வேறு யாரிடமும் கொடுப்பதில்லையே. அது உங்கள் குடும்பத்திற்கே சிறப்பாய் வாழ வழிவகுக்கும். இதில் என்ன மதிப்பு குறைவு இருக்கின்றது.

.பெண்களே அடுத்தவர் இப்படிச் சொல்வார் என்று எண்ணி வீட்டுக்குள்ளேயே புதைந்து கிடந்து கஷ்டப்படாதீர்கள்.

சு.சிவாஜினி.

## இப்படிச் செய்யலாம்...

*சலவைத்தூளில் சிறிய உப்பையும் கலந்து அதில் துணிகளை ஊறவையுங்கள், பிறகு அவற்றைக் கசக்கி அலசிப் பிழிந்தால், துணியில் உள்ள அழுக்கு நீங்கிவிடும். துணி பிரகாசமாய் இருக்கும்.*

✤ ✤ ✤

*மழைக்காலத்தில் உப்பு கசிய ஆரம்பிக்கும். உப்பு குவலையில் இரண்டு பச்சை மிளகாயைப் போட்டு வையுங்கள். உப்புக்கசியாது.*

✤ ✤ ✤

*முட்டையின் மீது கடுகு எண்ணெய்யை தடவி வைத்திருந்தால் நாலைந்து நாட்களுக்கு முட்டை பழுதடையாமல் இருக்கும்.*

✤ ✤ ✤

*முட்டையின் ஓடுகளையும், டீ தூள் சக்கையையும் சேர்த்து வெயிலில் நன்றாகக் காய வைத்துப் பிறகு அதை ரோஜா செடிகளுக்கு உரமாகப் போட்டால், செடியில் பெரிய மலர் பூக்கும்.*

✤ ✤ ✤

*தையல் இயந்திரத்தில் வேலை செய்யும்போது ஒரு துண்டு சவர்காரம் வைத்திருங்கள். நூல் அறுந்தால், நூலைச் சவர்காரத் துண்டினால் தடவி விட்டுப்பிறகு ஊசியில் கோத்தால் சுலபமாக நுழையும். நேரம் வீணாகாது. வேலையும் சுலபமாக முடியும்.*

✤ ✤ ✤

*அரிசி, பருப்பு மற்றும் தானிய வகைகளைப் போட்டு வைக்கும் பேணி, அல்லது பாத்திரங்களில் காய்ந்த வேப்பங்குச்சிகளைப் போட்டு வையுங்கள் பூச்சிவராது.*

✤ ✤ ✤

## மதுவை மறந்து செயற்படுங்கள்

பொதுவாக ஒரு குடும்பத்தை எடுத்துப்பார்ப்போம் என்றால் அங்கே கணவன் என்ற ஸ்தானத்தில் இருப்பவன் குடிகாரனாக இருப்பானே என்றால் அக்குடும்பத்தில் மனைவி மக்களின் நிலைமை சொல்லவே தேவையில்லை. குடிக்கு அடிமையானவன் தான் செய்வதுதான் சரி என்று பிடிவாதமாய் இருப்பான். ஒரு நாளைக்கு அவன் உழைக்கும் பணம் குடித்து அழித்து விட்டு வீட்டுக்கு வருவான். குறைந்த பணமாக அவன் 100 ரூபாவுக்கு குடிக்கின்றான் என்று வைத்தால் மாதம் எவ்வளவு முடிகிறது. இவற்றை அவன் யோசிக்கவேண்டும். 100 ரூபாயில் வீட்டிலுள்ள மனைவி பிள்ளைகள் யாவரும் நல்ல போசாக்கான உணவுகளை உண்ண வேண்டிக்கொடுத்து தானும் சாப்பிடலாம். தேவையற்ற வழிகளில் வீண் போதைக்கு அள்ளி இறைக்கும் பணத்தை பயனுள்ள வழியில் பயன் படுத்தலாம்தானே குடியோடு புகைத்தல் என்றால் வீட்டிலுள்ள அண்டா குண்டா என்று விற்றும் தம்பாட்டிற்கு குடிக்கின்றனர். குடிகாரனை தகப்பனாக கொண்ட பிள்ளைகள் எப்படி படிக்கமுடியும். வீட்டில் தன் வாயில் வந்த படியே வயது வந்த பிள்ளைகள் இருப்பதும் தெரியாமல் மிகவும் சகிக்க முடியாத வார்த்தைகளையும் அள்ளிக்கொட்டுகின்றனர். இதனால் அவரின் பிள்ளைகளுக்கு சமுதாயத்தில் மதிப்பும் குறைகிறது. குடிகாரனின் பிள்ளை அட இவன்ர அப்பனோ படு குடிகாரப்பயல் என்று இந்தப் பிள்ளையின் காதில் படும்படியாகவே சிலபேர் கதைப்பார்கள். இதனால் நடப்பது என்ன அப்பா என்ற மரியாதை இல்லாமல் உங்களோடு அப்பிள்ளை எதிர்த்து கதைக்கும். கதைக்க வைப்பது யார் நீங்கள் தான் ஆண்களே இப்படி குடித்து குடியை அழிக்கும் நீங்கள் சற்று சிந்தியுங்கள்.

## தொதல்




**தேவையான பொருட்கள்:-**

| | |
|---|---|
| அரிசிமா | -1/2 கிலோ |
| சக்கரை | -1/2 கிலோ |
| சீனி | -1/4 கிலோ |
| தேங்காய் | -3 |
| பயறு | -100g |
| கஜு | -25g |

**செய்முறை:-**

அரிசியை இடித்து மாவாக்கிய பச்சை மாவை எடுத்து அதில் கப்பிப் பாலை விட்டுக் கலந்து சீனியும், சக்கரையும் சேர்த்துக் கலக்கவும். பின்னர் சட்டியை அடுப்பில் ஏற்றிக்கைவிடாமல் துளாவிக்கொண்டிருக்க வேண்டும். நீர் வற்றும் பதத்தில் கட்டிப் பாலை சிறிது சிறிதாக விட்டுக் கிளறவேண்டும். சிறிது நேரத்தின் பின் பயற்றையும் (பயற்றம் பருப்பு) உடைத்த கஜுவையும் போட்டுக் கிளறி சட்டியில் மா உருண்டு வரும் பதத்தில் தட்டில் கொட்டிப் பரவி ஆறியதும் வெட்டிப் பரிமாறலாம்.

**குமரகுரு பரிசுத் திட்டத்தின் 21 தொடக்கம் 25 வரை பரிசு பெற்றவர்களின் பெயர் விபரம்.**

### பரிசுத்திட்டம் –21
கி.ஜெயலெட்சுமி(வேந்தனா),
வேந்தன் பல்கட்டும்,
நிலையம்,
கிளிநொச்சி.

### பரிசுத்திட்டம் –22
லோ.விஜிதா,
44/02 புத்தடிச்சந்தி,
விசுவமடு,
முல்லைத்தீவு.

### பரிசுத்திட்டம் –23
சுஜாதா சுந்தரேஸ்வரன்,
சரசாலை வடக்கு,
சாவகச்சேரி.

### பரிசுத்திட்டம் –24
பு.மகிழ்மணி,
13,D யோகபுரம்,
மல்லாவி.

### பரிசுத்திட்டம் –25
இ.பவானந்தன் தர்சிகா,
மாதகல் மத்தி மாதகல்,
யாழ்ப்பாணம்.

**பரிசு பெறுவது தொடர்பான விபரத்தை நாங்கள் விரைவில் உங்களுக்கு கடிதம்மூலம் தெரியப்படுத்துவோம்.**

*வீடு பகுதியில் வெளிவரும் ஆக்கங்கள் தொடர்பாக உங்களது விமர்சனங்களை எதிர்பார்ப்பதோடு, இப்பகுதிக்கு உங்கள் ஆக்கங்கள், மற்றும் குமரகுரு பரிசுத்திட்ட கூப்பன் ஆகியவற்றை கீழ் உள்ள முகவரிக்கு அனுப்பிவையுங்கள்.*

*வீடு,*
*வெள்ளிநாதம், ஈழநாதம்,*
*யாழ்சாலை, கிளிநொச்சி.*




## குமரகுரு புடவை, அழகுப்பொருள் வாணிபத்தின் பரிசுத்திட்டம்

வெள்ளிநாத வாசகிகளுக்கு கிழமை தோறும் பெறுமதிமிக்க சாறி ஒன்றை குமரகுரு புடவை வாணிபத்தினர் பரிசளிக்கவுள்ளனர்.
நீங்கள் செய்யவேண்டியது கீழ்காணும் கூப்பனை வெட்டி நிரப்பி அனுப்ப வேண்டும். குலுக்கல் மூலம் தெரிவு செய்யப்படும் வாசகிக்கு பரிசு காத்திருக்கிறது.

### குமரகுரு பரிசுத்திட்டம்–26

பெயர்:........................................

முகவரி:........................................

........................................

**குறிப்பு:**
ஈழநாதம் நிறுவனத்தில் கடமையாற்றும் ஊழியர்களும் அவர்களது நெருங்கிய உறவினர்களும் இப்போட்டியில் பங்குபற்றமுடியாது.

கவிதைகள்

## புதிர்ப் பொழுதுகளும் வாழ்வும்

எனதிருப்பின் நிர்ணயங்கள்
நிர்வாணப் படுத்தப்படலாயிற்று
எனதிருப்பின் நிர்மூலம் குறித்த மூலம்
எங்கென்று தேடலுறும் திடத்தோடு
என் ஆத்மா அவதியுற்று
அலைந்துதிரியத் தொடங்கலாயிற்று
நானிழக்கும் சுயங்களின் முகவரிகள்
ஏனிழந்து போகின்றன என்றறிய முடியாது
தினறும் கணங்களே
எனக்குச் சமர்ப்பணமாயிற்று.
வானிடிந்து வீழும் கணம் போலே
யானும் நசுங்கிக் கிடந்து
நலிவுறுதல் தொடர்கிறது
எனினும்...
நம்பிக்கை, தூரத்துறவிலிருந்து
விலகும் வரம் கேட்டபடியிருக்கிறது
என்ன செய்வதென்றறியாது
ஏங்கும் பொழுதுகளோடே என் வாழ்வின்
சின்ன வட்டமும் சிதைந்தழிந்து போமோவென்று
துயரொன்று படர்கிறது.
இன்னுமின்னுமாய்....
என்ன செய்வதென்றறியாத
புதிர்ப்பொழுதுகளைத் தினித்தே
போய்க்கொண்டிருக்கிறது வாழ்வு.

த.அஜந்தகுமார்

## அடையாளம்

என்முகத்தை பார்க்கும்
ஆசையில் அடம்பிடித்தேன்.

உனக்கென்றொரு முகமில்லை
எல்லாம் இரவல்தான் என்றார்கள்
நம்ப மறுத்து
ஆக்கினை கொடுக்க
வளைந்த மேற்றள
வெள்ளிக்கிண்ணம் தந்தார்கள்.

காணச் சகியாத கோலமாய்
என்முகம்
நீண்டும் வளைந்தும் உப்பியும்
தெரிந்தது
அதிலென் விம்பம்
வித்தியாசம் வித்தியாசமாய்
தோன்றிற்று
நிலையற்று.

கண்டு சுருக்குண்டேன்
ஐயமெழ
தேடலில் முனைப்புற்றேன்.
குவிவாடியொன்றை தந்தார்கள்
என்முகம் தெளிவாயிருந்தது
சிறிதாய்...

திடமறியும் எத்தனிப்பில்
தளவாடியைத்தேடி
எடுத்துக் கொண்டேன்.

உண்மைமுகத்தைக்
காணப்பெறாத விசமிகளால்
இரசம் சற்று சுரண்டப்பட்டிருந்தாலும்
என் முகத்தைப் பார்த்துக்கொண்டேன்
நான் யாரென்பது?
நன்றாய்... புரிந்தது.

தருமை வதனன்

## ஓர் உயிர் உன்னதமானது

கொஞ்சமும் விருப்பற்று
சிவப்புக் குருதியால்
கறுப்புத்தார் தாள்களில்
சித்திரம் வரைகின்ற
ஒரு சகதி புத்தி
இந்த வெள்ளைத் தாள்களில்
கவிதை
விதைக்கவேண்டியிருப்பதற்காக
எனது எழுதுகோல்
அழுகின்றது.

மூக்கற்ற வாகனங்களையும்
முழிபிதுங்கிய முகங்களையும்
கண்டு கொள்ள
எங்கள் விழிகள்
என்ன பாவம் செய்தன?

சமாதானத்தின் பரிசுகள் தானா
இந்த சாக்கேடுகள்

குண்டும் குழியுமாய் கிடந்த
எங்களின்
சமாதானத்துக்கு முந்திய
தாய்மண்ணள்ளித் தெளிக்கும்
சிவப்பு வீதிகளால்
உயிர் காக்கும் அவசரத்தில்
பச்சையோலை கட்டிய
எங்கள் கனமுனை வாகனங்கள்
காற்றாய் பறந்தபோதெல்லாம்
நாங்கள்
கவனமாய் தானே இருந்தோம்.

இப்போது மட்டுமேன்
இத்தனை பரபரப்பு?

இப்போதெல்லாம்
வழிப்பயணங்கள்
எங்கள் வாழ்க்கைப்
பயணங்களையே
முடிந்து விடுமோ என்கின்ற
அச்சத்தோடு தானே
பயணிக்கவேண்டிக் கிடக்கிறது.

பல்கலைக்கழகம் போனவனும்
பத்துவருடங்களின் பின்
பாசங்களை காணும்
கனவுகளுடன்
பறந்தவனும்
பாதியிலே பாதையிலே
அடுத்தநாள் பத்திரிகையில்
படமாய் கிடக்கின்றான்.



அட
வீடுகளுள் நின்ற
அப்பாவி ஜீவனொன்றை
மதிற்சுவர் இடித்து வந்து
இடித்துத்
தொலைக்கின்றனவெல்லாம்
இலகு வாகனங்களா?
இயம வாகனங்களா?

பத்து ரூபாய் பணத்திற்கு
எங்களை
பக்கத்தில் இறக்கிவிட்டால்
போதும்.
தயவு செய்து
சொர்க்கத்திற்கோ
நரகத்திற்கோ
கொண்டுபோய்
விட்டு விடாதீர்கள்.

ஒரு
ஒற்றைக் காட்டுத்துறை தானே
பாதையை மூடுகின்றது.
ஏதோ
சீனத்துச்சுவர் மூடுவதை
போலல்லவா
பறக்கின்றீர்கள்.

பயணங்களுக்காக
ஏனுங்கள் உயிர்களையே
பணயம் வைக்கின்றீர்கள்?

பௌர்ணமி இராத்திரியில்
கடற்கரை மணலிலிருந்து
வெள்ளி பாருங்கள்
அழகாக இருக்கும்.

தயவு செய்து வீதிகளில்
வாகனங்களை மட்டுமே
ஓடுங்கள்.

வாகனச் சாரதிகளே!
உங்கள் ஆசனங்கள்
முன்புள்ள உட்பக்க
கண்ணாடிகளிலெல்லாம்
எழுதி ஒட்டுங்கள்
"ஒரு உயிர்
உன்னதமானது"
என்று.

யாழ் வீரன்

## காடுகள்

தலைநகரம் முழுவதும் சிமெந்துக் காடுகள்... வானுயர பரலோகத்திலிருந்து கீழே பாதாளம் வரை சிமெந்துக்காடுகள். காபனீரொட்சைட்டை சுவாசித்து. ஒட்சிசனை வெளிவிட இருந்த பச்சைப்பசேலென்ற மரங்கள் தறிக்கப்பட்டு... நானும் காதலியும் ஒன்றாக வீற்றிருந்து Ice cream குடித்த நாட்களை எண்ணிப்பார்க்கின்றேன். அந்த மரக்கிளைகளில் பறந்து திரியும் பறவைகள் கூடுகட்டி விளையாடும். அவைகள் எல்லாம் தொலைந்து போயின சிமெந்துக்காடுகள்... சில்லென்று வீசும் காற்று எல்லாம் சிமெந்து கற்களினூடே சூடாகி... எத்தனை பொழுதுகளை இந்த மரங்களின் கீழ் கழித்திருப்போம். சீ... இந்த சிமெந்துக்காடுகள் என் கண்களை ஊமையாக்கி என் வாயை குருடாக்கி என் வாழ்க்கையை மரணிக்கப் பண்ணி எல்லாம் செயற் கையாகி... ஒரு குளிரூட்டி, ஒரு செயற்கை, ஒரு மீன்தொட்டி இந்த சிமெந்துக் காடுகளின் மத்தியிலும் ஒரு பச்சைப் பசேலென்ற ஒரு காட்டில் ஒரு மரத்தில் புதிய ஒரு மலருக்காய் எதிர்பார்த்த படி ஒரு புதிய வரவுக்காய் இந்தக் கிராமம் முழுவதும் கித்துல் காடுகள், பனைக்காடுகள் எல்லாம் தறிக்கப்பட்டு...


எத்தனை தரம் பனைமரத்தின் கீழே படுத்து உறங்கியிருப்பேன். இன்று கித்துல் மரக்காடுகளில் ஏறி விளையாடியிருப்பேன் ஊஞ்சல் கட்டி ஆடியிருப்பேன். அவை எல்லாம் ஆயுதக்காடுகளாகி...

ஆயுதங்களால் நிரம்பிய காடு களாகி... இந்தக்காடுகள் என்னை கட்டிப் போட்டு... இதுதான் இனி உன் வாழ்க்கை என்றபடி 'பழக்கப்படுத்திக்கொள்' என ஆணையிடுகின்றது.

சிமெந்துக்காடுகளை ஆயுதக்காடு களை எனக்கு தரப்பட்டிருக்கின்ற... எனக்கு என் ஆத்ம திருப்திக்குத்தான் தெரிவுசெய்ய முடியாது. தரப்பட்டதை ஏற்று... மனனம் செய்து சிமெந்து ஆயுதக்காடுகளில் கருகி ஒரு செயற்கை புன்னகையை வரவழைக் கிறேன். உங்களோடு வாழுவதற்காய்... இல்லை எனில் எனது பிள்ளைக்கே நான் மரத்தை படத்தில் காட்டுவேன். இயற்கையின் குளிர்ச்சியை இலக்கியத்தில் காட்டுவேன். பறவைகளின் இறக்கையாவது பேரன் பார்க்கப் பத்திரப்படுத்துவேன்!

# புகழேந்தி= விடுதலை ஓவியங்கள்

கருணாகரன்



புகழேந்தி

பிக்காசோவின் 'குவர்ணிகா' வை அதன் முழு அர்த்தத்தில் புரிந்தது குண்டுகள் எங்களின் மீது விழும்போதே. (அதற்காக குண்டுகள் விழுந்துதான் குவர்ணிகாவை விளங்கவேண்டுமென்றோ குவர்ணிகாவை விளங்குவதற்கு குண்டுகள் விழவேண்டு மென்றோ பொருள் அல்ல) எல்லாம் நொருங்குண்டுபோன கணங்களில் 'குவர்ணிகா' நினைவில் வந்தது. அப்போது 'குவர்ணிகா'வை பிக்காஸோ எங்களுக்காகவே வரைந்திருந்தாரோ என்றுகூடத்தோன்றியது. போரை பிக்காஸோ உணர்ந்த விதம்தான் குவர்ணிகாவை இன்று நாங்கள் எங்கள் வாழ்வின் ஒருபகுதியாக உணரக்கூடியதாக்கி யிருக்கிறது. பிக்காஸோவினுள் நிகழ்ந்தது மாதிரியான உணர்தளத்திலேதான் இன்று புகழேந்தியின் ஓவியங்களும் வெளிக்கிளம்பு கின்றன. புகழேந்தி தமிழகத்திலுள்ள ஓவியர். ஆனால் அவர் தன்னுடைய சிந்தனையாலும் ஓவிய வெளிப்பாடுகளாலும் சர்வதேச மயப்பட்டார்.



புகழேந்தியினுடைய ஓவியங்களின் மையம் விடுதலையிலேயே கருக்கொள்கிறது. அவருடைய எண்ணங்கள் முழுவதும் விடுதலைப் பேரொளியை அவாவுகின்றன. அதனால் அவருடைய எல்லா ஓவியங்களும் இந்தப் பேரொளிக்கானவையாகவேயிருக்கின்றன. விடுதலை சர்வதேச மயப்பட்டது. சுதந்திரத்தின் அடிப்படை ஒன்று. அது மனிதமேம்பாட்டையும் இயல்பையும் நீதியையும் மையமாகக் கொண்டது.

பெண்விடுதலை, சாதிவிடுதலை, இனவிடுதலை, வர்க்கவிடுதலை என்று முழுமனித விடுதலையைக் கோருகின்றன புகழேந்தியின் ஓவியங்கள். இந்த விடுதலை எந்தக்குறுகிய பரப்பினுள்ளும் வரையறுக் கப்பட்டதல்ல. அது விரிந்த வெளிதழுவியது மனித மேம்பாட்டை நோக்கியது முழுமை யானது.

ஒடுக்குமுறைக்கெதிரான போர்க் குணத்தை புகழேந்தி தன் ஓவியங்களில் ஏற்றி விடுகிறார். அவர் முதலில் ஒடுக்குமுறையை, ஆக்கிரமிப்பை, அடக்குமுறையை, அநீதியை அப்பலப்படுத்துகிறார். மக்களிடையேயான விழிப்புக்கு, பரந்தளவிலுள்ள ஒடுக்கப்படும் மக்களை இணைப்பதற்கு இந்த உத்தியைப் பயன்படுத்துகிறார்.

உதாரணமாக-பெண்ணை இழிவு படுத்தல், கொடுமைப்படுத்தல், புறக்கணித்தல், பயன்படுத்தல் என்பவற்றை பகிரங்கப்படுத்து கிறார் புகழேந்தி. இவ்வாறு பகிரங்கப்படுத்துதல் முதலில் பெண்மீதான வன்முறைக்கெதிரான அடையாளமாகவே அமைகிறது. இதைப்பெண் குறித்த ஓவியங்களில் மிகத்துலக்கமாகக் காணலாம். இதேமாதிரியே சகல அநீதிக்கெதி ராகவும் நிகழும் வாழ்வின் கொடுமைப்பதிவுகள் இருக்கின்றன அவருடைய எல்லா ஓவியங் களும்.

எல்லாவகையான போதனைகளின் பின்பும் யதார்த்தம் சிதைவுற்றதாகவே இருக் கின்றது என்பதற்கான சாட்சியங்களை இந்த ஓவியங்கள் மொழிகின்றன. புகழேந்தியின் கவனமும் இதுதான். எல்லாச் சட்டங்களிற்கும் அப்பால் சட்ட விலகலாக நடக்கின்ற கொடுமை களையும் அநீதிகளையும் கேவலங்களையும் சாட்சிபூர்வமாக காட்சிப்படுத்துவது அவர் நோக்கம். எவ்வளவுதான் நாகரிகத்தைப் பற்றிப்பேசினாலும் உலகின் பெரும்பாதியும் நாகரிகக்கேட்டால் சிதைவுண்டிருக்கிறது என்பதுதான் புகழேந்தியின் வாதம். அதாவது உண்மை உரைத்தல் என்ற கோட்பாடு.

அமைதி, சமத்துவம், அரவணைப்பு சனநாயகம், நீதி, மகிழ்ச்சி என்று புனையப்பட்ட மேலுறை உலகிற்கப்பால் எதிர்மறையான விடயங்களே புகழேந்தியை அதிகமாகப் பாதிக் கின்றன. பறிக்கப்பட்ட வாழ்க்கையை சீர் படுத்தவேண்டுமென்ற தவிப்பே புகழேந்தியின் சாரம்.

புகழேந்திக்கு வரையறைகள் எதுவும் கிடையாது. எல்லைகள் எதுவும் இல்லை. தேசங்களைக் கடந்து காவல்களைக் கடந்து உணர்வில் ஒன்றாதல்தான் அவருடைய பாங்கு. ஆபிரிக்காவில் ஒடுக்குமுறை நிகழ்ந்தாலும் புகழேந்தியின் தூரிகை அதை எதிர்க்கும். அஸாமில் கொடுமை நிகழ்ந்தால் அதற்கெதி ராகவும் அவருடைய தூரிகை நிமிரும். ஈழத் தில் அநீதி நடந்தால் அதற்கெதிராகவும் அவருடைய தூரிகை பேசும்.

கொடுமைகளையும் நீதியின்மை யையும் ஒடுக்குமுறையையும் அம்பலப்படுத்தல், பகிரங்கப்படுத்தல் என்ற சாட்சி வழிமுறையை ஒருவகையாகத் தொடரும் புகழேந்தி மறுபக்கத் தில் எழுச்சிகளையும் எழுச்சிக்குரிய ஆளு மைகளையும் இன்னொரு வகையாகப்பதிகிறார்.

புரட்சிக்கு வித்திட்ட கார்ல்மாக்ஸ், லெனின், நெல்சன் மண்டேலா, மாவோ, பிரபாக்ரன், பெரியார், மாக்ஸிம் கோர்க்கி என்பவரை



ஓவியங்கள் ஆக்கி அவர்களுடைய ஆளுமைப் பதிவை துலக்கியுள்ளது கவனத்திற்குரியது.

இதுவரையிலும் வெளிவந்த உறங்கா நிறங்கள், எரியும் வண்ணங்கள், திசைமுகம், சிதைந்த கூடு,திசைமுகம் என்ற ஓவியத் தொகுப்புக்களில் இதைக்காண்லாம். தவிர புகழேந்தியின் ஓவியக்காட்சிகளும் முக்கியமா னவை என்று சொல்லப்படுகிறது. அவற்றை பார்க்கக்கூடிய வாய்ப்பு எமக்குக்கிடைக்க வில்லை என்ற போதும்.

புகழேந்தியின் ஓவியக்காட்சி பற்றி வெவ்வேறு ஊடகங்கள் மூலமாகவும் நண்பர்கள் வாயிலாகவும் அறியும்போது அவற்றுக்கு தனியிடம் உண்டென்பது தெரிகிறது. இப் பொழுது அதிரும்கோடுகள், தூரிகைச் சிறகுகள் என்று இரண்டு ஓவியத்தொகுப்புக்கள் வந்த தாகத் தெரிகிறது. எனினும் அவற்றை இன்றும் பார்க்கக் கிடைக்கவில்லை.

உலகம் முழுவதும் நடக்கின்ற சகல ஒடுக்குமுறைகளையும் சாட்சிப்படுத்தும் விரிந்த தளச்செயற்பாட்டில் மனித குலத்தின் மனச் சாட்சியை நோக்கிக் கேள்விகளை எழுப்புவது இன்றைய நாளில் சவால் நிறைந்தது. வணிக மயமான வாழ்க்கை முறையும் அபிலாசைகளும் நிறைந்துவரும் சூழலில் இலட்சியமயப்பட்டு நிற்றல் என்பது சவாலானதே. நடைமுறை வாழ்வில்தான் இந்த அனுபவத்தை புரிந்து கொள்ளமுடியும்.

புகழேந்தியின் ஓவியங்களில் கடுமை தொனிக்கிறது. வர்ணங்களிலும் உருவங்களி லும் கூட கடுமைத்தன்மையுண்டு. போராட்டம், எதிர்ப்படையாளம் என்றுவரும்போது தவிர்க்க



முடியாமல் அதில் கடுமைதொனிக்கும். எதிர்கொள்ளல் என்பது எப்போதும் இலகு வானதல்ல. அது சவால்கள் நிறைந்தது. எப் போதும் ஒடுக்குமுறை வலிமையுள்ள தரப்பா லேயே பிரயோகிக்கப்படுகிறது. அதிகாரம், பொருளாதாரவளம், சமூக மேல்நிலை என்று பல நிலையிலும் இந்த வலிமை ஒடுக்குமுறை யாளர்களுக்குண்டு. ஆனால் ஒடுக்கப்படும் தரப்புக்கு இந்த வளங்களும் அம்சங்களும் இருப்பதில்லை. இதனால், அது தன்னுடைய இருப்புக்கும் இருப்புக்குச்சவாலான விடயங்க ளுக்குமாகக் கடுமையாகவே தன்னை அடை யாளப்படுத்த வேண்டியிருக்கிறது. இந்தக் கடு மையை பலரும் பலவிதமாக வியாக்கியா



னப்படுத்துகிறார்கள். ஆனால், இந்தமாதிரியான போது தவிர்க்கமுடியாமல் இதில் தீவிரத் தன்மை, கடுமை, சீரியஸ் என்பன வந்துவிடு கின்றன.

இரத்தமும் கண்ணீரும் வலியும் துயரும் பீறிடும் வாழ்வு கடுமையன்றி வேறென்ன? தீயும் புகையும் ஓலமும் அவலமும் சூழ்ந்த வாழ்க்கை கடுமையென்றில்லாமல் வேறெப்படியிருக்கும்.

கடுமைக்குரிய கோடுகளும் நிறங்க ளும் அவற்றுக்கேயுரிய இயல்போடு அமைந் திருக்கின்றன. செம்மஞ்சள், கருஞ்சிவப்பு, மண் ணின் நிறம் கலந்த ஒருவகை வெளிப்பாட்டை இவற்றில் பார்க்கமுடியும்.

புகழேந்தியின் ஓவியங்களுடன் நெருக்கமாகக்கூடியவர்கள் பெரும்பாலும் ஒடுக் கப்பட்டமக்களாக இருப்பர். விடுதலைக்காகப் போராடும் சனங்களிடம் 'இந்த ஓவியங்கள் கூடுதலாகப் புரிந்துகொள்ளப்படும். புகழேந்தி எப்போதும் இறுக்கமான தொனியோடுதான் ஓவியங்களை உருவாக்குகிறார்' என்றொரு அபிப்பிராயத்தை நண்பரொருவர் ஒருதடவை சொன்னார். புகழேந்தி பயன்படுத்தும் வர் ணங்களிலும் இந்தமாதிரியான ஒரே இயல்பைத் தொடர்ந்தும் அவதானிக்கலாம் என்றுமவர் சொன்னார்.



வெளிப்பாட்டின் வடிவம் குறித்த அபிப்பிராயம் பற்றி மட்டுமே அவர்கூறியது. வெளிப்பாட்டு வடிவத்தைப்பொறுத்து ஒரு ஓவியர் தன்பாணியை தனி அடையாளமாக அவர் தொடர்ந்தும் ஒன்றை, அல்லது ஒரே வகையைப் பேணலாம். அல்லது வெவ்வேறு வடிவங்களூடாக புதிது புதிதாக வடிவப் பரி சோதனை செய்யலாம். வேறுவேறு வடிவங் களில் அவற்றின் பொருளுக்கேற்ப வரையலாம். இவையெல்லாமே ஒரு ஓவியனின் சுயாதீனத்தை பொறுத்தது. புகழேந்தியின் சுயா தீனத்தை அவருடைய ஓவியங்கள் சாதிக்கும் வெற்றியே நிரூபிக்கும்.

ஈழப்பிரச்சினை அல்லது ஈழப் போராட்டம் குறித்த அக்கறையோடு உணர்வு பூர்வமாக தமிழகத்திலுள்ள ஓவியர்கள் சிலர் செயற்பட்டிருக்கிறார்கள். வீர சந்தானம், ட்ராஸ்கி மருது, அரஸ், புகழேந்தி ஆகியோர் இதில் முக்கியமானவர்கள். வீரசந்தானம் எண்பதுகளில் ஈழப்போராட்டம் தொடர்பான ஓவியக்காட்சிகளை தமிழகத்தில் நிகழ்த்தியிருக்கிறார். அன்றைய நாளின் ஈழநிலைமைகள் குறித்த பிரிவுகளவை. முகில்களின்மீது நெருப்பு என்றொரு ஓவியத் தொகுப்பையும் அப்போது சந்தானம் வெளியிட்டிருந்தார். தவிர கோட்டோவியங்கள் மூலமாக பல புத்தகங்கள், நூல்களில் ஈழம் மீதான தன்னுணர்வுகளை வெளிப்படுத் திவருகிறார் சந்தானம்.

ட்ராஸ்கி மருதுவின் செயற்பாடுகளும் இன்னொரு தளத்தில் முக்கியமானவையாக இருக்கின்றன. மருதுவின் பதிவுகளும் வெளிப்பாடுகளும் நிறையவுண்டு. அவருடைய ஓவியங்களுடன் தமிழீழ மக்கள் நிறையப் பரிச்சயத்துடனிருக்கிறார்கள்.

அரஸ் குறைந்ததாகவே செய்திருந் தாலும் அவரையும் இந்தவகையில் அறிந் திருக்கிறார்கள் ஈழமக்கள்.

புகழேந்தி இந்தவகையில் கூடுதலும் தொடர்ச்சியுமுள்ள ஓவியர். ஓவியக்காட்சிகள் மூலமாக இந்தியாவிலும் பிறநாடுகளிலும் ஈழப்பிரச்சினையைப் பேசியவர். கவனத்தை ஏற்படுத்தியவர். போராட்டத்தின் நியாயத்தை சொல்லியவர் என்றவகையில் புகழேந்தி இன்னொரு படி மேலே நிற்கிறார். அவர் ஓவியம் படைத்தல், அவற்றை காட்சிப்படுத்தல், ஆவணப்படுத்தல், தொகுத்தல், நூலாக்குதல் என்று பரந்த தளத்தில் தொடர்செயற்பாட்டில் தீவிரமாக இயங்கிவருகிறார். இதை 'புகழேந்தியின் ஓவிய இயக்கம்' என்று சொல்லலாமா என்றுகூடத்தோன்றுகிறது. புதிய, இளையதலைமுறையினரை இந்த இயக் கத்துடன் இணைப்பதில்தான் அவருடைய இனிமேலான கவனம் இருக்கும் என நம்பு கிறேன்.

புகழேந்தி எப்போதும் தொடரி யக்கத்தை விரும்புபவர் என்பதால் இதுதான் அவருடைய வழிமுறையாகவும் இருக்கும். அது தவிர்க்கமுடியாததும்கூட.

அவருடைய ஓவியங்களுக்கும் எண் ணங்களுக்குமிடையில் இடைவெளியில்லை என்பதால் இதுதான் நியதியாகும்.




## கைவண்ணம்



இ.அனஸ்டிகா

# எங்கள் வண்ணத்துப்பூச்சி



இது பூச்சி இனத்தைச் சேர்ந்தது. பல அழகான வண்ணங்களையுடைய பூச்சி ஆதலால் இதற்கு வண்ணத்துப்பூச்சி என்று பெயர். இவ்வகை நிறங்களை இறகுகளுக்குத் தருவது ஒருவிதச் செதிலாகும். நாம் அதன் இறகைத் தொட்டுப் பார்த்தால் மினுமினு என்று ஒரு பொடி நம் விரல்களில் ஒட்டிக்கொள்ளும். அந்தப் பொடிதான் செதில்.

வண்ணத்துப் பூச்சியின் உடல் சிறியதாக இருக்கும். இது தலை, மார்பு, வயிறு என மூன்று பகுதிகளை உடையது. தலையில் இரண்டு நீண்ட உணர் இழைகள் உண்டு. இவை மணத்தை அறியவும் ஒலியை உணரவும் பயன்படுகின்றன. தேனை உறிஞ்சிக் குடிப்பதற்கென்று இதன் வாயில் குழல் போன்ற உறுப்பு உள்ளது. இதற்கு உறிஞ்சு குழல் என்று பெயர். மலரில் அமர்ந்து இக் குழலை நீட்டித் தேனை உறிஞ்சிக் குடிக்கும். மற்ற நேரங்களில் இதைச் சுருட்டி வைத்துக்கொள்ளும். வண்ணத்துப் பூச்சிக்குத்தலையில் இரண்டு கண்கள் உண்டு. இவை ஒவ்வொன்றும் ஆயிரக் கணக்கான சிறியகண்கள் சேர்ந்த கூட்டுக் கண் ஆகும்.

வண்ணத்துப்பூச்சியின் உணவு பூவில் உள்ள தேன் தான். பூவின் மேல் அமர்ந்து இது தேனைக் குடிக்கும்போது பூவின் மகரந்தத்தூள் அதன் கால்களிலும் உடலிலும் ஒட்டிக் கொள்ளும். பிறகு வேறு ஒரு மலரின் மீது சென்று உட்காரும் போது, ஒட்டிக்கொண்டிருக்கும் மகரந்தத்தூள் அந்தப் பூவில் விழும். இவ்வாறு மலர்களில் மகரந்தச்சேர்க்கை நிகழ்வதற்கு வண்ணத்துப்பூச்சி உதவுகிறது.

வண்ணத்துப்பூச்சியின் வாழ்க்கையில் நான்கு பருவங்கள் உண்டு. முட்டை, லார்வா அல்லது புழு, பியூப்பா அல்லது கூட்டுப்புழு, முதிர் நிலை ஆகியவை இப்பருவங்கள். புழு இலைகளை அதிகமாகத் தின்று கொண்டே இருக்கும். அதனால் இது தாவரங்களுக்கு மிகவும் தீங்கு செய்கின்றது. இலை, பூ இவற்றை அரித்துவிடும். இது வளரவளர நான்கு அல்லது ஐந்துமுறை தோலுரிக்கும்.

பின்னர் புழுவின் மேல் தோல் ஒரு கூடு போல ஆகும். இந்தக் கூட்டுப்பருவம் தான் பியூப்பா. இந்நிலையில் புழு உணவுகொள்ளாமலும் அசையாமலும் உறங்கும். கூட்டினுள் பல மாற்றங்கள் உண்டாகின்றன. இறுதியில் கூட்டைக்கிழித்துக்கொண்டு அழகான வண்ணத்துப்பூச்சியாக வெளியே வந்து பறக்கிறது.

வண்ணத்துப் பூச்சிகளில் ஆயிரக்கணக்கான வகைகள் உள்ளன. ஒவ்வொன்றிற்கும் ஒரு தனி அழகு உண்டு.

## சொற்சிலம்பம் - 65

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| உ | கோ | ம | தி | ல | ட் | ஸ் |
| க | கு | நீ | நா | ள் | ர் | ல் |
| மா | பா | ல் | கோ | ன் | ணி | ம் |
| வா | அ | ச் | ய | ச | ங் | பெ |
| நா | ட் | த | ஷா | ரா | வ | ர |
| தி | வ | கி | சா | ய் | ம் | ஜே |
| சி | பூ | ப் | ஓ | கி | வி | த் |

கட்டங்களில் காணப் படும் எழுத்துக்களை இணைத்து கேட்கப்படும் வினாவுக்கு விடை அனுப்பி வையுங்கள்.

## சொற்சிலம்பம் -63 இன் விடைகள்

01. மாலதி

02. கிரகம்பெல்

## சொற்சிலம்பம் - 63 இன் பரிசுக்குரியவர்

ம.நிறோஜன்,
யா/தாளையடி றோமன்,
கத்தோலிக்க
வித்தியாலயம்.

## சொற்சிலம்பம் - 63 இன் பாராட்டுக்குரியவர்கள்

01. தி.மகேஸ்வரன், முத்துஐயன் கட்டு, இடதுகரை.
02. செ.மேனகா, தரம்4C, கிளி/மத்திய கல்லூரி.
03. சூ.சூபராஜ், 155 லக்ஸ்சபான வீதி, வவுனியா.
04. க.கபிலேஷ், தரம் 4B, மு/பாலிநகர் ம.வி, வவுனிக்குளம்.
05. ந.டயாழினி, திருநாவுக்கரசு ம.வி, யா/கொடிகாமம்..
06. அ.றோஜிதா தரம்-6, அ.த.க. பாடசாலை, நட்டாங்கண்டல்.
07. யோ.சிவாஜினி, யா/மட்டுவில் ம.வி, மட்டுவில்.
08. யோ.நஜிதரன், பூந்தோட்டம், வவுனியா.

01. நீராவி இயந்திரத்தை கண்டுபிடித்தவர்?
01) ...................................

02. உலகத்தின் கூரை என்று அழைக்கப்படும் நாடு?
01) ...................................

பெயர் :- ...................................


முகவரி :- ...................................

...................................

சொற்சிலம்பம்-65
ஈழநாதம்.
யாழ்சாலை.
கிளிநொச்சி.

## முயலாரும் ஆமையாரும்

**பகுதி-01**






# அப்பிள் பற்றிய ஆய்வு


தினமும் ஒரு அப்பிள் உண்பது உடல் நலனை பாதுகாக்கும் என்று பல ஆண்டுகளாக மருத்துவர்களும் பிறரும் கூறிவருவதை கேட்டிருக்கிறோம். அப்பிள் பற்றிய ஆய்வுகள் இன்றும் தொடர்ந்து கொண்டிருக்கின்றன. நியூயோர்க்கில் நடத்தப் பட்ட சமீபத்திய ஆய்வு ஒன்றில் மூளைகள் பாதிப்பை அப்பிள் தடுக்கிறது என்று கண்டறியப்பட்டுள்ளது. அதோடு அப்பிள் உண்பதினால் புற்றுநோய் ஆபத்து குறைவது மட்டுமல்லாமல் நரம்பியல் கோளாறுகள் ஏற்படும் வாய்ப்புகளும் குறைகின்றன.

நியூயோர்க்கின் கார்னல் பல் கலைக்கழக உணவு அறிவியலாளர்கள் மேற்கொண்ட இரண்டு புதிய ஆய்வின்படி, அப்பிளில் உள்ள ரசாயனங்கள் அல்செய்மர் நோய், பார்க்கின்சன் நோய் போன்றவற்றுக்கு காரணமான பாதிப்புகள் ஏற்படாமல் மூளையை பாதுகாக்கின்றன.

அப்பிளில் உள்ள கியூர்செட்டின் என்ற பைடோநியூட்ரியன்ட்தான் மூளை செல்களைப் பாதுகாக்க பெரிதும் காரணமாக உள்ளன என்று இந்த ஆய்வில் கண்டுபிடிக் கப்பட்டுள்ளது. பீனாலிக் அமிலம் போன்ற பைடோநியூட்ரியன்ட்களும் பிளேவனாய்டுகளும் அப்பிளை பாக்டீரியா, வைரஸ், பூஞ்சான் போன்றவற்றிடமிருந்து காக்கிறது. இதனால் அப்பிளில் ஆண்டி ஆக்ஸிடன்ட் மற்றும் புற்று நோய் எதிர்ப்புத் தன்மைகள் கிடைக்கின்றன.

கலங்களை பாதித்து புற்றுநோய் உண்டாக்கும் பிரி ராடிக்கல்களை நீக்கும் தன்மை வாய்ந்தவை ஆண்டி ஆக்ஸிடன்டுகள். "அதிகளவு அப்பிள் உண்பதினால் புற்றுநோய் ஆபத்து குறையும். தினம் ஒரு அப்பிள் சாப்பிட்டால் கிடைக்கும் பயோ ஆக்டிவ் கூட்டுப் பொருட்கள் நரம்பியல் பிரச்சினைகள் ஏற்படும் வாய்ப்புகள் குறையும்" என்கின்றார் கார்னல் பல்கலைக்கழகத்தின் உணவு அறிவியல் பேராசிரியர்.

ஆய்வாளர்கள் எலிகளை வைத்துச் செய்த ஆய்வில் பல உண்மைகள் தெரிய வந்துள்ளன. இந்த ஆய்வில் அப்பிளிலிருந்து எடுக்கப்பட்டபீனாலிக் பொருட்கள் அதிகமாக சேர்க்கப்பட்ட போது ஒக்ஸிடேடிவ் ஸ்ட்ரெஸ்ஸி லிருந்து எலியின்



நரம்புக் கலங்கள் அதிகம் பாதுகாக் கப்பட்டன. "அப்பிள் பீனாலிக்குகள் பசுமையான அப்பிள்களில் காணப்படும் ஆன்டி ஆக்ஸிடன்டு கள் ஆகும். இவை ஆக்ஸிடேடிவ் ஸ்ட்ரெஸ்ஸி னால் உண்டாகும் நியூரோடாக்ஸிடியிலிருந்து நரம்பு செல்களைப் பாதுகாக்கிறது" என்கின்றனா ஆய்வாளர்கள்.

"அப்பிளில் உள்ள கியூர்செட்டின்தான் இந்நன்மைகளுக்குக் காரணமான முக்கிய பொருட்களாகக் காணப்படுகிறது" என்கின்றனர் ஆய்வாளர்கள். செல் மற்றும் திசுக்களை பாதிப்பிலிருந்து பாதுகாப்பதில் முக்கிய பங்கு வகிக்கும் அன்டிஆக்ஸிடன்ட் விற்றமின் சி ஆகும். இதனையும் விட நன்றாகப் பாதுகாப்புத் தரும் தன்மையுடையது கியூர்செட்டின். அப்பிள், பெர்ரி மற்றும் வெங்காயத்தில் கியூர்செட்டின் அதிகம் உள்ளது.

# மனித உடலமைப்பு

மனித உடல் அமைப்பு இன்றிருக்கும் நிலைக்கு வரக்காரணம் 'மனிதனுக்கு இருந்த ஓடும் தன்மைதான் என்கின்றனர் உயிரியல் ஆய்வாளர்கள். விலங்குகளை வேட்டையாடவும் பிற காரணங்களுக்காகவும் நீண்ட தூரம் குரங்கு போன்ற அமைப்புக் கொண்ட நம் முன்னோர்கள் ஓடத் துவங்கினர் என்கின்றனர்.




ஓடுவதற்கு உடலில் பல மாற்றங்கள் தேவைப்பட்டன. ஏனெனில், மனிதன் தோன் றியது, ஓடத்தெரிந்த ஆஸ்டிராலோபை தசைன்ஸில் இருந்துதான். நமது மரபணுவான ஹோமோ 20 லட்சம் அல்லது அதற்கு மேலான ஆண்டுகளுக்கு முன் ஆஸ்டிராலோபை தகஸிலிருந்து தோன்றியது. காலம் செல்லச் செல்ல மனித உடலில் ஏற்பட்ட மாற்றங்களின் காரணமாக மனிதனால் நீண்ட தூரம் ஓட முடிந்தது.

"ஓட்டம்தான் நம்மை உடல் அளவில் மனிதனாக்கியது எனலாம். மனித சரித்திரத்தில் உள்ள மிக முக்கிய மாற்றங்கள் உண் டாக்கிய வற்றுள் ஒன்று ஓட்டம் என்று நம்புகிறோம்" என்கின்றனர் உயிரியல் நிபுணர்கள்.

இக்கண்டுபிடிப்பு முந்தைய கண்டு பிடிப்புகளுக்கு முரணாக உள்ளது. இதுவரை மனிதனின் நடக்கும் தன்மையிலிருந்து சாதாரணமாக வளர்ந்ததுதான் இந்த ஓடும் தன்மை எனப்பட்டது.

ஆனால், இந்தக் கண்டுபிடிப்பில் ஓடு வதால்தான் ஹோமோவுக்கும் ஆஸ்டிராலோபை தகஸிற்கும் உடலில் வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன எனப்பட்டுள்ளது."45 லட்சம் ஆண்டுகளுக்கு முந்தைய குரங்கு போன்ற ஆஸ்டிராலோபைதகஸால் இரண்டு கால்களில் நேராக நடக்க முடியும். ஆனால், அடுத்து 30 லட்சம் ஆண்டுகளுக்கும் மேல் உடலில் பல மாற்றங்களை உடைய ஹோமோ தோன்றவே இல்லை. ஹோமோவில் முதலில் ஹோமோ ஹேபிலஸ், ஹோமோ எரக்ட்ஸ் பின்னர் நம் இனமான ஹோமோ சேப்பியன்ஸ் தோன்றின. எனவே, நடப்பதை வைத்து தற்போதைய மனிதனின் உடலமைப்பை விவரிக்க முடியாது" என்கிறார்கள் ஆய்வாளர்கள்."25, 30 லட்சம் ஆண்டுகளாக, மனிதர்கள் போல் இல்லாதவர்களிடம் இருந்து வந்த இரு காலினால் நடக்கும் தன்மைக்குப் பிறகு, ஓட்டம் தான் உடலில் மாற்றங்களை ஏற்படுத்தியது" என்கின்றனர். ஹோமோவுக்கும் ஆஸ்டிரா லோபைதகஸிற்கும் உடலளவில் பல வேறு பாடுகள் இருந்தன."இயற்கையின் உருவாக் கத்தில் ஓடும் தன்மை இல்லாதிருந்தால் நாம் இன்றும் முந்தைய குரங்கு மனிதனைப் போன்று தான் காட்சியளித்திருப்போம்" என்கின்றனர். கிடைக்கப்பெற்ற பல ஹோமோ எரக்ட்ஸ் மற்றும் ஹோமோ ஹாபிலஸ் பாஸில்கள் இதனை உறுதிப்படுத்துகின்றன என்கின்றனர் ஆய்வாளர்கள். ஓடுவதற்கு வசதியான வகை யில் உடல் அமைப்புகள் காலம் செல்லச் செல்லத்தான் மாறியிருக்கின்றன என்கிறார்கள்.

த.அருவி




# டெங்குக் காய்ச்சல் உயிராபத்தை விளைவிக்கலாம்

உங்களுக்குத் திடீரெனக் காய்ச்சல் ஆரம்பிக்கிறது 102°F-103°F எனக் கடுமை யாக ஏறிக் காய்கிறது. கை, கால், மூட்டுக்கள் எல்லாம் தாங்கமுடி யாதவாறு வலிக்கின் றன. உடலெல்லாம் நோவினால் முறித்துப் போட்டது போல அசதியாக இருக்கிறது.

டெங்குக் காய்ச்சலாக இருக்குமோ என ஐயுறுகிறீர்கள்!

உங்கள் ஊகம் சரிதான். டெங்குக் காய்ச்சல் சிறிது சிறிதாக ஆரம்பிப்பதில்லை. திடீரென ஆரம் பிக்கும். மிகக் கடுமையாக ஏறிக் காயும். கடுமையான உடல்வலி- முக்கியமாக மூட்டுகளைச் சுற்றியும் தசைநார்களிலும் இருக்கும். கண்வலியும், வெளிச்சத் தைப் பார்க்கும்போது கண் கூச்சமும் ஏற்படலாம்.

வேறு சிலருக்கு வயிற்று நோ பசியின்மை, வாந்தி போன்ற அறிகுறிகளுடன் டெங்குக்காய்ச்சல் ஆரம்பிக்கலாம். சிலருக்குப் பிடரிப்பகுதியில் 'நிணநீர்க் கட்டிகள் (நெறிகள்) தோன்றுவதுண்டு.

காய்ச்சல் 2முதல்7 நாட்களுக்குள் தானாகவே படிந்துவிடும். ஆயினும் உடற் சோர்வும், பலயீனமும் மேலும் சில நாட்களுக்குத் தொடரலாம்.

சில நாட்களுக்குள் தானாகவே படிந்துவிடும். டெங்குக் காய்ச்சல் பற்றி இவ்வளவு ஆரவாரம் ஏன் என நீங்கள் கேட்கக்கூடும். கரணங்கள் பல.

காய்ச்சல் சில நாட்களுக்கு மாத்திரம் அடித்தாலும் தேக ஆரோக்கியம் மோசமாகப் பாதிக்கப்படுவதால், காய்ச்சல் மாறிய பின்பும் பல நாட்களுக்கு நோயுற்ற வராய வழமைபோல் செயற்படமுடியாது போய்விடுகிறது.

அத்துடன் இக்காய்ச்சலில் பல உபபிரிவுகள் இருப்பதால் டெங்குக் காய்ச்சல் வந்தவருக்கு அது மீண்டும் வராது என்று சொல்லிவிட முடியாது. சிறிய கால இடைவெளிக்குள் மீண்டும் மீண்டும் தொற்றி நோயை ஏற்படுத்தி நோயாளியை நலிவடையச் செய்துவிடும்.

இவற்றையெல்லாம்விட முக்கியமானது டெங்கு இரத்தப்பெருக்குக் காய்ச்சல் (Dengu Haemorrhagic Fe-ver-DHF) என்ற வகை டெங்குக் காய்ச்சல்தான். இது மிகவும் கடுமையானதும், அதிகளவு மரணத்தையும் (10% வரை) ஏற்படுத்தக் கூடியதுமாகும்.

எனவேதான் இந்நோய் பற்றிய அடிப்படை அறிவைப் பெற்று நோய் பரவுவதைத் தடுக்கவும், நோய் வந்தால் பொருத்தமான சிகிச்சை பெறவும் தயாராக இருக்கவேண்டும்.

டெங்கு இரத்தப்பெருக்குக் காய்ச்சலின் அறிகுறி கள் என்ன என்று அறிய ஆவலாயிருப்பீர்கள். சாதாரண டெங்குக் காய்ச்சலின் அறிகுறிகள் வழமை போல் அல்லது வழமையிலும் சற்றுத் தீவிரமாக இருக்கும். அத்துடன் கை கால்களிலோ, அக்குளிலோ, அல்லது முகத்திலோ சிறிது இரத்தக் கசிவு தோலுக்கு அடியில் தோன்றலாம். இதேபோல் இரத்தக் கசிவு மேல்வாயிலும் தோன்றலாம். ஒரு சிலருக்கு மூக்கிலிருந்தோ, முரசி லிருந்தோ சிறிது இரத்தம் சிந்தலாம்.

அத்துடன் அந்நோயாளி அதிர்ச்சி (Shock) நிலையிலிருக்கலாம். அதிர்ச்சி நிலையை எப்படி அறிந்து கொள்வது எனக் கேட்கிறீர்களா?

அதிர்ச்சி நிலையின் போது நோயாளி கடும் சோர்வுடன் இருப்பார். அவர் உடல் தளர்ந்திருக்கும், தோல் வெளிறியிருக்கும், உதடுகள் நீலம் பாய்ந்திருக் கலாம். நாடித்துடிப்பு அதிகரித்திருக்கும். இரத்த அமுக்கம் வீழ்ச்சியடைந்திருக்கும்.

இரத்தப் பெருக்கின் அறிகுறிகளோ, அதிர்ச் சியின் அறிகுறிகளோ தெரிந்தால் அந்த நோயாளியை உடனடியாக வைத்தியசாலையில் அனுமதிப்பது அவசியம். இல்லையேல் அவர் மரணத்தைத் தழுவக் கூடும். சேலைன், குளுக்கோஸ் ஏற்றுதல் இரத்த மாற்றீடு போன்ற தீவிர சிகிச்சைகள் அவருக்குத் தேவைப்படலாம். எனவே தாமதிக்க வேண்டாம்.

டெங்குக் காய்ச்சலும், டெங்கு இரத்தப் பெருக்குக் காய்ச்சலும் ஆர்போவைரஸ்(Arbo virus)என்ற வகை வைரஸ் கிருமியாலேயே உண்டாகின்றன. நுண்ணுயிர் கொல்லி மருந்துகள் எந்த வகையிலும் இந்நோய்க்கு உதவமாட்டா. காய்ச்சலுக்கும், உடல் உளைவுக்கும் பரசிட்டமோல் மாத்திரைகளை உபயோ கிக்கலாம். அஸ்பிறின், டிஸ்பிறின் ஆகிய மருந்து களைத் தவிர்க்கவேண்டும். ஏனெனில் அவை இரத்தப் பெருக்கைத் தீவிரப்படுத்தும்.

இக்காய்ச்சல் ஒரு மனிதரிலிருந்து மற்றவருக்கு நேரடியாகத் தொற்றுவதில்லை. எனவே நோயாளியைப் பராமரிப்பவருக்கு இந்நோய் தொற்றும் அபாயம் இல்லை. **Aedes aegypti, Aedes albopictus** ஆகிய நுளம்புகளாலேயே இந்நோய் பரவுகிறது.

இந்நோய்க்கு எதிரான தடுப்பு ஊசி இன்னமும் கண்டுபடிக்கப்படவில்லை. எனவே டெங்கு பரவுவதைக் கட்டுப்படுத்துவதாயின் **Aedes** இன நுளம்பு பெருகு வதைத் தடுப்பதுதான் ஒரேவழி.

எமது அசிரத்தையாலேயே இந்நுளம்பு பெருகுகிறது. வீட்டுச் சுற்றாடலில் நாம் கவனயீனமாக வீசிவிடும் சிரட்டைகள், போத்தல்கள், தகரங்கள், பிளாஸ்டிக் டப்பாக்கள், டயர்கள் போன்றவற்றில் தேங்கிநிற்கும் சிறிதளவு நீரிலேயே இந்த நுளம்புகள் பெருகுகின்றன. சுற்றாடலில் கிடக்கும் இத்தகையை பொருள்களில் நீர் தேங்காதவாறு கவிழ்த்து வைக்க வேண்டும் அல்லது ஆழப்புதைத்துவிட வேண்டும். அல்லது அழித்துவிடவேண்டும்.

நீர் சேகரித்து வைக்கும் தொட்டிகளிலும், பரல்களிலும் கூட இந்நுளம்புகள் பெருகுகின்றன. எனவே அவற்றை நுளம்பு உட்செல்லாதவாறு இறுக மூடிவைக்கவேண்டும் அல்லது தினமும் அவற்றைச் சுத்தப்படுத்தி, நீரை முழுவதும் மாற்றவேண்டும்.

நோய் பற்றியும், அதனைப் பரவாது தடுக்கும் முறைகளையும் மக்களுக்குத் தெரியப்படுத்துவதுடன், அவர்களையும் நுளம்பு ஒழிப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுத்துவதன் மூலம் இந்நோய் பரவுவதை தடுக்கலாம்.

# வாழ்க்கைக்கு அவசியமான விளையாட்டு

இன்றுள்ள கல்வித்திட்டத்தில் விளையாட்டுக்கள் தனிச்சிறப்புடைய ஓரங்கமாக விளங்குகின்றன. ஏட்டுக்கல்வி செயன் முறைக் கல்வி என்பவற்றுக்கு எத்துணை சிறப்புண்டோ அத்துணை சிறப்பு விளையாட்டுக்களுக்கும் உண்டு. என்று கல்வித்திட்டம் வலியுறுத்துகிறது. அன்றியும் கல்விச் சாலையிலே மாணவர்கள் மனதைப்பெரிதும் கவர்ந்துள்ள துறையும் அதுவாகும். ஓடி விளையாடுவதில் நாட்டம் கொள்ளாத குழந்தைகளுக்கு சில குறைபாடுகள் உள்ளன என்பது உளவியல் நூல் வல்லார் கண்டமுடிவாகும். கல்விச்சாலையிலே விளையாட்டு நேரமே மற்றதெல்லா நேரங்களை வீட மனமகிழ்ச்சியும் சுறுசுறுப்பும் வாய்ந்ததோர் இன்பப் பொழுதாகக் காட்சியளிக்கிறது. எனவேதான் மனமகிழ்வோடு தன்னிச்சை கொண்டு வெகுஇலகுவாகச் செய்யப்படுவது விளையாட்டென்றும் பரிபூரண விருப்பமின்றி ஓரளவு சிரமத்தோடு செய்யப்படுவது வேலை என்றும் எண்ணப்படுகிறது. அதனால் எந்தவொருவேலையும் மன மகிழ்ச்சியோடு சிரமமின்றிச் செய்யப்படுமானால் அது விளையாட்டாகிறது. எந்த விளையாட்டும் தன்னிச்சையின்றி சிரமத்தோடு செய்யப்படுமானால் அது வேலையாகிறது.

போதே பெரிதும் சிறப்படைகின்றன. இம்முயற்சி விளையாட்டுப் போட்டி எனப்படும்.

போட்டி விளையாட்டுக்களில் ஒரு குழு தன் எதிர்க்குழுவை எதிர்ப்பதற்குக் காட்டும் வேகம் திறமையும் ஈட்டும் வெற்றியும் மாத்திரமன்றி எதிர்க்குழுஎதிர்ப்பைத் தாங்கிப் போராடும் பண்பும் கணிக்கப்படுகின்றன. போட்டியிடும்போது ஒவ்வொரு குழுவுக்கும் வெற்றியே குறிக்கோள் அக்குறிக்கோளை அடைவதற்குத் தப்புவழிகளைப் பின்பற்றுதலும் மாற்றுக்குழுவினரை எதிர்த்து பொறாமைப் பட்டுக் கோபங்கொள்ளுதலும் இழுக்காகும். இவ்வித சீரான போட்டி விளையாட்டுக்கள் ஒவ்வொரு நாட்டிலும் உண்டு, உலக நாடுகளுக்கிடையே பலவகை அமைப்பு முறைகளுக்கேற்ப விளையாடப்படுகின்றன. அன்றியும், ஒரு நாடு இன்னொரு நாட்டை எதிர்த்துப்போட்டியிடுதலும் உண்டு. உலக நாடுகளிடையே நடைபெறும் உதைப் பந்தாட்டப் போட்டியும், இங்கிலாந்து, அவுஸ்திரேலியா, இந்தியா, மேற்கிந்தியத்தீவுகள்,

நோயற்ற வாழ்வு வாழமுடிகிறது. இவை அனைத்தும் விளையாட்டுப் போட்டிகள் விளையாட்டு வீர்களுக்கு உடல் சம்பந்தமாக அளிக்கும் உயரிய பரிசுகள்.

இவ்வகையான உடற்பரிசுகள் மாத்திரமன்றி உளப்பயன்கள் பலவும் விளையாட்டுப்போட்டியால் விளைகின்றன. தன் திறமை வெளிப்படவேண்டும்தானே பலரால்புகழப்படவேண்டும் என்று மனிதன் ஒவ்வொருவரும் எண்ணுவது இயல்பே. தன்னலம் மறந்து கருமமாற்றுவது மிக அரிது. தேவையான வேதனைகளிற் காணப்படும் தன்னலமறுப்பும் தியாகமனப்பான்மையும் வாழ்க்கையிற் பெறக்கூடிய இருபெரும் பேறுகளாகும். போட்டி விளையாட்டுக்களிலே தான் குழுவில் ஓர் அங்கத்தவர் என்றும் தன் குழுவின் வெற்றியே தன்வெற்றியென்றும் ஒவ்வொருவனும் கருதுதல் வேண்டும். இவ்வுணர்வில் நான் என்ற சுயநல எண்

யாட்டுப் பண்புகளே வாழ்க்கை வழிகளாகின்றன.

வெற்றியைக் கண்டு மனம் மிகக் களித்து ஆரவாரித்தலும் தோல்வியைக் கண்டு துக்கத்தாற் சோம்புதலும் மனதின் சமநிலையற்ற தன்மையையே காட்டும் வெற்றியையும் தோல்வியையும், சமமாக மதித்து இரண்டிடத்தும் சிரித்து மகிழ்பவனே உண்மையான வீரன். இவ்வித பண்பே வாழ்க்கையின் சகிப்புத் தன்மையாய் "இடுக்கன் வருங்கால்நகும்" பண்பாய் விளங்குகிறது. எனவே உள்ளத்தை திருத்தி நற்பண்புகளை விதைத்து வளர்க்கும் நல்லதொருவனாகவும் விளையாட்டுப்போட்டி விளங்குகிறது.

வாழ்க்கை மலர்ச்சோலையன்று மேடு பள்ளம் நிரம்பிய மலைவழி என்று சான்றோர் கூறுவர். வாழ்க்கையின் ஒவ்வொரு துறையிலும் தினம் தினம் பலபல போட்டிகளும் இன்னல்களும் எதிர்ப்படுகின்றன அவற்றையும் விளையாட்டுக்கள் போலக் கருதி வெல்ல முயலுதல்வேண்டும். இவற்றை வெல்ல முடியாது தோற்றாலுங் கூட மனம் தளராது மனமகிழ்ச்சியோடு மேலும் முயலுதல் வேண்டும். குழந்தைகள் விளையாடும்போது எதிர்பாராத விதமாக ஒருவரை



விளையாட்டு என்று கூறும்போது அதற்குரிய சில சிறப்புப் பண்புகளை நாம் அவதானித்தல்வேண்டும். மனமகிழ்ச்சியோடு இலகுவாகச் செய்யப்படுவது மாத்திரமன்றி அது உடலுறுப்புக்கு உரமளிப்பதாகவும் அமைதல் வேண்டும். குழுமுறையாலோ தனிமுறையாலோ போட்டியுணர்வு நிலவுதல்வேண்டும். அத் தன்மைகள் நிறைந்த விதிகளிலே நெறி முறையாக அமைக்கப்பட்ட விளையாட்டுக்கள் எல்லா நாடுகளிலும் காணப்படுகின்றன. கிளித் தட்டுமறித்தல். கெந்தியடித்தல், கிட்டியடித்தல், சடுகுடு முதலிய சுதேச விளையாட்டுக்கள் நம் நாட்டில் பெருமையுடன் விளையாடப்படுகின்றன. கிரிக்கெட், பந்தாட்டம், உதைபந்தாட்டம், மென்பந்தாட்டம். வலைப்பந்தாட்டம், கரப்பந்தாட்டம், முதலியன பலவகைப் பந்தாட்டங்களெல்லாம் மேலைத்தேச விளையாட்டுக்கள் எனப்பட்டு மக்கள் மனத்தைப்பெரிதும் கவர்ந்துள்ளன. இவ்விளையாட்டுக்கள் யாவும் திறம்பட அமைக்கப்பட்ட இரு வேறு குழுக்கள் ஒன்றையொன்றெதிர்த்து வெல்ல முயலும்

பாகிஸ்தான், இலங்கை என்பவற்றிற்கிடையே நடைபெறும் கிரிக்கெற் போட்டிகளும் உலக பிரசித்தமானவை. பன்னூறு ஆண்டுகளுக்கு முன்பே கிரேக்க நாட்டிலே வீரர்களிடையே தோன்றி வளர்ந்த ஒலிம்பிக் விளையாட்டுப்போட்டி உலக நாடுகளால் போற்றப்பட்டு காலத்துக்குக் காலம் பலநகரங்களில் நடைபெற்று வருகின்றது. இவ்விளையாட்டுப் போட்டிகளிலே உலகநாடுகள் சாதிக்கும் சாதனைகள் அகில உலகசாதனைகளாகி அந்நாடுகளுக்கு அழியாப்புகழைக்கொடுக்கின்றன - விளையாட்டுப்போட்டியிலே பங்கு கொள்ளும் வீரர்கள் ஓடியாடிவிளையாடுவதனால் அவர்களது இரத்தம் தூய்மை பெற்று இரத்தோட்டமும் சுறுசுறுப்படைகிறது. அதனால் செம்மையான சீரானசக்தி சித்திக்கிறது. உடலெங்கும் உள்ள தசைநார்கள் தொழிற்பட்டு வலுவடைகின்றன. நிமிர்ந்த முதுகும் அகன்ற மார்பும் திண்ணிய தோல்களும் வளவளப்பான புறஅங்க அமைப்பும் வாய்க்கப்பெற்று கட்டுறுதியும் வனப்பும் நிறைந்த தேகத்தோடு

ணம் மறைந்துவிட நமது குழு என்ற பொது நலமே நிற்கிறது. தமது குழுவின் உயர்வுக்காக ஒவ்வொருவனும் தனது கொள்கைகள் எண்ணப் பாங்குகள் ஆகியவற்றைக் கூடத் தியாகம் செய்ய வேண்டி ஏற்படுகின்றது. இப் பண்பே வாழ்க்கையில் அவனை நல்லதொரு குடிபதியாக்கி மேன்மை அளிக்கிறது.

குறிக்கோளின் சிறப்பு குறிக்கோளை அடையும் வழிகளின் சிறப்பிலேயே பெரிதும் தங்கியிருக்கிறது. என்ற மேற்கோள் விளையாட்டுப் போட்டிகளுக்கும் பொருந்தும் வெற்றியே விளையாட்டின் குறிக்கோளாயினும் அது நேர்மையான வழியில் பெறப்பட்டதாக இருத்தல் வேண்டும். அழுக்காற்றால் கோபங்கொண்டு எதிரியை மதிக்காமல் வஞ்சனை வழிகளைக் கையாண்டு ஈட்டப்படாதாயிருத்தல் வேண்டும். அப்போது தான் வெற்றி உண்மையான விலை மதிப்பற்ற வெற்றியாக மதிக்கப்படும். வெற்றி சிறப்புடையதாயினும் அதனிலும் பார்க்க விளையாட்டுக்குரிய இந்நற்பண்புகளைப் போற்றுதல் அதிசிறப்புடையது. இவ் விளை

ஒருவர் தாக்கி சண்டையிடுவர். அடுத்த கணம் சமாதானத்துடன் சேர்ந்து விளையாடுவர். அவர்களிடையே சண்டையுண்டு. ஆனால் கோபமில்லை. இதுவே குழந்தைப்பண்பு. இக்குழந்தை நிலையை வளர்த்து வாழ்க்கையை வளப்படுத்துவது விளையாட்டுப் போட்டியே. இச்சீரிய பண்பு வாழ்க்கையிற் கைகூடிவிட்டால் வாழ்வு சுவர்க்கமாகிவிடும். விளையாட்டுசமுதாயத் திலே பிரிக்கமுடியாத ஒரு அங்கமாக அமைகின்றது. அது மனிதப் பண்புகளையும் சமுதாயப் பண்புகளையும் வளர்ப்பதோடு உறுதி பெற்ற உடலையும் தந்து ஒருவனை முழு மனிதனாக்குகின்றது. இவ்வாறான விளையாட்டை தமிழ் மக்களிடையே வளர்ப்பதற்காக தமிழீழ விளையாட்டுத்துறையானது. தமிழீழ விளையாட்டு வீரர்களிடையே விளையாட்டை வளர்ப்பதற்கு தன்னாலான அனைத்து வேலைகளையும மேற்கொண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

**பொன் - பரன்**



திரைவிமர்சனம்

# பாஞ்சாலங் குறிச்சி

பாஞ்சாலங்குறிச்சி என்றவுடன் வீரபாண்டிய கட்டபொம்மன்தான் நினைவுக்கு வரும். வீரபாண்டிய கட்டபொம்மனுடன் பாஞ்சாலங்குறிச்சியின் மதிப்பும் உயர்ந்திருக்கிறது. கட்டபொம்மனின் சரித்திரம் பாஞ்சாலங் குறிச்சியின் மதிப்பையும் உயர்த்துகிறது. இப்போது சீமான். பாஞ்சாலங் குறிச்சியை இன்னொருவிதமாக நமக்கு அறிமுகப்படுத்தியிருக்கின்றார். பாஞ்சாலங்குறிச்சியின் இன்றைய சித்திரத்தை சீமான் எங்களுக்கு காண்பிக்கிறார்.

பாஞ்சாலங்குறிச்சியைப் பார்க்கும் போது ஜெயமோகனின் 'விஷ்ணுபுரம்' நாவல் நினைவுக்கு வந்தது. (இதுவிஷ்ணுபுரத்தை மிக எளிமைப்படுத்துவதாக கருதப் படத்தக்கதல்ல) விஷ்ணுபுரத்தில் முதற் காலகட்டத்தை ஒரு விதமாகவும் அடுத்த காலகட்டத்தை இன்னொரு விதமாகவும் ஜெயமோகன் காட்டுகிறார். முதற் காலகட்டம் எழுச்சியும் சிறப்பும் மதிப்பும் புகழும்மிக்கது. அடுத்த காலகட்டம் பழைய சிறப்பு . புகழ். மதிப்பையெல்லாம் அங்கே வாழ்கிற மக்களே அறிந்துகொள்ளமுடியாதபடியான வாழ்க்கையில் அங்குள்ள மக்கள் இருப்பது. பழையவை ஒரு கனவு போல மறைந்து இன்றைய நாளாந்த வாழ்வின் நெருக்கடிகளுடன் சனங்கள் அல்லாடுவது.

பாஞ்சாலங்குறிச்சியில் நாம் வீரபாண்டிய கட்டபொம்மனை கனவாகத்தான் காணமுடியும். படத்தில் ஒரு சொல்லோ ஒரு காட்சியோ கட்டபொம்மனை பற்றி வரவில்லை. ஆனால். ஏற்கனவே நாங்கள் அறிந்து வைத்திருக்கிற சேதிகளின் வழியாக கட்டபொம்மன் பாஞ்சாலங்குறிச்சியின் அடையாள வழியாக வருகிறார்.

சீமான் காட்டுகிற பாஞ்சாலங்குறிச்சி இன்றைய வாழ்க்கையை- இன்றைய யதார்த்தத்தை அடிப்படையாகக் கொண்டது. தமிழகத் தின் தென்பகுதி மாவட்டங்களில் அறியப்பட்ட வாழ்க்கையை- நிலவுகிற வாழ்க்கையை சினிமா என்ற ஊடகத்தின் வழி பார்வையாளர்களின் முன்வைக்கிறார் சீமான்.

பிரபு. சந்திரசேகர். விஜய குமார்.

என்று நடிகர்களின் வழியாக பாஞ்சாலங்குறிச்சியின் மனிதர்களின் அடையாளம் நிகழ்கிறது. பாஞ்சாலங் குறிச்சியின் இன்றைய வாழ்க்கை- இன்றைய நில அமைப்பு-



இன்றைய சூழல் என்பவற்றை காட்சியுடாக சாட்சிப்படுத்தும் சீமான் இவற்றினூடாக தன்னுடைய அடையாளத்தையும் பதித்துவிட முயற்சித்திருக்கிறார்.

பல இடங்களில் பார்திராஜாவின். நாகராஜ்ஜின் கிராமியப் படங்களைப் பார்ப்பதைப் போன்ற அனுபவம் கிடைக்கிறது.

கிராமத்தின் யதார்த்தம் அந்தச் சூழலிலும் அந்த மக்களின் வாழ்க்கை முறையிலும் பேசும் மொழியிலும் சித்திரமாகிறது. இந்தச் சித்திரத்தை சேதமில்லாமற் தருவதில் சீமான் கவனம் செலுத்தியுள்ளார். வாழ்க்கையின் தவறான விளங்குதல்கள்- புரிந்து கொள்ளமுடியாத யதார்த்தத்தின் முடிச்சுகள் மர்மங்களை தொடர்ந்தும் வைத்திருக்கும் வெவ்வேறான மன வுலகுகள் போல எல்லாவற்றையும் ஒன்றிணைத்து ஒரு நாவல் போல பாஞ்சாலங்குறிச்சியை உருவாக்கி யுள்ளார் சீமான்.

பார்ப்போரை நெகிழவைக்கும் கதையும் காட்சிகளும் படத்தை நினைவில் பதித்துவிடுகிறது. நல்ல மனிதர்களும் கெட்ட மனிதர்களும் உள்ள யதார்த்தத்தில் முடிவற்றிருக்கும் பிரச்சினைகளும் காயங்களும் வலியும் தான் இந்த படத்தின் கதையும். இந்த காயங்களையும் வலியையும் முடிந்தளவில் யதார்த்தத்தோடு இணைய வைப்பதில் சீமான் முயன்றிருக்கிறார். ஆனால் தமிழ்ச்சினிமா என்ற வணிக நோக்கின் நிலையினுள்ளும் சீமான் விழுந்திருக்கிறார். விநியோகஸ்தர்கள். தமிழ்ச் சினிமாவின் மொண்ணைத் தனமான பார்வையாளர்களைத் திருப்திப் படுத்தும் விதமாகபாடல். நடனம். பெண்ணுடல். காதலைத்தாண்டிய ஆண்பெண் இணைதலின் வெளிப்பாடுகள் என்பவற்றை தேவையில்லாமல் புகுத்தி படத்தை கீழிறக்கி விட்டிருக்கிறார். கதையமைப்பிலும் கூட வழமையான சினிமாவிலிருந்து பெரிய வேறுபாடுகள் ஏதுமில்லை. ஆனால் படத்தில் பரவலாக வைக்கப்பட்டிருக்கிற பல புள்ளிகள் நல்லதொரு படமாக பாஞ்சாலங்குறிச்சியை உருவாக்கியிருக்க முடியும் என்பதைக் காட்டுகின்றன.

படத்தில் வெற்றிபெறுமிடங்கள் நடிப்பும் கிராம வாழ்க்கை மற்றும் பண்பாட்டு வெளிப்பாடுகளும்தான். எங்கள் வாழ்க்கைப்புலத்தில். பண்பாட்டுத்தனத்தில் பாஞ்சாலங்குறிச்சியும் இருப்பதாக தெரிகிறது

பெருமளவுக்கு எங்களை இந்தப்படத்தில் அடையாளங்காண முடிகிறது. சீமான் படத்தை உருக்கமாகத்தரமுயன்றிருக்கிறார். அதில் அவருக்கு ஓரளவு வெற்றியுண்டு.

ஆனால். வணிகச் சமரசங்களை விலக்கி நல்ல அடையாளத்தைக் காட்டக்கூடிய தெம்புடன் முயன்றிருந்தால் அவருடைய எல்லை இன்றும் விரிந்திருக்கும்.அந்த விரிந்த எல்லையை அவருடைய அடுத்த படங்களில் பார்க்கலாம்.

**ஆரதி**

மனித உரிமைகள்
NESOHR

# சர்வதேச மனித உரிமைகள் தினம் டிசம்பர்-10

# வடக்கு கிழக்கு மனித உரிமை செயலகம்

யாழ்சாலை கிளிநொச்சி.

# NESOHR என்பது என்ன?

வடகிழக்கு மனித உரிமைகளுக்கான செயலகம் அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம், குடியியல் அரசியல் உரிமைகளுக்கான சர்வதேச கூட்டு உடன்படிக்கை, இன ரீதியான பாரபட்சத்தின் அனைத்து' வடிவங்களையும் இல்லாதொழிப்பதற்கான அமைப்பு, மனித உரிமைகள் தொடர்பான ஏனைய கருவிகள் ஆகியவை எமது மக்களுக்கு எதிரான வன்முறையைக் குறைப்பதற்கு பயன்விளைவுள்ள வகையில் பங்களிப்புச் செய்யவில்லை. என்பதை உணர்ந்து, தேசிய சர்வதேச ரீதியில் மனித உரிமைகள், அடிப்படைச் சுதந்திரங்கள் என்பவை தொடர்பான அறிவை மேம்படுத்தவும் அவற்றுக்கு மதிப்பளிக்கவும் தனிநபர், குழுக்கள், நிறுவனங்களுக்கு இருக்கும் உரிமையையும் பொறுப்பையும் மனதில் ஏற்று வடக்குக் கிழக்கிலுள்ள மனித உரிமைகள் செயற்பாட்டாளர்கள் குழுவொன்றினால் உருவாக்கப்பட்டது.

வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் NESOHR வடகிழக்கிலுள்ள அனைவரதும் மனித உரிமைகளைப் பாதுகாக்கவும் மேம்படுத்தலை நோக்கமாகக் கொண்டது.

## அதன் செயற்பாடுகள்:

மனித உரிமை மீறல்கள் தொடர்பான சான்றுகளைச் சேகரிப்பதுடன் அவை தொடர்பான தகவல்களை உறுதிப்படுத்துவதற்கும், ஆவணப்படுத்துவதற்குமென இடம் பெயர்ந்தோர் வாழும் முகாம்கள், தடுப்புக் காவல் நிலையங்கள், சிறைச்சாலைகள் போன்றவற்றுக்கு செயலாய்வுக் குழுக்களை அனுப்பும்.

வடகிழக்கில் இடம்பெறும் மனித உரிமை மீறல்கள் தொடர்பான அவசர மேல் முறையீடுகள், பத்திரிகைத் தகவல்கள், அறிக்கைகள், வெளியீடுகள் போன்றவற்றை விநியோகிக்கும்.

தேசிய சர்வதேசிய ரீதியிலான வெளியீடுகள், மாநாடுகள், கருத்தரங்குகள், கல்விச் சுற்றுலாக்கள் போன்றவற்றினூடாக தனிநபர்கள், குழுக்களுக்கு மனித உரிமைகள் தொடர்பான விழிப்புணர்வை உருவாக்கி அவற்றை வளர்த்தெடுக்கும்.

தகவல்களைப் பெறும்பொருட்டு பரஸ்பர ரீதியில் நன்மையளிக்கும் கூட்டுறவை விருத்தி செய்வதற்கும், வடகிழக்கில் மனித உரிமைக் கலாச்சாரத்தை மதிக்கவும் வளர்த்தெடுப்பதற்குமான செயற்பாட்டை ஆரம்பித்து வைப்பதற்கும் தேசிய சர்வதேசிய அரச அமைப்புகள், அரச சார்பற்ற நிறுவனங்களுடன் தொடர்பை உருவாக்கும்.

# செயலகம் உங்களுக்கு எப்படி உதவும்?

- எல்லா மனித உரிமைகள் சம்பந்தமான விடயங்களையும் ஆய்வு செய்தல்.
- இலவச சட்ட ஆலோசனைகளைப் பெற்றுக்கொடுத்தல்.
- உங்களுக்குத் தேவையான மனித உரிமைகளின் பாதுகாப்பை விசாரித்தறியும் மனிதத்துவத்தை மதித்தல்.
- மனித உரிமைகள் பற்றிய கல்வியை வழங்கல்.

# நிசோர் பட்டயத்தின் மூல ஏற்பாடுகள்

இலங்கைத் தீவின் வடகிழக்கு பகுதியில் வாழுகின்ற எல்லா மக்களது உரிமைகளுக்கும் பாதுகாப்புக்கும் நிசோர் அமைப்பு கடப்பாட்டைக் கொண்டுள்ளது. சர்வதேச மனித உரிமை பிரகடனம், சர்வதேச மனித உரிமைகள் கூட்டமைப்பாளர்கள், ஆபிரிக்க நாட்டின் மனித உரிமை பிரகடனம், பெண்களுக்கு எதிரான எல்லாவிதமான பாகுபாடுகளையும் ஒழிக்கும் மகாநாடு. சிறுவர்களின் உரிமைக்கான மகாநாட்டு கருத்துக்களையும், ஐ.நா.சபையின் குறைந்த அளவிலான கைதிகளின் பராமரிப்பு விதிகளையும் தனது பட்டயத்தில் கொண்டுள்ளது. எதிர்பார்க்கப்படும் நல்ல நோக்கத்திற்கான சூழ்நிலையிலும் அடிப்படை உரிமைகள் வரையறுக்கப்படவோ செயலிழக்கப்படவோ மாட்டாது. மேலும் மனித உரிமைகள் செயலகம் வடக்கு கிழக்கில் வாழும் சுதந்திர வேட்கை கொண்ட ஒவ்வொருவரினதும் குடியியல் உரிமைகளை நம்பிக்கையுடனும் உன்னத மரியாதையுடனும் பற்றி நிற்கின்றது.

குடிசார் அரசியல் சமூக பொருளாதார மற்றும் பண்பாட்டு உரிமைகள் போன்ற அடிப்படை உரிமைகளை உள்ளடக்கிய ஐக்கிய நாடுகளால் பிரகடனப்படுத்தப்பட்ட மனித உரிமைகளை பாதுகாக்கும் அம்சங்களை மனித உரிமைகள் பட்டயம் உள்ளடக்கியுள்ளது. சிறுவர் பெண்கள் போன்ற குறிப்பிட்ட வகையினரின் உரிமைகளை பாதுகாக்கும் பணியையும் தம் வேலைதிட்டத்தில் அடக்கியுள்ளது. அரசியல் உரிமைகள் மட்டுமல்லாது பெண்கள், சிறுவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பதையும் தனது அவசர வேலைத்திட்டத்தில் கொண்டுள்ளது.

## வடக்கு கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தால் உறுதிப்படுத்தப்பட்ட உரிமைகள்

## 1. அரசியல் உரிமைகள்.

1.1. எல்லா மனிதர்களுக்கும் சுதந்திரமாகக் கருத்துக்களை வெளியிடவும் தங்களது அரசியல் அபிலாசைகள், சமய நம்பிக்கைகள் உட்பட மனச்சாட்சியில் சரியெனப்பட்டவற்றைத் தெரிவிப்பதற்கும்.

1.2. எல்லா மனிதர்க்கும் சுதந்திரமாக தங்கள் கருத்தையும் நம்பிக்கையையும் தடையின்றி வெளிப்படுத்துவதற்கும்.

1.3. எல்லா மனிதர்களும் சமாதானமாகக் கூடுவதற்கும், அன்னியோன்னியமாக மற்றவர்களுடன் பழகுவதற்கும்.

1.4. எல்லா மக்களும் சுதந்திரமாகத் தேர்தல்களில் வாக்களிப்பதற்கும்.

1.5. எல்லா மனிதர்களும் அரசியலில் பங்கு கொள்வதற்கும் அரசியல் கட்சிகளில் இணைவதற்கும் தடையற்ற வகையில் பிரசாரம் செய்வதற்கும்.

1.6. காலத்துக்குக்காலம் நடைபெறும் தேர்தல்களில் தாம் விரும்பிய அரசை தெரிவு செய்வதற்கு ஒவ்வொரு மனிதர்களும் தடையற்ற தகுதி பெற்றவர்கள்.

1.7. எல்லா மனிதர்களும் அரச சேவையில் இணைவதற்கும் பதவிகளில் தெரிவு செய்யப்படுவதற்கும்.

1.8. எல்லோரும் அரச அலுவலர்களுடன் தங்கள் குறைகள் தொடர்பில் பரிகாரம் தேடுவதற்கும் மனுவை சமர்ப்பிப்பதற்குமான உரிமை பெற்றவர்கள்.

## 2.உறுதிப்படுத்தப்பட்ட பெண்களின் உரிமைகள்

2.1 ஆண்களுக்குச் சமமாக கணிக்கப்பட பெண்களுக்கு உரிமையுண்டு.

2.2. ஆண்களைப்போன்ற தரத்துடன் ஒத்த அல்லது சமமான நிலைப்பாட்டில் தொழிலில் அமர்த்தப்பட்டுள்ள பெண்களுக்கும் ஆண்களைப்போன்றே ஊதியம் பெற உரிமையுண்டு.

2.3.திருமணத்திலும் பெண்கள் சமமான உரிமையுடையவர்களே.

2.4. சகல வடிவங்களிலும் காணப்படும் சுரண்டுதல்களில் இருந்து தங்களைப் பாதுகாப்பதற்கு பெண்கள் உரித்துடையவர்கள்.

2.5. பெண்கள் தொழில் புரியும் காலத்தில் பிள்ளையை பிரசவிப்பதற்கு முன்பும் பின்பும் நியாயமான காலத்திற்கு சம்பளத்துடன் கூடிய விடுப்பைப் பெற உரித்துடையவர்கள்.

## 3.உறுதிப்படுத்தப்பட்ட சிறுவர்களின் உரிமைகள்.

3.1 எல்லா சிறுவர்களும் பெயரை வைத்துக்கொள்வதற்கு உரித்துடையவர்கள்.

3.2. திருமணப்பிணைப்பில் பிறந்த பிள்ளைகள் அனுபவிக்கும் உரிமைகள் அவ்வாறற்ற பிள்ளைகளுக்கும் உண்டு.

3.3. தொடக்கக்கல்வியை பெறுவதற்கான வழிகளையும் இலவச கட்டாய ஆரம்பக் கல்வியை உள்ளடக்கிய கல்வியை பெறுவதற்கும் உரித்துடையவர்கள்.

3.4. தொழில் முறைப் பயிற்சிகளையோ ஏனைய தொழிற்பயிற்சிகளையோ இலவசமாகப் பெறுவதற்கு உரித்துடையவர்கள்.

3.5. கைது செய்யப்படும் சிறார்களுக்கும் புனர்வாழ்வு கோருவதற்கு உரிமையுண்டு.

3.6. புறக்கணிப்பில் இருந்தும் கொடுமைகளில் இருந்தும் சுரண்டல் நிலைகளில் இருந்தும் தங்களை பாதுகாப்பதற்கான உரிமையுடையவர்கள்.

3.7. சிறு வயதில் வேலைக்கமர்த்தப்படுவதில் இருந்து விடுபடும் உரிமை உடையவர்கள்.

3.8 விளையாட்டுக்களிலும் பொழுதுபோக்கு நிகழ்வுகளிலும் வாய்ப்புப்பெறுவதற்கு உரிமையுடையவர்கள்.

3.9. எல்லா சமூகசேவைகளை ஆற்றுவதற்கு உரிமையுடையவர்கள்.

3.10. சிறுவர்களுக்கு தங்கள் எண்ணங்களை அவர்கள் விருப்பத்திற்கு ஏற்ப வெளிப்படுத்துவதற்கு உரிமையுண்டு. இவை சுதந்திரமான தேடுதல் செய்யவும், அறிவுத்தகவல்களை பெறுவதற்கும், பலவிதமான எண்ணக் கருவுகளைப் பெறுவதற்கும், எந்த நிலையிலும் விஞ்ஞான அறிவைப்பெருக்குவதற்கும், அவற்றை வாய்மூலமோ, எழுத்து வடிவத்திலோ, வர்ணம் தீட்டல் மூலமோ, படம் வரைதல் வாயிலாகவோ, அல்லது வேறு சிறுவர்களுக்கான ஊடகங்கள் மூலமோ வெளிப்படுத்த முடியும்.

3.11. இராணுவசேவையிலோ அல்லது இராணுவப்பிரிவிலோ அல்லது போரிடும் குழுவிலோ இணைக்கப்படாமலிருப்பதற்கு சிறுவர்களுக்கு உரிமையுண்டும்.

(சி-10850)



# உளவியல் நவீனம்...

**அத்தியாயம்- 05**

**பகுதி -26**

“இதுபோல போர்வீரர்களின் பொம்மைகள் நத்தாருக்கு உங்களுக்குத் கிடைத்ததா?” என்று அவன் கூறியதை மீளவும் கூறினேன்.

“ஓம் சரியா இதைப்போல பொம்மைகள் தான்” என்று தொடங்கியவன், “சரியா இதைப்போல




என்று சொல்ல முடியாது. ஆனால் இந்த வகையை போலத்தான். நத்தாருக்கு கிடைத்தன. இவர்கள் தங்கட கைகளில துவக்குக்களை வைச்சிருக்கினம். இதோ இருப்பவை தான் துவக்குகள். அவர்கள் சுடுகிறார்கள். துவக்கு கள்... உண்மையான துவக்குகள் சுடும். இந்த வீரன் தன் துவக்கை தோளில வைச்சுக கொண்டு இருக்கிறான். இந்த வீரன் சுடும் நிலையில் தன் துவக்கை வைச்சிருக்கிறான். இஞ்ச பாருங்க இந்த நாலும் ஒரேமாதிரி. இஞ்ச இன்னும் நாலு இருக்கின்றன. இஞ்ச இருக்கிற மூன்று பேரின் துவக்குகளும் இந்தத் திசையில நீட்டப்பட்டிருக்கு. இவையளை போல இந்தா இன்னொரு ஆள் இருக்கிறார். நாலும் நாலும் எட்டு. இன்னும் மூன்றையும் இன்னொன்றையும் சேர்த்தால் எல்லாமா பன்னிரண்டு” என்று கூறி முடித்தான்.

அவன் பொம்மைகளை குழுக் களாக்குவதை பார்த்துக்கொண்டே “ஓம், குழுக்களில இருக்கிற வீர்களை கூட்டி சரியான விடையை எடுக்கலாம்” என்றேன்.

“ஓமோம்” என்ற டிப்ஸ், பின்பு தட்டுத் தடுமாறி “என்னால் ....அதை... செய்ய..... முடியும்” என்றான்.

“ஓம் டிப்ஸ். உங்களால அது முடியும்” என்று நான் சொன்னேன்.

“இந்த இரண்டு பேரும் கொடிகளை வைச்சிருக்கினம்” வேறு இரண்டு உருவங் களைக் காட்டியபடி அவன் சொன்னான். அவைகள் எல்லாவற்றையுமே மணல் பெட்டியின் விளிம்பு நெடுக வரிசையாக நிறுத்தினான். இவை எல்லோரும் துவக்கு வைச்சிருக் கினம்” என்றவன், தொடர்ந்து, அவங்க தங்கட துவக்குகளால் சுடுகினம். ஆனால் அவங்கட முதுகுகள் இந்தப்பக்கம் பார்த்தபடி இருக்கு”என்றான்.

“அவை எல்லோரும் ஒரே திசையில சுடுகினம் எண்டா நீங்கள் சொல்லுறீங்கள்?” போர்வீரர்கள் பொம்மைகளின் பக்கம் பட்டும்படாமலும் சுட்டிக்காட்டிக்கொண்டே நான் கேட்டேன்.

டிப்ஸ் நிமிர்ந்து என்னைப் பார்த்தான். பின் குனிந்து போர்வீரர் பொம்மைகளைப் பார்த்தான். தன் தலையைத் தொங்கப் போட்டுக் கொண்டான். “அவை உங்களுக்குச் சுடயில்ல” என்று கரகரப்பான குரலில் கூறினான்.

“எனக்கு விளங்குது. அவை எனக்குச் சுடயில்ல” என்றேன் நான்.

“ஓமோம்” என்றான் அவன்.

மணலுக்கூடாக கைகளால் வாரி இழுத்தவன் மேலும் சில பொம்மை வீரர்களை கண்டெடுத்தான். அவற்றை ஒவ்வொன்றாக எடுத்து ஒரு வரிசையில் நிறுத்தினான். சப்பாத்துகளை அணிந்திருந்த கால்களை மணலுக்குள் நெளித்து அசைத்தான்.

திடீரென “சப்பாத்துகளைக் கழட்டுங்கோ” என்றான். அவனே சப்பாத்து நூல்களை அவிழ்த்து விட்டு சப்பாத்துகளை கழற்றி விட்டான். அதன் பின் பொம்மை வீரர்களை மீள ஒழுங்கு படுத்தினான்.


“இந்தா....எல்லாரும் ஒரே வரிசையில நிற்கினம். எல்லாரும் ஒன்றா நிற்கினம்.”

மூன்று பொம்மை வீரர்களை தேர்ந்தெடுத்த அவன் ஒரு வரிசையில் அவற்றை நிறுத்தினான். அவதானமாகவும் திட்டமிட்ட முறையிலும் அவற்றை ஒவ்வொன்றாக மணலுக்குள் தள்ளினான். மூன்றாவது பொம்மை அவனுக்குத் திருப்தியான அளவுக்கு உள்ளே போகவில்லை. அதனை வெளியே இழுத்தெடுத்த அவன், மீண்டும் அதை மணலுக்குள நன்றாகத் தள்ளிவிட்டு ஒரு கைபிடி மணலை எடுத்து அப்பொம்மைகளை உள்ளே தள்ளிய இடத்தின் மேல் சொரிந்தான்.

“ஆள் மறைஞ்சிட்டார்” அறிவித்தான் டிப்ஸ்.

“ஆளை ஒருமாதிரி இல்லாமல் செய்து போட்டீங்கள்.”

“ஓமோம்” என்றவன் சவள் ஒன்றை எடுத்து வாளி ஒன்றினுள் மண்ணை நிரப்பி, பொம்மைகளைப் புதைத்த இடத்தின் மேல் சொரிந்தான்.



வாகனங்கள் நிறுத்துமிடத்துக்கு அப்பால் இருந்த ஆலயத்தின் மணிகள் ஒலிக்கத் தொடங்கின. பின்னர் நேரத்தை குறிக் கும் ஒலிகள் ஒவ்வொன்றாக ஒலிக்கத்தொடங்கின.

“அங்க கேளுங்க” என்றவன் தொடர்ந்து, “ஒன்று.... இரண்டு....மூன்று.... நாலு....அப்ப நாலு மணியாச்சு” என்றான்.

“ஓம். நாலு மணிதான் நீங்கள் வீட்டுக்குப் போற நேரம் வரப்போகுது.” என்றேன் நான்.

நான் கூறியதை அவன் கவனத்தில் எடுக்கவில்லை. மணல் நிறைந்த பெட்டியை விட்டுக் கீழே இறங்கிய அவன் மேசையை நோக்கி சென்றான். விரல்களால் தொட்டு பூசும் தீந்தைகளை கொண்ட சாடிகளை அவன் பார்த்தான் “இது என்ன?” என்று கேட்டான்.

“அது விரலில் தொட்டு பூசும் தீந்தை” என்றேன். “விரலில் தொட்டு பூசுறதா? எப்பிடி?” அந்த தீந்தையை எப்படிப் பயன்படுத்துவது என்று காட்டிக் கொடுத்தேன்.

(தொடரும்....)

---

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

“ஒன்னாத் தெவ்வர் முன்னின்று
விலங்கி ஒளிரேந்து மருப்பிற் களி
றெறிந்து வீழ்ந்ததெனக் கல்லிலே
பரவி நல்லது நெல்லுக்குத்துப்
புரவுங் கடவுளுமிலவே”

இவ்வீரவணக்கம் திடீரெனத் தோன்றியது அன்று எனக் கைலாசபதி இன்றைக்கு ஏறக்குறைய 40 ஆண்டுகளுக்கு முன்பே எழுதியுள்ளார். அவருடைய ‘வீரவணக்கம்’ என்னும் கட்டுரை இதனைத் தெளிவாக விளக்கியுள்ளது. சடங்கு தொடர்பானது. நினைவுச் சின்னம் தொடர்பானது என இருநிலைப்பட்ட இவ்வணக்க முறையைச் சங்க இலக்கியத் தரவு கொண்டே நிறுவியுள்ளார். தொல்காப்பியர் இவ்வணக்க முறைக்கு இலக்கணம் வகுத்திருப்பதையும் சுட்டிக்காட்டி அவர் காலப் போக்கில் ஏற்பட்ட மாற்றங்களையும் குறிப்பிட்டுள்ளார்.

“பழந்தமிழரிடையே நிலவிய நடுகல் வழிபாடானது காலப்போக்கில் சமுதாய வளர்ச்சியையொட்டிச் சில மாற்றங்களைப் பெற்றது. சமுதாயத்திலே உயர்ந்தோர் தாழ்ந்தோர் மேலோர் கீழோர் பெரியவர் சிறியவர் முதலாய பாகுபாடுகள் தோன்றி வளர்ந்ததைத் தொடர்ந்து மனிதரது நிலைமையைப் பிரதிபலிப்பது போலத் தெய்வங்களும் பெருந்தெய்வம் சிறுதெய்வம் எனப் பகுக்கப்பட்டன.”

என்ற அவருடைய கூற்று சங்க இலக்கிய புலமையால் பெற்ற தெளிவான கருத்தாகும். தமிழர் வழிபாட்டு நடைமுறைகளில் வீர வணக்கம் பெற்றிருந்த சிறப்பான இடத்தை இன்று உணர்ந்து செயற்படுவதற்கு இது பெரிதும் உதவும். இவ்வணக்கமுறை போரின் அழிவை மட்டுமின்றி ஆக்கத்தையும் காட்டுவதாக அமைந்துள்ளது. தலையாய வீரரே உயர்ந்தோர் உலகம் வெல்லும் தகுதியுடையராய் கருதப்பட்டிருப்பதை கைலாசபதி துணிந்து கூறினார். மானுடம் பற்றிய சங்கப் புலவர் கோட்பாட்டை நன்கு கற்றுணர்ந்து இக்கருத்தினை வெளியிட்டார். அவர் கருத்தை அகழ்வாய்வாளர்களும் ஏற்றுள்ளனர்.

### *காலசங்கமும் கைலாசபதியும்.*

இன்று கைலாசபதியின் ஒப்பியல் இரு நிலைகளில் மீண்டும் இயங்குகிறது. தமிழ் மொழியின் தொன்மை இலக்கியங்களைப் பிறமொழிகளின் இலக்கியங்களுடன் ஒப்பிட்டு ஆய்வு செய்யும் முயற்சியில் சங்க இலக்கியங்களையும் ஜப்பானிய தொன்மைக் கவிதைகளையும் ஒப்பிட்டு ஆய்வு நடைபெற்று வருகிறது. சங்கஅகப் பாடல்களையும் ஜப்பானியக் காதற் பாடல்களையும் நான் ஒப்பிட்டு ஆய்வு செய்ய வழிகாட்டியாய் விளங்கியவர் கைலாசபதியே. 1986 ஆம் ஆண்டு மலேசியாவில் நடைபெற்ற உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் ‘தமிழர்-ஜப்பானியர் அகப்பொருள் மரபு என்ற கட்டுரை மூலமாக எனது ஆய்வின் முடிவைச் சமர்ப்பித்திருந்தேன். தொடர்ந்து அதனைப் பற்றி ‘மன்யோசுக் காதற் காட்சிகள்’ என்னும் நூல் வடிவிலும் ஜப்பானிய நிறுவனத்தின் பிரசுரநிதி பெற்று கொழும்பு தமிழ்ச்சங்கத்தால் வெளியிடும் வாய்ப்புக் கிட்டியது. கைலாசபதி சங்க இலக்கியப் புறப் பொருளை அன்று ஒப்பீட்டுப் பொருளாகக் கொண்டு வழிகாட்ட இன்று அகப்பொருள் ஒப்பீட்டாய்வு ஜப்பானிய மொழியுடன் செய்யப்பட்டமை ஒரு ஆய்வுகால சங்கம நிகழ்வேயாகும். தமிழ்மொழி இலக்கியத்தின் பேராற்றலும், காலம் கடந்த வழிகாட்டல் நெறியும், கைலாசபதியின் முன்நோக்கால் உணரப்பட்டு ஒப்பீட்டாய்வு என செயற்பாடாகின. அதேபோல பிற மொழிகளின் இலக்கியங்களை ஏனையோரும் கற்கின்ற வாய்ப்பு இன்று ஏற்பட்டுள்ளது. குறிப்பாக புலம் பெயர்ந்து உலகெங்கும் பரந்து வாழும் தமிழர்களின் பிறமொழி ஆற்றலால் சங்க இலக்கியங்கள் அந்தந்த நாட்டு மொழிகளிலே அறிமுகம் செய்யப் படக்கூடிய பெருவாய்ப்புக் கிட்டியுள்ளது. இது அறிமுகநிலை கடந்து பிறமொழியாளரே ஒப்பீட்டாய்வு செய்ய முன்வரத்துாண்டுவதாக வளரும். இத்தகைய சென்றகாலமும் வருங்காலமும் இணைகின்ற நிகழ்கால சங்கமத்தில் வாழும் நாம் செய்ய வேண்டிய தமிழ்ப்பணியும் இதுவே.

அடுத்தது கைலாசபதி தெளிவு படுத்திச் சென்ற வீரயுகம். புறநானூற்றுப் பாடல்களூடே அவர் கண்ட வாழ்வியல் வீரயுகத்தை வெளிப்படுத்தியது. சங்கச் செய்யுள்களைப் படிப்பவர்கள் வீரயுகத்தைக் கற்பனையில் கண்டனர். உரையாசிரியர் தரும் காலம் கடந்த விளக்கத்தால் வீரயுகத்தை நினைவில் கொணர முயன்றனர். இன்று ஈழத் தமிழர் வாழ்வியலும் பட்டறிவு நிலைகளும் ஒரு கால சங்கமத்தை உணர்த்தியுள்ளன. அக்காலப் போர்க் காட்சிகளையும் விளைவுகளையும் தமது பாட்டுத் திறத்தாலே புலவர்கள் துன்பக்குரல்களையும் காட்சிகளையும் இன்பச் சொல்லோவியங்களாக்கினர் என்று கைலாசபதி கூறுகிறார். அதே முயற்சி ஈழத்திலும் நடைபெற்றுள்ளது. கடந்த 20 ஆண்டுகளாக நடந்த போராட்டத்தின் விளைவுகளைப்பற்றிப் பல கவிதைகள் பாடப்பட்டுள்ளன. அவற்றின் தொகுப்புகள் புதிய புறநானூற்றுத் தொகுப்பு ஒன்றைச் செய்ய உதவும். 10 ஆண்டுகளுக்கு முன்னர் வெளிவந்த ‘ நினைவழியா நாட்கள்’ என்ற தொகுப்பு புதுவை இரத்தின துரையின் கவிதைகளை உள்ளடக்கி நிற்கிறது. கைலாசபதி காட்டிய தமிழர் வழிபட்ட வீரவணக்கம் இன்று காலசங்கமமாகிவிட்டது. பழையதும் புதியதுமாய் இரு புறநானூற்றுக் கவிதைகளை இனம் காட்டுகிறது. மீண்டும் பாணர்கள், கூத்தர்கள், புலவர்கள் எனப் போரின் அழிவு பற்றிப் பாடினர். அதை நேரில் காணும் இன்றைய தமிழ் இளந்தலைமுறை புறநானூற்று வாழ்வியலை மனதிலே பதியவைத்து வாழ்கிறது. அழிவுகளையும் இழப்புக்களையும் கண்டு நலிந்துவிடாமல் அவற்றை ஆக்கும் பணியில் முனைந்து செயற்பட வரலாற்றை உள்ளபடி எழுத வழி காட்டியவர் கைலாசபதி. அவருடைய தமிழ் ஆய்வு நெறி உலக முழுமைக்கும் ஏற்றதாக அமைந்தது. உலக அரங்கிலே தமிழர் வீரத்தைப் பலர் அறியவைத்தது. அவர் மறைந்து 22 ஆண்டுகள் கடந்துவிட்டன. தமிழறிஞர் என்ற சிறப்பு நிலையில் இளந் தலைமுறையினருக்கு அவர் அறிமுகமாக இக்கால சங்கமம் பெருவாய்ப்பாக உள்ளது எனலாம். எனவே சங்க இலக்கியம் பற்றிய கற்கை நெறியைத் தமிழர்களிடையே மட்டுமன்றி உலக மொழியாளர்களும் அறியப் பணி செய்த கைலாசபதி காலந்தோறும் நினைவுகூரப்பட வேண்டியவர். பல் கலைக்கழகங்கள் பல. அவருடைய முன்நோக்கைத் தெளிவாக விளங்கித் தமது தமிழியல் கற்கை நெறிகளிலே தனியிடம் கொடுத்துள்ளனர். சங்க இலக்கியத்தை நூல் வடிவாக்கப் பதிப்புப் பணி செய்த சி.வை.தாவின் பணி கைலாசபதியைப் பெரிதும் கவர்ந்திருந்தது. இதனால் ஈழத்து இலக்கிய முயற்சிகளிலே பல ஆய்வுகள் நடைபெற வழிகாட்டியாய் இருந்தார். ஈழத்து இலக்கியம் பற்றிய ஆய்வு முயற்சிகள் பல புதிய கருத்துக்களை வெளிக்கொணர்ந்துள்ளன. அவை தனியாகப் பேசப்படவேண்டியவை. ஈழத்து தமிழறிஞர் வரிசையில் கைலாசபதி ஒருகால சங்கமம் என்பது குறிப்பிடத்தக்கது.

**பாவலன் பதில்கள்** என்ற வாசகர்களின் கேள்விகளுக்கான எங்களின் பதில்களை உங்களுக்குத்தரும் நோக்குடன் இந்தப்பகுதிஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதற்கான கேள்விகளை கீழ் காணும் முகவரிக்கு நீங்கள் அனுப்பி வைக்கலாம்.

*பாவலன் பதில்கள்,*
*வெள்ளிநாதம்,*
*யாழ்சாலை,கிளிநொச்சி.*

*பாவலா!*
*எமது இனத்தின் சீர் கேடு தொடர்ந்தும் நடக்கிறதே இதற்குக்காரணம் என்ன?*
*இ.விமலாம்பிகை,*
*விசுவமடு.*

நாம்தான் காரணம் அதனை அனுமதிக்கின்ற படியால்.

*பாவலா!*
*தள்ளாடும் வயதிலும் பதவியாசையில் இனத்துரோகம் செய்யும் சங்கரியாருக்கு தங்களின் அறிவுரை?*
*அ.யசீதா,*
*சரசாலைதெற்கு.*

சங்கரியார் இப்போ வெறும் ஒலி பெருக்கிதான். ஒலி வாங்கிகள் ஹெல உறுமயவிடமும் கூட்டணியிடமுமே உள்ளன.

*பாவலன் அவர்களே!*
*விடுதலைப் போராட்டத்தை புறக்கணித்து இனவாதம் கதைக்கும் ஹெல உறுமய பிக்குமார் பற்றி என்ன நினைக்கிறீர்கள்.*
*கெ.திவ்வியன்,*
*புதுக்குடியிருப்பு.*

அப்பாவி சிங்கள இளைஞர்களை பழிக்கடா வாக்கும் பதவிப் பதர்கள்.

*பாவலா!*
*சமாதானம் சமாதானம் என்கிறார்களே உண்மையான சமாதானம் மலருமா?*
*பூ.சுகன்யா,*
*திருநெல்வேலி*

பருந்துகளின் கூட்டுக்குள் வெண்புறா உயிர் வாழமுடியாது.

*வணக்கம் பாவலா!*
*வன்னியில் அரிசியின் விலையேற்றம் பற்றி கவனிப்பார் இல்லையா?*
*தர்மினி,*
*விசுவமடு.*

வரட்சி அழிவு வெள்ள அழிவு என தொடர்ந்தால் யார் கவனித்தும் பயனில்லை.

*பாவலா!*
*இந்தியா ஈழத்தமிழரின் துயர்துடைக்க முன்வருமா?*

துயர் துடைக்காவிட்டாலும் பராவாயில்லை துயர் கொடுக்காமல் இருந்தால் போதும்.

*பாவலா!*
*எமது பெண்களே-பெண்களுக்கு எதிராக செயற்படுவது பற்றி?*
*நளினி,*
*மாங்குளம்*

தாயும் பெண்ணே, தாரமும் பெண்ணே, கேள்வி கேட்ட நீங்களும் பெண்ணே, திருந்தவேண்டியதும் பெண்ணே.

*வணக்கம் பாவலா!*
*தங்களை ஆச்சரியப்படுத்திய சினிமாப்படங்கள் எவை?*
*கோமதி,*
*முள்ளியவளை*

.ஐயோ...ஐயய்யய்.யோ.....

*பாவலா!*
*இன்றைய பெண்கள் உடையில் காட்டும் சிக்கனம் பற்றி கவிதை ஒன்று?*
*தனுசன்,*
*ஆனைவிழுந்தான்.*


நாகரிகத்தால், ஆண்டியானான் புடவைக்கடை முதலாளி.

*பாவலா!*
*வாழ்க்கையில் முன்னேற என்ன செய்யவேண்டும்.*
*சிவா,*
*பருத்தித்துறை.*

உழைக்கவேண்டும்.

*.அன்பின் பாவலா!*
*உக்ரைன் தேர்தல் முறையோடு முடிவுக்கு வந்துள்ளது நியாயத்திற்கு கிடைத்த வெற்றியா?*

அது தெரியாது. ஆனால் ஐரோப்பிய யூனியனுக்கு கிடைத்த வெற்றி.




*பாவலா!*
*இடைக்கால நிர்வாக சபையையும் இறுதித்தீர்வையும் ஒரே மேசையில் பேசவேண்டும் சந்திரிகா கூறுவதைப் பற்றி?*
*இசையரசன்,*
*திருநகர்.*

திருமணமும் பிரசவமும் ஒரே நாளில் நடக்கவேண்டுமென கூறுவது போன்றது.

○ ○ ○




*மீன் என்ன விலையெணை-*

*“கும்பிளா எடுங்கோ போட்டுத்தரலாம்” போட்டுத்தான் தருவியள், விலையைச் சொல்லன்- காக்கிலோ அம்பது ரூபா-கரைவலை இஞ்சார் கல்லுப் போல கிடக்கு- எடு-*

*ம்...விடு தம்பி யப்பான் என்னவிலை...*


*இரணைமடு மீன் கிலோ அம்பது ச்சா- யப்பான் வாங்கப் போறியோவே-*

*ஏன் வாங்கினா என்ன-யப்பான் காறன்ர எல்லாம் நல்லம் மீன் கூடாதே- நன்நீர் மீன்வளப் பெண்டு உதுக்குத்தான் அரசாங்கம் செலவழிக்குது. இல்ல.... குளத்துமீன் வாங்கிறது.... மதிப்பில்ல. என்ன? என்ன? மதிப்பப்பற்றி நீ கதைக்கிறாய்- இஞ்சயுள்ள வேலை செய்யமாட்டாய், சவூதியிலபோய் சட்டி கழுவின நீ- எனக்கு என்ர மண்ணில உள்ளதுதான் தங்கம். யப்பான் மீனின்ர ருசிய வவுனியாவில உத்தியோகம் பாக்கிற சனங்களட்ட கேட்டுப்பார். மீன் எண்டா அதுதான் எண்ணுவாங்கள்- அப்பிடிருசி- இல்ல...நானும் சாப்பிட்டுப்பாத்திருக்கிறன்தான். இப்ப அதுகும் கிடைக்கிறதில்லை.*

*எண்டைக்குப் பாதை திறந்தாங்களோ அண்டைக்கே ஐசு வாகனங்கள் குளத்து மீனையும் கொண்டு போகுதுகள்- அதால தான் மீனிப்ப ஆனைவிலை குதிரைவிலை.*

●●●

## படத்திற்கு மெருகூட்டுங்கள்-98



நான்கு வரிகளுக்குள் உங்கள் உள்ளத்தில் தோன்றும் உணர்வுகளை கீழ் உள்ள வரிகளில் எழுதி அனுப்புங்கள். சிறந்த வரிகளுக்கு நினைவுப்பரிசு வழங்கப்படும்.

**படத்திற்கு மெருகூட்டுங்கள்-98**

.................................................................
.................................................................
.................................................................
.................................................................

பெயர் : .................................................
முகவரி : .................................................
.................................................

**ஈழநாதம்**
யாழ்சாலை,
கிளிநொச்சி.

## படத்திற்கு மெருகூட்டுங்கள் -97



**சு.பால்ராஜ்,**
**றோ.க.பாடசாலை,**
**புதுக்குடியிருப்பு.**

### பரிசுக்குரிய வரிகள்

*மக்கள் புரட்சி வெடிக்க தமிழீழம் மலரும்*
*என்று கனவு கண்ட திலீபன் வழியில்*
*மக்கள் புரட்சிக்கு தயாராகிவிட்டனர்.*
*இனி பாதுகாப்பு வலயங்கள் பற்றி எரியும்.*

### பாராட்டுக்குரிய வரிகள்

*தாய் நிலம் மீதொரு படைவரின்*
*தாய் மண் காக்க உயிரையும் கொடுப்போம்.*
*மண்காத்த மாவீரர் நிகழ்வுக்கு தடையெனில்*
*தடுத்தவர் உயிரையும் எடுப்போம்.*

சி.ஜெயபாபு,
கிளிநொச்சி

*பொறுத்து நாம் இருந்தால் புண்ணியவான்கள்*
*மறுக்கொண்டு நாம் எழுந்தால் புண்படுவார்கள்*
*நம் தேசம் காக்க இனி நாம் தயங்கோம்*
*உம் தேசம் போக இனி நீவீர் தயங்காதீர்*

M.குமரன்,
உடையார்கட்டு.

*மான மறவர்களாம் மாவீரர்களை*
*மான சீகமாய் வணங்கிடுவோம் நாம்*
*மானமற்ற பகையே தடுக்க நீ யார் -தன்*
*மான தலைவனின் தம்பிகள் நாம்.*

பா.சயந்தினி,
வட்டக்கச்சி.

*அன்று குட்டக்குட்ட குனிந்தோமடா - உந்தன்*
*கொட்டம் அடக்க துணிந்தோமடா- இன்று*
*உலக சட்டம் ஒன்றே தடுக்குதடா -இல்லை*
*சாவரினும் தயங்கோமடா.*

ம.கோபு,
முள்ளியவளை.

*அரச தரப்பின் அடக்கு முறைகளை*
*எதிர்க்கத் துணிந்திட்ட இளைஞர் கூட்டம்*
*தாயகப் பயணத்தை எவர் தடுத்தாலும்*
*தாழோமென்று நடுவர்க்கு உணர்த்துகிறாரோ...?*

ச.வினோதரன்,
மல்லாவி.

இந்தப் போட்டிக்கான நினைவுப்பரிசினை **அருச்சுனா புகைப்படக் கலையகம்** வழங்குகின்றது.
கிளிநொச்சி. புதுக்குடியிருப்பு

வடகிழக்கு மனித உரிமைகள் செயலகம் (NESOHR) தனது முதலாவது சர்வதேச மனித உரிமை நாளை 10-12-2004 இன்று காலை 9.30 மணிக்கு கிளிநொச்சி பண்பாட்டு மண்டபத்தில் கொண்டாட இருக்கின்றது.

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

வடகிழக்கு மனித உரிமைசெயலகம், கிளிநொச்சி.

(சி.10849)

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி

அமரர்

## திரு. சுப்பையா சாந்தலிங்கம்

திதி
2004.12.11



வையகம் தன்னில் வாழ்வாங்கு வாழ்ந்து
வழிகாட்டிய எமது அன்புத் தெய்வமே!
இரண்டாண் டென்ன இரண்டாயிரம்
ஆண்டானாலும்
என்றென்றும் உமது நினைவுகள்
மாறாது மறையாது!
உங்கள் ஆத்மா சாந்திக்காக எல்லாம்
வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்.
குடும்பத்தினர்.

மண்ணுலகில்
1940.12.18

விண்ணுலகில்
2002.12.03

அமரர்
திரு. சுப்பையா சாந்தலிங்கம்
(ஸ்ரீ பத்மா ரேடர்ஸ்
அருள்மணி பல்பொருள் வாணிப உரிமையாளர்)

யாழ்சாலை,
கிளிநொச்சி.

கணேசபுரம்,
கிளிநொச்சி.


உங்கள் இன்றைய தெரிவுக்கு...



குமரகுரு
புடைவை
அழகுப்பொருள் வாணிபம்

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட அதி நவீன ஆடைகளை
உள்ளடக்கிய திருமணம் மற்றும் மங்கள நிகழ்வுகளுக்கான காஞ்சிபுரம் சாறிகள்
பட்டுசாறிகள் பட்டுவேட்டிகள் மற்றும் சல்வார் சோலிகிற் சூட் கவுண்
சேட் சூட்டிங் மற்றும் பெரியோர்கள் சிறியோர்களுக்கான ஆடைகளை மொத்தமாகவும்
சில்லறையாகவும் பெற்றுக்கொள்ள உடன் நாடுங்கள்

குமரகுரு புடைவை அழகுப்பொருள் வாணிபம்
யாழ்சாலை, கிளிநொச்சி

KUMARAKURU
Textile & Fancy House
Yarl Road, Kilinochchi.

SM Graphics (சி-1072)

EXPOAIR
your friend in the skies

எக்ஸ்போ எயார்
வான்வெளியில் உங்கள் நண்பன்



யாழ் - கொழும்பு
விமானப்பயணத்திற்கு அழையுங்கள்.

யாழ்ப்பாணத்தில்:021-2223891/6297,0772348888/2349999,
கொழும்பில்:0112372952/953, வெள்ளவத்தையில்: 0112360290/291.
e-mail- jaffna@expoavi.com e-mail- reservations@expoavi.com



இலங்கையில் முன்னணி வகிக்கும் நம்பத்தகுந்த உள்ளூர் விமான சேவை



இப் பத்திரிகை கிளிநொச்சி ஈழநாதம் பணிமனையில் 2004ம் ஆண்டு டிசம்பர் மாதம் 10 ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.